வஞ்சகமும்

மன்றாவும்

இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் அன்பின் வாழ்த்துக்கள்

ஏறக்குறைய 7 ஆண்டுகளாக பல இடங்களிலிருந்து சேகரித்த சுமார் 200 ஆண்டுகளுக்கு முன்பு வரை அச்சடிக்கப்பட்ட, ஆரோக்கிய உபதேசங்கள் அடங்கிய, கிறிஸ்தவ ஆவிக்குரிய புத்தகங்களை, பல மணி நேரம் கொடுத்து, பல இலட்சங்கள் செலவு செய்து மின் நூல்களாக *(E-Books)* இலவசமாக (மத்தேயு 10:8) உங்கள் கரங்களில் கொடுப்பதற்கு, அற்பரும் நீசருமான எங்களை பயன்படுத்தின உன்னத தேவனுக்கே சகல கனமும் மகிமையும் துதியும் உரித்தாவதாக. இதைப் போன்ற இன்னும் ஆயிரக்கணக்கான புத்தகங்களை தரவிறக்கம் *(Download)* செய்ய எங்களுடைய இணையதளத்தை சொடுக்கவும்/பார்க்கவும்: *www.WordOfGod.in*

95 சதவீத புத்தகங்கள் அச்சில் இல்லாதவைகளும், காப்புரிமை முடிந்தவைகளுமே. மீதமுள்ள புத்தகங்கள், நல்ல உபதேசங்களை கொண்டிருப்பதால், முடிந்தவரை ஆசிரியரின் உரிமையோடு மின்-நூலாக, இலவசமாக வெளியிடுகிறோம். ஒருவேளை உங்களுடைய புத்தகம் இப்படி இலவசமாக மின்-நூல் *(E-Book)* வடிவில் வரக்கூடாது என்று நினைத்தீர்களானால், தயவு செய்து எங்களை மன்னித்துக்கொள்ளுங்கள். எங்களுடைய *WhatsApp* எண்ணிற்கோ, மின் அஞ்சலிலோ *(Email)* எங்களுக்கு தெரியப்படுத்துங்கள். உடனடியாக எங்களுடைய இணைய-தளத்திலிருந்து எடுத்துவிடுகிறோம்.

WhatsApp/SMS: +91 90 190 490 70 / +91 7676 50 5599

Email: wordofgod@wordofgod.in

Wishing you in the mighty name of Jesus Christ

We had collected several thousands of old Tamil Spiritual Books which are rich in Sound Doctrines across various places of India for 7 years. Some of them are more than 200 years old books. We have spent millions of hours and money in scanning them and coverting them to E-Books. The work is still in progress. These E-books are published completely free of cost (Matt 10:8) forever. We give all the praise and glory to God for giving this wonderful opportunity to server Him. You can download thousands of similar Tamil Christian E-books from our website www.WordOfGod.in completely free of cost at any time.

95% of these E-Books are not being printed now and their copyrights are already expired. The remaining books are sent as E-Books mostly with the permission from the Authors. If you feel that your books should not be published as E-Book freely, kindly execuse and forgive us. Please let us know the book details by WhatsApp or Email we will remove them from our website.

WhatsApp/SMS: +91 90 190 490 70 / +91 7676 50 5599

Email: wordofgod@wordofgod.in

கர்த்தருக்கு ஸ்தோத்திரம்

வனாந்தரமும்

G.B. Sathyanesan, B.A.

மன்னாவும்

1980

[ஐந்தாவது வெளியீடு]

C. P. M.
Mahabupalayam,
MADURAI.

Phone : 24892 Pin : 625010

விலை ரூ. 1—25

முதற் பதிப்பு — 1976
இரண்டாம் பதிப்பு—1980

பொருளடக்கம்

பாகம்—1

வனாந்தரம்

அதிகாரம்	பொருள்	பக்கம்
I	வனாந்தரத்தின் தன்மைகள்	1—8
II	ஏன் இஸ்ரவேலருக்கு 40 வருட வனாந்தரம்?	8—32

பாகம் —2

மன்னா

அதிகாரம்	பொருள்	பக்கம்
I	மன்னாவைப் பெற்றுக் கொள்வது	1—8
II	மன்னா — இயேசு	8—11
III	மன்னாவின் தன்மைகள்	11—92
IV	மன்னா உணவாவது எப்படி?	92—99

இப்புத்தகத்தை எக்காரணத்தினாலும் ஒரு ரூபாய் இருபத்தைந்து பைசாவுக்கும் (ரூ. 1—25) அதிகமாக விற்கவோ வாங்கவோ கூடாது.

முகவுரை

இச்சிறு நூலை எழுத ஆவியானவரால் ஏவப் பட்டேன். அன்றியும் ஒருவருக்குத் தேவன் இதைக் குறித்துக் கொடுத்த தரிசனத்தின் வெளிப் படுத்தல், இதை எழுதுவது தேவசித்தம் என்று நிர்ணயிக்க ஏதுவாக்கிற்று ஆனால் எழுத ஆரம் பித்தபோது போதிய எண்ணங்கள் இருக்கவில்லை. தேவ சித்தத்தின்படி ஆரம்பித்தபடியால் இதில் அடங்கியிருக்கும் சகல எண்ணங்களையும் தேவன் படிப்படியாகக் கொடுத்தார். அவருக்கே ஸ்தோத் திரம். ஆனால் பிசாசு இதை எழுதி முடிக்காதிருக் கும் பொருட்டு குறுக்கிட்டான்.

இதில் ஒரு பகுதியை மாத்திரம் அச்சிடக் கொடுத்த சில நாட்களுக்குப் பின் நான் வால் பாறை மலையிலுள்ள விசுவாச வீட்டில் 26-10-75-ல், கூட்டம் நடத்தி திரும்பினேன். மலைப்பிர தேசத்தை விட்டுக் கீழே வந்தபின் காரின் சக்க ரங்களைத் திருப்பும் கம்பி உடைய நேர்ந்தது. ஆகவே கார் சாலையை விட்டுப் பக்கத்தில் தண் ணீர் தேங்கி நின்ற ஓர் குழிக்குள் இறங்கி, ஓர் வயலின் ஓரத்தில் ஏறி நின்றது. அது அங்கு எவ்விதம் வந்து நின்றது என்பது புத்திக்கெட் டாததாகும். இவ்விபத்து, மலையில் நடந்திருக்குமா யின் எங்களுக்கு என்ன சம்பவித்திருக்கும் என் பதை யோசிக்கும்போதே திகில் உண்டாகிறது. தண்ணீர் தேங்கிநின்ற குழியில் கார் கவிழ்ந்திருந் தால், சிலராயினும் மரிக்கவும், மற்றும் பல கொடிய காயங்கள் ஏற்படவும் ஏதுவாகி இருந்

திருக்கும். ஆனால் யாருக்கும் எவ்வித காயமும் இல்லை. பெரும் அதிர்ச்சியடைந்தோம். என் காலில் ஏறக்குறைய அரை அங்குலம் தோல் உரிந்ததேயன்றி, சதையிலோ, எலும்பிலோ காயம் அடையவில்லை. திரண்ட ஜனங்கள், ''காருக்குள் இருந்தவர்கள் எங்கே''? என்றும், ''என்ன சம்பவித்தது?'' என்றும் விசாரித்து, நாங்கள் பத்திரமாய் நின்றுகொண்டிருப்பதைக் கண்டு, பெரும் வியப்படைந்தனர். கர்த்தர் எங்களை எவ்விதம் பாதுகாத்தார் என்பதை நாவினால் வர்ணிக்கவோ, எழுத்தில் எழுதி விளங்கப்பண்ணவோ முடியாது. ஆனால் கர்த்தர் தம்முடைய தூதர்களை அனுப்பிப் பாதுகாத்தார். சங். 34:7-ல் கூறியிருக்கிறபடி, ''கர்த்தருடைய தூதன் அவருக்குப் பயந்தவர்களைச் சூழப் பாளயமிறங்கி அவர்களை விடுவிக்கிறார்'' என்னும் வாக்குத்தத்தத்தை நிறைவேற்றுகிறார் என்பதை ஆணித்தரமாய் நிரூபிக்கிறோம்.

இவ்விபத்தில் எனக்குக் கூடுதலாய் ஏதாகிலும் சம்பவித்திருக்குமாயின் இச்சிறுநூலை நான் எண்ணினதுபோல் வெளியிட்டிருக்க முடியாது. பிசாசின் ஆலோசனைகளை அறிந்திருந்த சர்வ வல்லவர் தம்முடைய வாக்குத்தத்தத்தின்படி என்னைப் பாதுகாத்து, இச்சிறுநூலை வெளியிட உதவி செய்தபடியால் அவருக்கே கோடா கோடி ஸ்தோத்திரம். கர்த்தருடைய சத்தத்திற்கு கீழ்ப்படிந்து அவர் சித்தப்படி இதை வெளியிட்டிருப்பதால் இதை கர்த்தர் பலருக்கு நித்திய ஆசீர்வாதமாக்குவார் என்று நம்பி, அவர் மகிமைக்காக அவர் கரத்தில் ஒப்படைக்கிறேன்.

ஆக்கியோன்.

பாகம் 1

வனாந்தரம்

அதிகாரம் 1

வனாந்தரத்தின் தன்மைகள்

'வனாந்தரம்' என்ற வார்த்தையைக் குறித்து சாதாரணமாக, கர்த்தருடைய பிள்ளைகள் பயப்படுகின்றனர். இதற்குக் காரணம் என்னவென்றால், வனாந்தரம் பாழானதும், ஊளையிடுதல் உள்ளதும், ஒன்றுமில்லாமல் வெறுமையுமான இடம் என்று உபா. 32:10 இல் வாசிக்கிறோம். ஒன்றுமில்லாத பாழான இடமாகிய வனாந்தரத்திற்கு சூழ்நிலையினிமித்தம் மனதைத் தேற்றிக்கொண்டு போனாலும், அந்நேரத்தில் ஊளையிடும் மிருகங்களின் சத்தம் கேட்டு, மனத்தேறுதலை இழந்து, பயப்பட வேண்டியதாகிவிடுமே. உபா. 8:15 ல் வனாந்தரத்தில் கொள்ளிவாய்ச் சர்ப்பங்களும், தேள்களும் இருக்கும் என்றும், அது தண்ணீரில்லாத இடமென்றும் காண்கிறோம். ஒருவேளை பயத்தை மேற்கொண்டு, வனாந்தரத்திற்குப் போக எண்ணினாலும், மோசே மேற்கண்ட வசனத்தில் கூறியுள்ள வார்த்தைகளினிமித்தம் கால்கள் பயங்கரமான வனாந்தரத்திற்கு (ஏசா. 21:1) நேராகச் செல்ல மறுத்துவிடுமே. மேலும் எரே 2:2ல், வனாந்தரத்தில் விதைப்பு இல்லை என்று கூறப்பட்டிருக்கிறது. . விதைப்பு இல்லையென்றால் அறுப்பும் இல்லையே. அறுப்பு இல்லையென்றால் புசிக்க ஒன்றும் கிடையாதே. மறுபடியும் 5ம் வசனத்

தில் எரேமியா, "அவாந்தரவெளியும், பள்ளங்களு முள்ள தேசமும், வறட்சியும், மரண இருளுமுள்ள தேசமும், ஒருவனும் கடவாமலும் ஒரு மனுஷனும் குடியிராமலும் இருக்கிற தேசமுமான வனாந்தரத்தில்" என்றுகூறி வனாந்தரத்தை ஒருவனும் விரும்பாது, வெறுக்கக் கூடிய மனநிலையை உண்டாக்கி விடுகிறார். விதைப்பும் அறுப்பும் இல்லாமலிருந்தாலும், வேறு யாராயினும் குடியிருந்திருந்தால் அவர்களைப் பார்த்துப் பழகி, அப்படியாயினும் சந்தோஷமாயிருந்திருக்கலாமே! சந்தோஷம் வேண்டாம் என்று தியாகஞ் செய்தாலும், பள்ளங்களும் மரண இருளும் நம் மனதை ஸ்தம்பிக்கப்பண்ணி, வனாந்தர ஜீவியத்தை சிந்திக்கக் கூட இடங்கொடாததாக்கி விடுமே.

மனிதன் இவ்வளவு கடும் பகையாகப் பகைக்கும் வனாந்தரத்திற்குத் தமது பிள்ளைகளை வழிநடத்தும்படி தேவன் நிர்ணயித்திருக்கிறார். ஓசியா 2:14 இல், "அவளை வனாந்தரத்தில் அழைத்துக் கொண்டு போய்" என்கிறார். தகப்பன் தன் பிள்ளைக்குத் தீங்கு செய்ய மாட்டானே! அப்படியானால் நம் பரம பரிசுத்த நித்திய தகப்பன் மேற்கூறிய தீமையிலெல்லாம் நாம் அகப்பட்டு அழிய நம்மை அங்கு கொண்டு செல்வாரோ? நிச்சயமாகவே அப்படிச்செய்யார். மனுஷனுடைய மனது மேற்கூறிய அச்சங்களால் நிரம்பியிருப்பதால், அவனை அழைத்தாலும் அவன்பின்தொடரமாட்டான். ஆகையால் தேவன் அவர்களை பலவந்தமாய் அழைத்துச் செல்லாது, மிட்டாயைக் கொடுத்துக் கீழ்ப்படியாத பிள்ளையிடத்

தில்வேலை வாங்கும் தகப்பன் போல், 'நயங்காட்டி' வனாந்தரத்திற்கு அழைத்துக் கொண்டுபோவதாக மேற்கூறிய வசனத்தில் கூறுகிறார். ஒருவன் தேவனுடைய பிள்ளையாகும்போது பலவித பூலோக, பரலோக ஆசீர்வாதங்களையும், சந்தோஷ சமாதானத்தையும், வியாதிகளுக்கு சுகத்தையும், வேலையில் உயர்வையும், நல்ல புகழ்ச்சியையும் கொடுத்து நயங்காட்டுகிறார். பின்பு மெதுவாக மேற்கூறிய அனுபவங்களுள்ள வனாந்தரத்திற்கு அழைத்துச் செல்கிறார். சிலர் இங்கே சோர்ந்து போய், அவரைப் பின்பற்ற மாட்டோம் என்று மறுக்கின்றனர். அது பெரும் தவறு. கர்த்தர் எதற்காக வனாந்தரத்திற்குக் கொண்டுபோகிறார் என்பதை பின் வருமாறு கூறுகிறார்.

"அவளை வனாந்தரத்தில் அழைத்துக் கொண்டு போய், அவளோடே பட்சமாய்ப்பேசி" என்கிறார். தேவன் நம்மிடத்தில் பட்சமாய்ப்பேசுவது எவ்வளவு பெரிய பாக்கியம்! ஒரு வாலிபன், ஒரு வாலிபப் பெண்ணை நேசிக்கும்போது, "ஒரு மனுஷனும் குடியிராமலிருக்கிற" தனியிடத்தில் இருவரும் சென்று, தங்கள் இருதயங்களிலுள்ள எண்ணங்களை ஒருவரோடொருவர் கலந்துபேசி தங்கள் வருங்காலத்தை குறித்துத் தீர்மானித்துக்கொள்ளவிரும்புகின்றனர். நம்முடைய ஆத்ம மணவாளனாகிய இயேசு, நமக்காகத் தம்முடைய முழு இரத்தத்தையும் சிந்தின பின்பு, நம்மை மணவாட்டியாக்க விரும்புகிறார்.

இதற்காக நாம் அவரோடும், அவர் நம்மோடும் தனிமையாகப் பேச வேண்டுமென்று விரும்புகிறார். 'பட்சமாய்ப்பேசி' என்பதை மூல பாஷையில், உள்ளத்தோடு பேசி(to her heart) என்று வாசிக்கிறோம். இவவிதமாக வனாந்தரத்தில் அவரோடு பழகுகிறவர்கள், தங்கள் வருங்காலத்தைத் குறித்து அவரோடு உரையாடுகின்றனர். ஆகவே அவ்விதம் அவருடன் பழகின மணவாட்டியைக் குறித்து, "வருங்காலத்தைப் பற்றியும் மகிழுகிருள்" (நீதி. 31:25) என்கிறார்.

இரட்சிக்கப்பட்டவுடன், முழு இருதயத்தோடும், முழு பலத்தோடும், முழு ஆத்துமாவோடும் அவரை நேசிக்கத்தொடங்கும் கர்த்தருடைய பிள்ளைகளுக்கு மேற்கூறிய வனாந்தரத்தின் பயங்கரங்கள் பயங்கரமாகத் தோன்றாது. எனென்றால், அவரை நம்பியிருக்கிறவர்களை கிருபை சூழ்ந்துகொள்ளும் என்று சொல்லப்படிருக்கிறது. (சங். 32 : 10) இவர்கள் கிருபையால் சூழப்பட்டிருக்கிறபடியால், மனுஷரைக் கொல்லும் மின்சாரத்திலிருந்து பாதுகாக்கும் ரப்பர் உறையைப் போல், இக்கிருபையானது இவர்களைப் பாதுகாக்கிறது. அக்கினியில் விழத் தள்ளப்பட்ட சாத்ராக், மேஷாக், ஆபத்நேகோ தேவனை நம்பினபடியால், அவர்கள் நம்பிக்கை, தீயின் உக்கிரம் அவர்கள் மயிரைக் கூட கருகப் பண்ணாமலும், அக்கினியின் மணம் அவர்களிடத்தில் வீசாமலும் இருக்கச் செய்தது. எனென்றால் அவர்களைக் கிருபை சூழ்ந்துகொண்டது. இயேசு வனாந்தரத்திற்குப்

போனபோது, அன்பின் நிமித்தம் அவரைப் பின் பற்றின ஜனங்கள், விதைப்பும் அறுப்பும் இல்லாத, ஒன்றுமில்லாத அவாந்தர வெளியில் திருப்தியாகப் புசித்துத் திரும்பினர்.

ஆகவே! நண்பனே! வனாந்தரத்தின் பயங்கரத்தை நினைத்து இயேசு வனாந்தரத்திற்கு உன்னை அழைக்கும்போது, அவரைப் பின்பற்றிச் செல்லத் திகையாதே. வனாந்தரத்திற்கு நம்மைக் கொண்டு போவதன் நோக்கம், நம்முடைய உள்ளத்தோடு பட்சமாய்ப் பேசுவதற்கு மாத்திரமல்ல. "அவள் அங்கே, தன் இளவயதின் நாட்களிலும் தான் எகிப்து தேசத்திலிருந்து வந்த நாளிலும் பாடினதுபோல் பாடுவாள்" (ஓசியா 2:15) என்னும் அனுபவத்தையும் தருகிறார். கலங்கி வந்த நம்மை மகிழ்ச்சியாக்கிப் பாடப்பண்ணுகிறார் (யாக். 5·13). நம் பரம பரிசுத்த நித்திய பிதா இத்துடன் நிறுத்திவிடுகிறாரோ? தனிமையாய் பேச தனிமையான இடத்தைத் தேடின அன்பர்கள் உத்தமர்களாயிருந்தால், பேச்சோடு நிறுத்திவிடுவார்களோ? இல்லையே!

நம் உத்தம நித்திய பரம பரிசுத்த நேசர் மகிழ்ச்சி தந்து பாடப்பண்ணுவதுடன், நிறுத்திவிடமாட்டேன் என்று பின்வரும் வாக்கியத்தில் மாறா நித்திய வாக்களிக்கிறார். 'அக்காலத்தில் நீ என்னை இனி பாகாலி என்று சொல்லாமல், ஈஷி என்று சொல்லுவாய் என்று கர்த்தர் உரைக்கிறார்" (ஓசி. 2:16). பாகாலி என்பதன் பொருள், "என் கர்த்தர்"

(My Lord) என்பது. ஈஷி என்பதன் பொருள், "என் புருஷன்" (My Husband) என்பதாகும். மண்ணுகவும், புகையைப் போலவும், புல்லின் பூவைப்போலவும் அழிந்துபோக வேண்டிய மனுஷனுக்கு அருமை மீட்பராகிய இயேசு புருஷனுயிருப்பது எவ்வளவு பெரிய பாக்கியம்! இப்பாக்கியம் உலகத்திலுள்ளதைப் போலல்லாமல் நித்தியமானது. அதைக்குறித்து, "நித்திய விவாகத்துக்கென்று உன்னை எனக்கு நியமித்துக்கொள்ளுவேன்; நீதியும் நியாயமும் கிருபையும் உருக்க இரக்கமுமாய் உன்னை எனக்கு நியமித்துக்கொள்ளுவேன். உண்மையாய் உன்னை எனக்கு நியமித்துக்கொள்ளுவேன்; நீ கர்த்தரை அறிந்துகொள்ளுவாய்." (ஓசி. 2:19, 20) என்கிறுர்.

இவ்விவாகம் அழிந்துபோவதும், வாக்குமாறுவதும், மாறிப்போகும் அன்புள்ளதும், பல தடவைகளில் தோல்வியடைவதுமான பூமிக்குரிய விவாகத்தைப்போல அல்ல. இவ்விவாகம் மனுஷ ஒழுங்கிற்கு மாருனது. வெளி. 19:7 இல், "அவருடைய மனைவி தன்னை ஆயத்தம்பண்ணினுள்" என்று எழுதப்பட்டிருக்கிறது. இப்பொழுது அவர் புருஷனைப்போல் நம்மில் அன்புகூருகிறுர். நாம் அவருக்கு மனைவிகளாக கீழ்ப்படிந்து (எபே.5:22), பயபக்தியாக இருக்கவேண்டும் (எபே.5:33.) இவ்விதம் ஓசியாவில் கூறியதுபோல, அவர் ஆத்ம புருஷனுக இருக்கிறுர். நாம் ஆவிக்குரிய மனைவியாக இருந்து மேற்கூறிய குணசீலங்கள் உடையவர்களாக இருப்போமாயின், வெளி. 19:7–ல் கூறியிருக்கிறது போல நாம் நம்மை மணவாட்டியாகும்படி ஆயத்

G.B. Sathyanesan, B.

தம்பண்ணுகிறோம். இவ்விதம் சபையாகிய மனைவி பூரணப்படும்போது, மணவாளனாகிய இயேசு ஆயத்தம்பண்ணப்பட்ட மணவாட்டியைச் சேர்த்துக்கொள்ளும்படியாக, மத்திய ஆகாயத்தில் வருவார். அப்பொழுது, மனைவியாயிருந்து, அவருக்காகப் பாடுபட்டு, ஆத்துமாக்களை ஆதாயப்படுத்தி, அவரைக் குறித்து வெட்கப்படாமல அவரைப் பின்பற்றின நாம், ஒரு நிமிஷத்தில், ஒரு இமைப்பொழுதில் மறுரூபமடைந்து, அதன்பின் மனைவி எனப்படாமல், மணவாட்டி எனப்படுவோம். இவ்வாறு மணவாட்டியாகும்போது, மனைவியுடைய சரீர கஷ்டங்கள், வேதனைகள், பயங்கள் முதலியவைகள் நீங்கி, மணவாட்டியுடைய சந்தோஷத்திற்குள் பிரவேசிக்கிறோம். இதை எண்ணியே, நீதி 31·25:ல் "வருங்காலத்தைப் பற்றியும் மகிழுகிறாள்" என்று சொல்லப்பட்டிருக்கிறது. உலகத்தில் மணவாட்டியினுடைய சந்தோஷம் ஒரே நாளில், சிறிது நேரத்தில் மாறி, மணவாட்டி மனைவியாக மாறுகிறாள். ஆனால் மனைவியாயிருந்து பாடுபட்ட சபை, மணவாட்டியாக மாறி, நித்திய நித்திய மகிழ்ச்சிக்குள் பிரவேசிக்கிறாள். ஆ! வனாந்தரத்திற்குப் போனது எவ்வளவு பெரும் பாக்கியம்! பரிசுத்த யோவான் இவளுக்கு புதிய எருசலேம் என்று பேர் கொடுக்கிறார். வெளி. 21:2 இவ்விதம் நம்மை புதிய எருசலேமாக்க வேண்டுமென்ற நித்திய நோக்கத்துடன் தேவன் நம்மை நயங்காட்டி வனாந்தரத்திற்கு அழைக்கிறார். மகிழ்ச்சியாய் அவரைப் பின்பற்றுவோமாக!

இம்மகிமையான அனுபவத்தை நிழலாக இஸ்ரவேல் ஜனங்களுடைய ஜீவியத்தில் காணலாம். அவர்களுடைய சரீரப் பிரகாரமான ஜீவியம், உண்மைப் பொருளாக நம்முடைய ஆவிக்குரிய ஜீவியத்தில் நடைபெறுகிறது. ஆகவே, இஸ்ரவேலர் நாற்பது வருடங்கள் வனாந்தரத்தில் எழுத்திற்குரிய பிரகாரமாக ஜீவித்ததை நாம் சற்று விசாலமாக ஆராய்வோமாக.

அதிகாரம் II

ஏன் இஸ்ரவேலருக்கு 40வருட வனாந்தரம்?

தேவன் ஆபிரகாமை நோக்கி, "உன் சந்ததியார் தங்களுடையதல்லாத அந்நிய தேசத்திலே பரதேசிகளாயிருந்து, அத்தேசத்தாரைச் சேவிப்பார்கள் என்றும், அவர்களால் நானூறு வருஷம் உபத்திரவப்படுவார்கள் என்றும் நீ நிச்சயமாய் அறியக்கடவாய்" (ஆதி. 15:13) என்றார். இக்காரியத்தை அப். 7:6 லும் வாசிக்கிறோம். மேலே குறிப்பிட்டிருக்கும் வசனங்களில், நானூறு வருஷம் அவர்கள் எகிப்தியரை "சேவிப்பார்கள்", அங்கு "உபத்திரவப்படுவார்கள்", "துன்பப்படுவார்கள்", "அடிமைகளாயிருப்பார்கள்" என்னும் வார்த்தைகளைக் கவனித்துக்கொள்வோம். ஆனால் யாத். 12:40, 41-ல் அவர்கள் அங்கே 430 வருடங்கள் இருந்தார்கள் என வாசிக்கிறோம். சில தடவைகளில் இவ்வசனங்களை நாம் பார்த்து ஒன்றுக்கொன்று வேறுபாடாயிருக்கின்றன என்று

எண்ணுகிறோம். ஆனால் இதை ஆழ்ந்து ஆராய்வோமானால் வேறுபாடில்லை என்று அறியலாம். 400 வருடங்கள் அவர்கள் "சேவிப்பார்கள்", "துன்பப்படுவார்கள்", "உபத்திரவப்படுவார்கள்", "அடிமைகளாயிருப்பார்கள்" என்று வாசிக்கிறோமேயன்றி, அவர்கள் 400 வருடங்கள் தான் அங்கு தங்குவார்கள் என்று வாசிப்பதில்லை. யோசேப்பை அறிந்த ராஜா இருந்த காலத்தில் அவர்கள் அடிமைகளாயிருக்கவோ, சேவிக்கவோ, துன்பப்படவோ, உபத்திரவப்படவோ இல்லை. யோசேப்பும், அவனை அறிந்ததுமான பார்வோனும் மரித்த பின்பு மாத்திரமே இவர்கள் மேற்கூறியபடி துன்பப்பட்டார்கள் என்பது தெளிவு. ஆகவே, இவ்விதம் துன்பப்படாத வருடங்கள் 30. சிலர் இதை சரிவர ஆராயாமல் மேற்கூறியது போல் உள்ள வசனங்களின் சத்தியத்தை அறியாது, வேதம் பொய் என்றும் துணிந்து கூறிவிடுகின்றனர். தேவன் அவர்களுக்கு மன்னிப்பாராக.

இவ்விதமாய் 430 வருடங்களுக்குப் பிறகு, பஸ்காவை ஆசரித்ததின் மூலமாக, தேவன் அவர்களைப் புறப்படப்பண்ணினார். தேவனுடைய பலத்த கரத்தினால் விடுவிக்கப்பட்ட அவர்கள் பாலும், தேனும் ஓடுகிற தேசத்தை அடைவோமென்கிற நம்பிக்கையுடன் புறப்பட்டனர். எகிப்திலிருந்து 40 நாட்கள் பிரயாணத்தில் கானானுக்குச் செல்லும் மார்க்கம் இருந்தது. ஆனால், அன்பாயி

ருக்கும் தேவன் இஸ்ரவேல் ஜனங்களை அவ்வழியாக நடத்தாது 40 நீண்ட வருடங்கள் வனாந்தரத்தில் சுற்றப் பண்ணி, அவர்களில் மிகுதியானவர்களையும் வனாந்தரத்தில் அழியப்பண்ணி, எகிப்திலிருந்து புறப்பட்டவர்களுள் 2 பேரை மாத்திரம் கானானில் சேரப்பண்ணினார். வனாந்தரமானது ஒன்றுமில்லாத அவாந்தரவெளியாக இருப்பது மாத்திரமல்ல. தேள்களும் கொள்ளிவாய்ச் சர்ப்பங்களும் உள்ள இடமென்று உபா. 8:15இல் வாசிக்கிறோம். இப்படிப்பட்ட வனாந்தர வழியாக 40 வருடங்கள் நடத்தினார் என்பதை வாசிக்கும்போது உண்மையாக. "தேவன் அன்பாயிருக்கிறாரா?" என்றும், "பலவீனமான மனுஷருக்கு தேவன் ஏன் இப்படி தொந்தரவு கொடுக்கிறார்?" என்றும் சில தடவைகளில் சிந்திக்க வேண்டியதாகிறது. தேவன் ஒரு நாளும் தீமை செய்கிறவர் அல்ல. அவர் நமக்காக பரிதபிக்கும் பிதா. ஆகவே, தேவன் இஸ்ரவேலர்களை இவ்விதம் நடத்தினதின் நோக்கத்தை நாம் அறிய வேண்டியது இன்றியமையாதது.

இஸ்ரவேலர் எகிப்தைவிட்டு, சிவந்த சமுத்திரத்தைக் கடந்து, சீனாயில் தேவ மகிமையைக் கண்டு அங்கு பிரமாணங்களையும் பெற்று, வனாந்தர வழியாய் பாலும் தேனும் ஓடுகிற கானானில் பிரவேசித்தார்கள். இது நம் ஆவிக்குரிய ஜீவியத்தில் பாவத்தை விட்டு இரட்சிப்பின் சந்தோஷம் பெறுவதை

யும், முழுக்கு ஸ்நானம் பெறுவதையும், பரிசுத்த ஆவியையும், தேவனுடைய உபதேசங்களையும் பெறுவதையும், பலவித பாடுகளினிமித்தம் (அப். 14:22) பரம கானானாகிய பரலோகத்தை சுதந்தரித்துக்கொள்வதையும் காட்டுகிறது. நம் ஜீவியம் சில தடவைகளில் எவ்வித ஆசீர்வாதமுமில்லாத வெறுமையான அவாந்தர வெளியாக இருக்கிறது. தேள்களும், கொள்ளிவாய்ச் சர்ப்பங்களும் தீண்டும்போது வெளியே காயங்கள் காணப்படாது, நரம்புகள் வழியாக விஷம் ஏறி, கண்ணை மங்கப் பண்ணி, தலையை சுற்றப் பண்ணுகிறது. சிலருக்கு வரும் சோதனைகளின் பாரதூரங்களை மற்றவர்கள் சிறிதும் கண்டுணரக் கூடாதபடி, வெளியான காயமின்றி, உள்ளான மனுஷனுடைய கண்களை மங்கப்பண்ணி, கவலையினால் தலையை சுற்றப்பண்ணுகிறது. ஆகவே இஸ்ரவேல் புத்திரரை இவ்விதம் வனாந்தர வழியாக நடத்தினது நம்முடைய ஆவிக்குரிய ஜீவியத்திற்கு நிழலாக இருக்கிறபடியால், இவ்விஷயத்தைக் குறித்து நாம் அறியவேண்டியது இன்றியமையாதது.

முதலாவதாக "ஜனங்கள் யுத்தத்தைக் கண்டால் மனமடிந்து, எகிப்துக்குத் திரும்புவார்கள் என்று சொல்லி; பெலிஸ்தரின் தேச வழியாய்ப் போவது சமீபமானாலும், தேவன் அவர்களை அந்த வழியாய் நடத்தாமல், சிவந்த சமுத்திரத்தின் வனாந்தர வழியாய் ஜனங்களைச் சுற்றிப் போகப்

பண்ணினார்" (யாத். 13:17, 18) என்று காண்கிறோம். இங்கு இஸ்ரவேலர் மனமடிவடையாமல் இருக்கவேண்டும் என்னும் நல்நோக்கத்தினிமித்தம் வனாந்தரத்திற்குக் கொண்டுபோனார் என்று காண்கிறோம். மனமடிவு அல்லது சோர்வு என்பது பிசாசின் ஓர் கூரியதும், பயங்கரமானதும், மறைவானதுமாகிய ஆயுதம். இவ்வாயுதத்தால் மாண்ட அநேகப் பரிசுத்தவான்கள் அக்காலத்திலும், இக்காலத்திலும் உண்டு. தாவீது சிங்கத்தையும், கரடியையும் கிழித்து, ஒரே கூழாங்கல்லினால், பலத்த கோலியாத்தைக் கொன்றான். ஆயினும், "நான் எந்த நாளிலாகிலும் ஒரு நாள் சவுலின் கையினால் மடிந்துபோவேன்" (1சாமு. 27:1) என்னும் மனமடிந்த வார்த்தையை தன் இருதயத்தில் சொன்னபடியால், அவன் சிலகாலம் தேவ சித்தத்தை விட்டுத் தவறி, அநேக கஷ்ட நஷ்டங்களுக்குள் அகப்பட்டதை 1சாமுவேல் 27, 28, 29 அதிகாரங்களில் வாசிக்கிறோம்.

20 இலட்சம் ஜனங்கள் பெலிஸ்தர் தேசத்திற்குள் பிரவேசிக்கும்போது, பெலிஸ்தர்கள் நிச்சயமாகவே இவர்களுக்கு விரோதமாக யுத்தத்திற்கு வருவார்கள். இப்பொழுது இவர்கள் கையில் மாம்ச பிரகாரமான போராயுதங்கள் இல்லை. தேவனை ருசிக்கத் தொடங்கினார்களேயன்றி, தேவனுடைய சர்வ வல்லமையை உணர்ந்த பெரும் விசுவாசமாகிய ஆவிக்குரிய ஆயுதமும் இல்லை. ஆகவே, யுத்தத்தைக் கண்டவுடன் மன

மடிந்து எகிப்துக்கு திரும்பிவிடுவார்கள் என்பதை கர்த்தர் அறிந்திருந்தார். நம் ஆவிக்குரிய ஜீவியத்தின் ஆரம்பத்தில் பெலிஸ்தர் போலுள்ள பெரிய சோதனைகள் வருகிறதற்குக் கர்த்தர் இடங்கொடாமல், வனாந்தரமாகிய சிறிய உபத்திரவங்கள் வழியாக நடத்தி நம்மைப் பழக்குகிறார். இக்காலங்களில் சிறு கஷ்டங்கள் வந்தாலும் அதற்குரிய போக்குகளை உடனுக்குடன் உண்டாக்குகிறார். ஜெபங்களுக்கு உடன் பதில் தருகிறார். வனாந்தரத்தில் பிரவேசித்த சில நாட்களுக்குள் ஏலிமாகிய செழிப்பான இடத்தைக் கொடுத்தது போல், ஜீவியத்தில் சில சந்தோஷங்களைத் தருகிறார். இவ்விதமாக நாம் மனமடிந்து போகாமல் இருக்கும்படியாக நயங்காட்டி வனாந்தரத்திற்குக் கொண்டுவருகிறார் (ஓசி. 2:14). ஆ! தேவனுடைய ஆழமான நோக்கம் எத்தனை மகிமையானது! நாம் மனமடிந்து, சோர்ந்துபோகாமலிருக்க கர்த்தர் நம்மை நயங்காட்டி வனாந்தரத்திற்குக் கொண்டுவருவது மிக அவசியம். அப்படியில்லாது. நேரே பெலிஸ்தரோடு யுத்தம் பண்ண நம்மை வழிநடத்தியிருப்பாரானால், நாம் பல காலங்களுக்கு முன்னமே நம் இரட்சிப்பை இழந்து, எகிப்தாகிய உலகிற்கு பின்மாறிப் போயிருப்போம் அல்லவா? ஆ! உண்மையாய் தேவன் அன்புதான்! ஆம்! அவர் வழி உத்தமமானது தான்! (சங். 18:30) இவ்விதமாய் நம்முடைய குணசிலங்கள் உருவாகி, நாம் மனமடிவடையாமல், சிறிது சிறிதாக பெலத்தின்மேல் பெலமடைய வனாந்தரத்

தின் வழியாய் தேவன் நம்மை நடத்தவேண்டியது அவசியம். அற்பகாலமுள்ள இவ்வுலக வாழ்வில் நாம் உபத்திரவங்களாகிய வனாந்தர வழியாய் பரம கானான் அடைய வேண்டுமென்று பரிசுத்த பவுலும், அப். 14:22-ல் கூறி, இச்சத்தியத்தை நிரூபிப்பது எவ்வளவு ஆச்சரியம்!

இரண்டாவதாக, "உன் இருதயத்திலுள்ளதை நீ அறியும்படிக்கு" (உபா. 8:2) வனாந்தரத்திற்குக் கொண்டுபோனார் என்று வாசிக்கிறோம். நாம் நம்மை அறியும் பொருட்டாக, தேவன் வனாந்தரத்தின் வழியாக நடத்துகிறார். ஒரு மனுஷன் பரீட்சைக்கு (சோதனைக்கு) நில்லாதவனாயிருந்தால், அவன் தன்னைத்தானே அறிய முடியாது (II கொரி. 13.5).

தன் பெலன், தன் நிலை முதலியவற்றை அறியாத மனுஷன், பலவித அபாயங்களுக்குள் அகப்படுகிறான். சிம்சோனின் 7 சடைகளும் சிரைக்கப்பட்டு, தான் பெலவீனப்பட்டிருப்பதை அறியாது, தான் முன்புபோல் பராக்கிரமசாலியாக இருப்பதாக எண்ணி, குதித்து எழுந்தான். ஆனால், பெலிஸ்தர் அவனைப் பிடித்து குருடனாக்கினார்கள். பின்பு அவன் மடிந்துபோனான். சாதாரணமாக, மனுஷன் தன்னைக் குறித்து மேன்மையாக எண்ணுகிறான். ஆனால் சோதனைகள் வரும்போது தன் உண்மை நிலையை அறிகிறான். ஒரு மனிதன் கோபம், இச்சை, கவலைப்படுதல் முதலியவை

களுக்கு அடிமையாகாமல் சில காலம் ஜீவிக்கும் போது, தான் சரியாக இருப்பதாக எண்ணி, மேன்மை பாராட்டுகிறான். இவ்விதம் இருக்கையில், திடீரென்று உண்டாகும் சோதனையினிமித்தம் இவைகளுக்கு இடங்கொடுத்து அடிமையாகிறான். இவ்வித சுபாவங்கள் இவனுக்குள் இருந்த போதிலும், சோதனைகள் இல்லாதிருந்தபடியால் அவைகள் அவனுக்குள் இருப்பதை அறியாதிருந்தான். ஆனால் சோதனையினிமித்தம் இவைகள் இன்னமும் தனக்குள் இருப்பதை அறிந்து கொள்கிறான். இவ்வறிவானது அவன் தன்னைத் தானே கர்த்தருக்கு முன்பாகத் தாழ்த்தவும், தேவ கிருபை பெறுவதற்கும் ஏதுவாகக் கூகிறது. இஸ்ரவேல் ஜனங்களுக்குள்ளே இச்சை, தேவனைப் பரீட்சை பார்த்தல், கீழ்ப்படியாமை இவ்வித பல தீய சுபாவங்கள் இருந்தபோதிலும், சிவந்த சமுத்திரத்தைத் தாண்டியவுடன் யாவரும் சந்தோஷமாகப் பாடினர். ஆனால் வனாந்தரத்தில் பிரவேசித்து, சோதிக்கப்பட்டபோது இத்தீய சுபாவங்கள் வெளிப்பட்டதைக் காண்கிறோம். இவைகள் வெளிப்பட்ட ஓர் சில சந்தர்ப்பங்களில், துக்கித்து, தங்களைத் தாழ்த்தி, சுத்திகரித்துக்கொண்டார்கள் என்றும் அறிகிறோம் (உ ம். யாத். 33). இவ்விதமாய் வனாந்தரம் நம்மை நாம் அறிந்து கொண்டு, தேவ சந்நிதானத்தில் நம்மைத் தாழ்த்தி, கிருபை பெற்று சுத்திகரிப்பைப் பெற அவசியமாயிருக்கிறது.

மூன்றாவதாக, "கர்த்தராகிய நான் உங்கள் தேவன் என்று நீங்கள் அறிந்துகொள்ளும்படிக்கு, நான் நாற்பது வருஷம் உங்களை வனாந்தரத்தில் நடத்தினேன்" (உபா. 29:5) என்று வாசிக்கிறோம். இங்கு கர்த்தர் நம்முடைய தேவன் என்று நாம் அறியும்படியாக, நம்மை வனாந்தரத்தில் நடத்துகிறாரென்று அறிகிறோம். கர்த்தர் (Lord) என்னும் வார்த்தையானது அவருடைய வல்லமை, ஆளுகை முதலியவற்றைக் காட்டுகிறது (உ-ம் கர்த்தர் ராஜரீகம் பண்ணுகிறார் சங். 97:1) இஸ்ரவேல் ஜனங்கள் ஆரம்பத்தில் யேகோவாவை கர்த்தராக மாத்திரம் ருசித்தார்கள். அவர் ஆளுகை செய்கிற சர்வ வல்லவராக அவர்களை எகிப்திலிருந்து புறப்படப்பண்ணி, சிவந்த சமுத்திரத்தைத் தாண்டப் பண்ணி, வனாந்தரத்தில் கொண்டு வந்துவிட்டார். இவ்வேளையிலேயே மோசே ஜனங்களை நோக்கி "கர்த்தர் உங்களுக்காக யுத்தம் பண்ணுவார்." (யாத். 14:14) என்கிறார். இதிலிருந்து கர்த்தர் நம்முடைய யுத்தங்களை நடப்பிக்கிறவர் என்று அறிகிறோம். அத்துடன் கர்த்தர் வியாதிகளுக்கும் சுகம் கொடுக்கிறார். வியாதியிலிருந்து மருந்தின்றி விடுதலை பெற்றுக்கொள்ள வேண்டுமானால், யேகோவாவை கர்த்தர் என்று அறிய வேண்டும். இவ்வறிவில்லாதவர்கள், "பிணியாளிகளுக்கு வைத்தியன் தேவை" என்று இயேசு சொன்னதின் பொருள் விளங்காதபடி உலக வைத்தியரின் பின்செல்லுகின்றனர். இவ்வறிவுள்ளவர்

களோ, "நானே உன் பரிகாரியாகிய கர்த்தர்" என்று தேவன் யாத். 15:26ல் சொன்ன "பிணியாளிகளுக்கு வைத்தியனாகிய பரிகாரி" கர்த்தரைக் காட்டுகிறது என்று அறிந்துகொண்டு கர்த்தரை வைத்தியராக ஏற்றுக்கொள்ளுகின்றனர். பலர் யேகோவாவை கர்த்தராக மாத்திரம் அறிந்து அவருடைய சர்வ வல்லமையினிமித்தம் தங்களுடைய கஷ்டங்களினின்று விடுவிக்கும் வல்லவராக ருசிக்கின்றார்கள். வேறுசிலர் அவருடைய சர்வ வல்லமையை அறிந்து பயந்து நடுங்குகின்றனர் இஸ்ரவேல் ஜனங்கள் அவரைக் கர்த்தரென்று அறிந்தால் மாத்திரம் போதாது. தேவனென்றும் அறியவேண்டியது அவசியமாக இருந்தது. தேவனாக அவரை ருசிக்கும்போது; அவருடைய அன்பின் தன்மையை ருசிக்கலாம். (உ. ம். தேவன் அன்பாகவே இருக்கிறார். (I யோவான் 4:8) யோவான் 3:16 ல், தேவனுடைய தன்மை அன்பு கூருவதும், கொடுப்பதும் என்று தெளிவாகக் காண்கிறோம். யோபு, தேவனின் சுபாவம் நன்மை செய்வது என்பதைக் காட்டும் பொருட்டு, "தேவன் கையிலே நன்மையைப் பெற்ற நாம்" (2:10) என்று கூறுகிறார். சங் 91;15ல் யேகோவா ஒரு மனுஷனை ஆபத்திலிருந்து "தப்புவித்து" தன் வல்லமையையும் ஆளுகையையும் வெளிப்படுத்த முதலாவது கர்த்தராக வெளிப்படுகிறார். அதன் பின்பு அவருடைய வல்லமையை ருசித்த அவன்மேல் அன்புகூர்ந்து அவனைக் "கனம் பண்ணி" அவனுக்குத் தன்னை தேவனாக வெளிப்படுத்துகிறார். கர்த்தராயிருந்து அவர்களை எகிப்தி

லிருந்து விடுவித்தவர், அவர்களுக்கு வனாந்தரத்தில் தேவனாக வெளிப்பட்டு தகப்பன் தன் பிள்ளைகளுக்கு இரங்குவதுபோல அன்பினால், அவர்களுக்குத் தேவையான மன்னா, காடை முதலியவற்றைக் கொடுத்து அவர்களைக் கனம்பண்ணினார். அத்துடன். அவர்கள் வஸ்திரங்கள் பழைமையாய் போகாமலிருக்கவும், பாதரட்சை தேய்ந்து போகாமலிருக்கவும் செய்து தன்னைத் தேவனாக நிரூபித்தார் ஆ! நாற்பது வருடங்கள் பாதுகாக்கப்பட்ட அவர்கள் வஸ்திரங்களும், பாதரட்சைகளும் எவ்வளவு அற்புதமானவை! இஸ்ரவேலருடைய தேவன் நம்முடைய தேவனும் தானே! சிலர் தேவனுடைய அன்பு, ஆதரவு முதலியவற்றை பணம், பொருட்கள் முதலியவற்றின் எண்ணிக்கையில் அளக்கின்றனர். 40 வருடங்கள் குறைந்தது 40 பாதரட்சைகள் வாங்கி, தேவன் ஆசீர்வதித்தார், என்று சொல்வதைப் பார்க்கிலும், ஒரே பாதரட்சையை 40 வருடங்கள் உபயோகித்து, அவருடைய ஆசீர்வாதத்தில் அவரைக் கர்த்தராக அவருடைய வல்லமையையும், தேவனாக அவருடைய அன்பையும் ருசிப்பதன்றோ மேன்மை! ஆகவே, உலகப் பிரகாரமான ஆசீர்வாதங்களின் எண்ணிக்கையைக் கவனியாதிருங்கள். கொஞ்சத்தை ஆசீர்வதித்து ஆதரிப்பதே மேன்மையாகும்.

வனாந்தரம் ஒன்றுமில்லாத அவாந்தரவெளியாக இருப்பதால், இஸ்ரவேலருக்கு எதையும் கொடுத்து ஆதரிக்கவோ, வாங்கி அனுபவிக்கவோ எவ்வித மார்க்கமுமில்லை. இவ்வித உதவியற்ற நிலையில் தேவன் அவர்களுக்கு யாவற்றையும் கொடுத்

துத் தம்மை அவர்களுக்கு தேவனாக வெளிப்படுத்தினார். ஆ! அற்புத தேவன்! இவ்விதமாய், கர்த்தரை தேவனென்று நாம் அறிந்து, அவரிடத்திலிருந்து நன்மைகளைப் பெற்றுக்கொள்ள, வனாந்தரம் அவசியமாயிருக்கிறது.

நான்காவதாக,, "அவர்களை வனாந்தரத்தில் அழைத்து வந்து, என் கட்டளைகளை அவர்களுக்குக் கொடுத்து, என் நியாயங்களை அவர்களுக்குத் தெரியப்படுத்தினேன்" (எசேக். 20:10, 11) என்று காண்கிறோம். அவருடைய கட்டளைகளையும் நியாயங்களையும் பெற்றுக்கொள்ள வனாந்தரம் அவசியமாயிருக்கிறது. உலகத்தில் எந்த சங்கமோ, பாடசாலையோ, தொழிற்சாலையோ ஒழுங்காகச் செயல்பட்டு, முன்னேற வேண்டுமாயின், அவைகளுக்குக் கட்டளைகளும், நியமங்களும் தேவை. அப்படியே இஸ்ரவேல் ஜனங்கள் வனாந்தரத்தில் சரிவர பிரயாணம்பண்ணி, பாலும், தேனும் ஓடுகிற கானான் தேசத்தை சுதந்தரித்து அதில் சரிவர ஜீவனம்பண்ண வேண்டுமாயின், கட்டளைகளும் நியமங்களும் அவர்களுக்கு அவசியமாயிருந்தது. வனாந்தரத்தில் வேறு சத்தங்கள் இல்லாதபடியால், அவர்கள் தேவனுடைய சத்தத்திற்குச் செவி கொடுப்பது இலகுவாகும். ஆகவே, ஓசியா 2:14-ல், 'வனாந்தரத்தில் அழைத்துக் கொண்டுபோய், அவளிடம் பட்சமாய்ப் பேசி" என்கிறார். ஆகவே! தேவன் எகிப்தில் அல்லது கானானில்வைத்து இஸ்ரவேலருக்குத் தன் பிரமாணங்களைக் கொடுக்கவில்லை. மனுஷன் துன்பமற்றவனாய் ஜீவிக்கிறவேளையில் அவர் சத்தத்

திற்குச் செவிகொடுப்பது கடினமான காரியம். வனாந்தரத்தில் பாடுகளனுபவிக்கும்போது, அவர் ஒருவரே தஞ்சமானபடியால் அவருக்குச் செவி கொடுக்கப் பழகுகிறான். ஆகவே, நாம் தேவ சத்தத்தைக் கேட்டுப் பழகும்பொருட்டாக நம்மை வனாந்தர ஜீவியத்திற்கு வழிநடத்துகிறார். வனாந்தரத்திலிருந்து தத்தளிக்கும் நண்பனே! நீ சோர்ந்து போகாது, தேவ சத்தத்திற்காக காத்திருப்பாயாக!

முழு சபைக்கும் உள்ளதான கட்டளை, நியமங்களை தேவன் ஒவ்வொருவரோடும் பேசாமல், மோசேயிடம் பேசி அவன் மூலமாக ஜனங்களுக்கு அறிவித்தார். இதற்காக மோசேயை மற்ற இஸ்ரவேலரைவிட்டுத், தனித்து மலையில் ஏறி வரும்படி தேவன் அழைத்தார். இவ்விதமாகவே இன்றும் சபையில் நிறைவேறுகிறது. ஒரு சிலர் இதை அறியாதபடி தங்களிடம் தேவன் நேரே பிரமாணங்களை கொடுத்திருக்கிறார் என்று எண்ணி, வஞ்சிக்கப்பட்டு போதகர்களாகின்றனர்.

''மோசே'' என்ற வார்த்தைக்குத் ''தெரிந்தெடுக்கப்பட்டவன்'' அல்லது ''இழுத்தெடுக்கப்பட்டவன்'' (Marg.: Drawn out) என்பது பொருளாகும். இஸ்ரவேலரெல்லாரும் சிவந்த சமுத்திரத்தைத் தாண்டி வனாந்தரத்திலிருந்தாலும், கற்பனையைப் பெற்றுக்கொள்ள மலைக்கு வரவழைக்கப்பட்டவன் தெரிந்துகொள்ளப்பட்ட மோசே

மாத்திரமே. இவ்விதமாகவே. சீஷராகி ஞானஸ்நானம் பெற்றுக்கொண்ட திரளான ஜனங்கள் சபையில் இருந்து பாடுகளை அனுபவிப்பார்கள். அவர்கள் மத்தியிலிருந்து தேவ இரகசியங்களைப் பெற்றுக்கொள்ளும் பொருட்டாக தெரிந்துகொள்ளப்படுகிறவர்கள் மோசேயைப்போல் ஒரு சிலரே. இயேசுவை ஆயிரக்கணக்கான சீஷர்கள் பின்பற்றினர். அற்புதங்கள் செய்ய 70 சீஷர்களை நியமித்தார். ஆனால் அப்போஸ்தலராக மோசேயைப் போல தெரிந்துகொள்ளப்பட்டவர்கள் 12 பேர்கள் மாத்திரமே. 'இவர்கள், "தெரிந்தெடுக்கப் பட்டவர்கள்" என்னும் வார்த்தையை லூக். 6:13 இல் கவனிப்பது ஆச்சரியமே! தெரிந்துகொள்ளப் பட்ட மோசேயின் மூலம் தேவனுடைய ஜனமான இஸ்ரவேலருக்கு தேவசித்தம் வெளிப்படுத்தப் பட்டதுபோல, தேவ ஜனமாகிய சபைக்குத் தெரிந்துகொள்ளப்பட்டவர்களாகிய அப்போஸ்தலர் மூலமாக மாத்திரமே தேவசித்தம் வெளிப்படுகிறது. இந்த அப்போஸ்தலர் அக்காலத்திலிருந்த 12 பேரைப்போல் உலகத்தில் யாவற்றையும் விட்டுவிட்டவர்களாகவும், பரிசுத்தமுள்ளவர்களாகவும் இருக்கவேண்டும். இதை நிரூபிக்க, "ஆதிகாலங்கள் முதல் மறைந்திருந்த இரகசியத்தினுடைய ஐக்கியம் இன்னதென்று, எல்லாருக்கும் வெளிப்படையாகக் காண்பிக்கிறதற்கு இந்தக் கிருபை எனக்கு அளிக்கப்பட்டிருக்கிறது' என்று எபே. 3:11-ல் தைரியத்தோடு அப்போஸ்தலனாகிய பவுல் முழங்குகிறார். அன்றியும் இந்த இரகசியம் அவ்

போஸ்தலருக்கும், தீர்க்கதரிசிகளுக்கும் வெளிப்படுத்தப்பட்டிருக்கிறது என்று எபே. 3:6-ல் காண்கிறோம். ஆகவே சபை பூரணப்படும்படியான சட்ட'திட்டங்கள் தெரிந்தெடுக்கப்பட்ட பரிசுத்த அப்போஸ்தலர் மூலமாக வெளிப்படுத்தப்படுகிறது என்பதையும் மறவாதீர்கள். இதையறியாது இக்காலத்தில் அநேகர் உலகத்தில் சம்பளம்பெற்று, உலகத்தில் சிக்குண்டு தாங்களும் அப்போஸ்தலர் என்று கூறி, துணிகரங்கொண்டு ஊழியம் செய்வது எவ்வளவு பரிதாபம்! நாம் இவ்வஞ்சகத்தை அறிந்து, உண்மை அப்போஸ்தலரைக் கண்டு, அவர்களிடமிருந்து பிரமாணங்களைப் பெற்றுக்கொண்டு, அதன்படி ஜீவிப்போமானால், வனாந்தரத்தில் அழியாது பரம கானானை அடைவோமென்பது நிச்சயமே. ஆகவே, பிரமாணங்களையும், கட்டளைகளையும் பெற்றுக்கொள்ள வனாந்தரம் இன்றியமையாதது.

ஐந்தாவதாக, "யுத்தபுருஷரான யாவரும் மாளுமட்டும், இஸ்ரவேல் புத்திரர் நாற்பது வருஷம் வனாந்தரத்தில் நடந்து திரிந்தார்கள்" (யோசுவா. 5:6) என்று காண்கிறோம். யுத்த மனுஷர் யாவரும் மாளும்படியாக தேவன் வனாந்தரத்திலே நடத்தினார். தாவீது தேவனுக்குப் பிரியமானவனாயிருந்து, தேவசித்தம் செய்ய வாஞ்சையுள்ளவனாயிருந்து அப்படியே அநேக காரியங்களிலும் தேவசித்தம் செய்துவந்தான். ஆயினும், ராஜ்யத்தை ஸ்தாபிக்கும் பொருட்டு அநேக யுத்தங்கள் நடத்தவேண்டியதாயிருந்

தனை இக்காலத்தில் தாவீதிற்குத் தேவனுடைய ஆலயத்தைக் கட்ட வேண்டும் என்னும் அவா உண்டாகி, அதற்காகத் தீர்மானங்களைச் செய்து ஏராளமான பொருட்களைச் சவதரித்தான். இதில் பிரியமுற்ற தேவன் ஆலயத்தைக் கட்ட வேண்டிய மாதிரியைக் காண்பித்தார் என்று I நாளா 28:19-ல் காண்கிறோம். ஒரு ஆலயம் அல்லது கட்டிடம் கட்டுவதற்கு அதன் மாதிரியும், பொருட்களும் தேவை. இவ்விரண்டும் தாவீதிடம் இருந்த போதிலும் தேவன் அவனை ஆலயம் கட்ட வேண்டாம் என்று தடை செய்தார். இதன் காரணத்தை தாவீதே பின்வருமாறு கூறுகிருர்; "ஆனுலும் தேவன்: நீ என் நாமத்திற்கு ஆலயத்தைக் கட்ட வேண்டாம்; நீ யுத்த மனுஷனுயிருந்து, ரத்தத்தைச் சிந்தினுய் என்ருர்" (I நாளா. 28:3). இதிலிருந்து தாவீதினுடைய விருப்பம் பூரணப்படவில்லை என்று அறிகிறோம். ஆலயமாகிய அவருடைய வாசஸ்தலம் பூரணப்பட வேண்டுமாயின் யுத்தம் இருக்கக் கூடாது என்று கர்த்தர் விரும்புகிருர். இந்த ஆலயம் அல்லது தேவனுடைய வாசஸ்தலம் முதலாவது தனித்தனியே ஒவ்வொரு கர்த்தருடைய பிள்ளையையும் காட்டுகிறது என்பதை நிரூபிக்க, "நீங்கள் தேவனுடைய ஆலயமாயிருக்கிறீர்களென்றும்,............அறியாதிருக்கிறீர்களா?" என்று ஆவியானவர் I கொரி. 3:16ல் எழுதுகிருர். இரண்டாவதாக, இந்த தேவனுடைய வாசஸ்தலம் சபையைக் காட்டுகிறது என்று எபேசியர் 2:22ன் மூலம் அறிகிறோம்.

"அவர்மேல் நீங்களும் ஆவியினாலே தேவனுடைய வாசஸ்தலமாகக் கூட்டிக் கட்டப்பட்டு வருகிறீர்கள்."

மனுஷருடைய ஜீவியத்தில் மூன்று விதமாக யுத்தங்கள் கிரியை செய்கின்றன. (a) "உங்கள் அவயவங்களில் போர்செய்கிற இச்சை" என்று யாக். 4:1ல் காண்கிறோம். இவ்விதமாய் தாவீது செய்ய வேண்டுமென்று விரும்பினதை செய்ய முடியாமல் யுத்தம் தடைபண்ணினதுபோல, நம்முடைய ஜீவியத்திலும் தடை உண்டாகிறது. இதை நிரூபிக்க ஆவியானவர், "மாம்சம் ஆவிக்கு விரோதமாகவும், ஆவி மாம்சத்துக்கு விரோதமாகவும் இச்சிக்கிறது; நீங்கள் செய்யவேண்டுமென்றிருக்கிறவைகளைச் செய்யாதபடிக்கு இவைகள் ஒன்றுக்கொன்று விரோதமாயிருக்கிறது" என்று கலாத்தியர் 5:17ல் கூறுகிறார். ஆகவே அவயவங்களில் கிரியை செய்கிற இச்சையின் மேல் பூரண ஜெயம் பெற்றுக்கொள்ள வேண்டும். இதன் மேல் பூரண ஜெயம் பெற்றுக்கொள்ளக்கூடும் என்பதை விசுவாசியாமலிருக்கும் ஒரு பெருங்கூட்டம் உலகத்தில் இருக்கின்றது. ஆனால் வேதத்தை ஆராயும்போது பூரண ஜெயத்தைப் பெற்றுக்கொள்ளக் கூடும் என்று அறிகிறோம் இதறகுத் தேவையானது ஆவியினால் நடத்தப்படும் ஜீவியமே. ஆவியின் கனிகளில் கடைசியானது இச்சையடக்கம். (கலா. 5:22, 23). இதிலிருந்து ஆவியின்படி ஜீவிக்கும்போது இச்சையை அடக்கலாம் என்று அறிகிறோம். இதை நிரூபிக்க மறுபடியும் ரோமர்

G.B. Sathyanesan, B.

8:13ல் ஆவியினால் சரீரத்தின் செய்கைகளாகிய இச்சையை அழிக்கக்கூடும் என்று காண்கிறோம். சரீரத்தில் கிரியை செய்யும் இச்சை, எண்ணங்களோடு சம்பந்தப்பட்டது ஆகும். இச்சைக்குரிய எண்ணங்களை அடக்கி ஆளும் போது அவயவங்களில் கிரியை செய்யும் இச்சை அடங்குகிறது. எண்ணங்களில் பரிபூரணஜெயம் பெற்றுக்கொள்ளக் கூடும் என்பதை பரிசுத்தபவுல் தன் அனுபவத்தின் மூலமாக, ''எந்த எண்ணத்தையும் கிறிஸ்துவுக்குக் கீழ்ப்படியச் சிறைப்படுத்துகிறவர்களாயிருக்கிறோம்'' என்று II கொரி. 10:5ல் கூறுகிறார். இங்கே, எந்த எண்ணத்தையும் கிறிஸ்துவுக்கு கீழ்ப்படியச் சிறைப்படுத்துகிறோம் என்பது கவனிக்கப்படத்தக்கதாகும். அப்போஸ்தலனாகிய பவுல் முன்பு ரோமர் 7 ஆம் அதிகாரத்தில், தான் விரும்பாததைச் செய்யக்கூடியதாக ஒரு பிரமாணம் தன் அவயவங்களில் இருப்பதாகக் கூறிவிட்டு, பின்பு 8 ஆம் அதிகாரம் 1,2 ஆம் வசனங்களில் அப்பிரமாணத்தினின்று ஆவியின் பிரமாணம், தனக்குப் பூரண விடுதலை கொடுத்ததாக மகிழ்ச்சியுடன் எழுதுகிறார். ஆகவே ஒருவன் ஆவிக்குக் கீழ்ப்படிந்து ஜீவிப்பானேயானால் அவயவங்களில் போர் செய்யும் இச்சைகளிலிருந்து பூரண விடுதலை பெற்றுக் கொள்கிறான் என்பது நிச்சயம்.

(b) ஒருவருக்கு விரோதமாக ஒருவர் யுத்தம் செய்யும் அல்லது போராடும் சுபாவம். இச்சுபாவம் கலாத்தியசபையில் இருந்ததென்று பின்வரும் வச

ணத்திலிருந்து அறிகிறோம். "நீங்கள் ஒருவரை யொருவர் கடித்துப் பட்சித்தீர்களானால் அழிவீர்கள். அப்படி ஒருவராலொருவர் அழிக்கப்படாத படிக்கு எச்சரிக்கையாயிருங்கள்" (கலா. 5:15). இவ்விதமாய் ஒருவருக்கொருவர் விரோதமாய் யுத்தம்பண்ணும் சுபாவம் சபைகளிலும், குடும்பங்களிலும், உத்தியோக சாலைகளிலும், அயல் வீட்டாரிடமும், பல இடங்களிலும் இருப்பதைக் காண்கிறோம். இந்த சுபாவம் இருக்குமாயின் எழுத்திற்குரிய யுத்தத்தில் மனுஷர் அழிகிறது போல, நாமும் அழிந்துவிடுவோம் என்பது எவ்வளவு பயங்கரமான நியாயத்தீர்ப்பாகும்! குடும்பங்களில் பலர் பிரிந்து ஜீவிப்பதும், சிலர் தாங்கள் குடியிருந்த வீடுகளை மாற்றி வேறு வீடுகளுக்குப் போவதும், சில இடங்களில் ஓர் சபை பிரிவினையடைந்து பல சபைகளாக மாறுவதும் இந்த யுத்தத்தினாலேயே. இவ்விதமாய் ஒருவருக்கொருவர் யுத்தமில்லாமல் இருக்க வேண்டுமானால், கொலோசெயர் 3:13ல் வாசிக்கிறதுபோல, ஒருவரையொருவர் தாங்கி, ஒருவர் பேரில் ஒருவருக்குக் குறைபாடு உண்டானால், கிறிஸ்து உங்களுக்கு மன்னித்தது போல, ஒருவருக்கொருவர் மன்னிக்க வேண்டும்.

ஆபிரகாமுடைய மந்தை மேய்ப்பருக்கும், லோத்துடைய மந்தை மேய்ப்பருக்கும் போராட்டங்கள் வந்தபோது, ஆபிரகாம் அந்த போராட்டங்களை மனதில் வையாமல் மன்னித்து, "எனக்கும் உனக்கும், என் மேய்ப்பருக்கும் உன் மேய்ப்பருக்கும்

வாக்குவாதம் வேண்டாம்; நாம் சகோதரர். இந்தத் தேசமெல்லாம் உனக்கு முன் இருக்கிறது அல்லவா? நீ என்னை விட்டுப் பிரிந்துபோகலாம்; நீ இடதுபுறம் போனால், நான் வலதுபுறம் போகிறேன்; நீ வலதுபுறம்போனால் நான் இடதுபுறம் போகிறேன்'' (ஆதி. 13:8,9) என்றான். அப்படிச் செய்தபடியால், அப்பொழுது அவர்கள் யுத்தமில்லாமலிருந்ததுமாத்திரமல்ல, பின்பு லோத்துக்கு வந்த பல கஷ்டநஷ்டங்களிலும் ஆபிரகாம் உதவி செய்யக்கூடியவனாயிருந்தான் என்பதை அடுத்த அதிகாரத்தில் காண்கிறோம். சகோதரரோடு யுத்தமில்லாமலிருப்பது எவ்வளவு பாக்கியம்!

(c) சபையில் விசேஷமாக நடத்துகிறவர்களுக்கு விரோதமாக யுத்தமபண்ணுவது. கொரிந்திய சபையார் பவுல் அப்போஸ்தலனை மாம்சத்தின்படி நடக்கிறவர் என்று எண்ணினர் (I கொரி. 10:2) அவ்விதமாகவே மோசேக்கு விரோதமாகவும பலமுறை இஸ்ரவேலர் எழும்பி, போராடினர். மோசேக்கு விரோதமாக பேசினதின் நிமித்தமாகவே, மிரியாம் குஷ்டரோகியானாள் (எண். 12:8-10). எண். 16 ஆம் அதிகாரத்தில் கோராகும், அவன் கூட்டத்தாரும், மோசேக்கும் ஆரோனுக்கும் விரோதமாகக் கூட்டங்கூடி, அவர்களை நோக்கி, ''நீங்கள் மிஞ்சிப்போகிறீர்கள்; சபையார் எல்லாரும் பரிசுத்தமானவர்கள்; கர்த்தர் அவர்கள் நடுவில் இருக்கிறாரே; இப்படியிருக்க, கர்த்தருடைய சபைக்குமேலாக உங்களை ஏன் உயர்த்து

கிறீர்கள் என்ருர்கள். மோசே அதைக் கேட்ட போது, முகங்குப்புறவிழுந்தான்'' (எண். 16:3,4). இவைகளை செவியுற்றதும், கண்ணுற்றதுமான தேவன் பூமியைப் பிளக்கப்பண்ணி, கோராகையும் அவன் கூட்டத்தார் முழுவதையும் விழுங்கப் பண்ணினதை அறிகிருேம். ஆகவே, சபையில் நடத்திப்புக்காரருக்கு விரோதமாக யுத்தம்பண்ணுவது எவ்வளவு பயங்கரம் என்பதை அறிந்துகொள்வீர்களாக! இதினிமித்தமாகவே, எபிரேயர் 13:17 ல், ''உங்களை நடத்துகிறவர்கள், உங்கள் ஆத்துமாக்களுக்காக உத்தரவாதம் பண்ணுகிறவர்களாய் விழித்திருக்கிறவர்களானபடியால், அவர்கள் துக்கத்தோடே அல்ல, சந்தோஷத்தோடே அதைச் செய்யும்படி, அவர்களுக்குக் கீழ்ப்படிந்து அடங்குங்கள்; அவர்கள் துக்கத்தோடே அப்படிச் செய்தால் அது உங்களுக்குப் பிரயோஜனமாயிருக்க மாட்டாதே'' என்று ஆவியானவர் எச்சரிக்கிருர். ஆகவே, நடத்திப்புக்காரருக்கு விரோதமாக மனதிலாயினும் யுத்தம் செய்து அவர்களைத் துக்கப்படுத்தாதபடிக்குக் கவனமாயிருங்கள். அவர்கள் துக்கப்பட்டு நம்மை நடத்திஞல் அது நமக்குப் பிரயோஜனமாயிருக்க மாட்டாதே!

மேற்கூறிய மூன்றுவித யுத்தங்களும் இருக்கும் போது, முதலாவதாக தேவனுடைய பிள்ளைகள் தங்களுக்குள் இளைப்பாறுதலாக இருக்க முடியாது. இரண்டாவதாக, அவர்கள் சத்துருக்களோடு யுத்தம் பண்ண முடியாது. உள்நாட்டில் கலகங்கள் இருக்கும்பொழுது ஜனங்கள் ஐக்கியமாக வெளி

நாட்டு யுத்தம் நடத்த முடியாது. கானான் தேசத்தில் ஜனம் பெருத்ததும், பலம் பெருத்தது மான ஜனங்களோடு இஸ்ரவேலர் யுத்தம்பண்ணி அத்தேசத்தைச் சுதந்தரிக்க வேண்டியது தேவ ஒழுங்கு. ஆகவே இளைப்பாறுதல் கிடைக்க, யுத்த மனுஷராகிய சண்டையிடும் ஆவி(பரிசுத்தப்படாத சுபாவம்) அழிக்கப்பட வேண்டும். இதினிமித்தமே, இவர்களைத் தேவன் வனாந்தரத்தில் கொண்டு வந்து, யுத்த மனுஷரை வனாந்தரத்தில் கொன்று, சத்துருக்களுக்கு எதிரே ஐக்கியத்தோடு நிற்கும் ஜனத்தை மாத்திரம் கானானுக்குள் பிரவேசிக்கப் பண்ணினார். ஆம்! வனாந்தரத்திலே யுத்த மனுஷரை அழிக்கவேண்டியது எத்தனை அத்தியாவசியம்!

தேவ சமுகம் நம்மோடுகூட இருக்கும்பொழுது நமக்கு ஆசீர்வாதங்கள் இருந்தாலும், மறுபக்கம் நிர்மூலம் அல்லது மரணம் சம்பவித்துக்கொண்டிருக்கும். இதை தேவன் தாமே பின்வருமாறு கூறுவதிலிருந்து நாம் அறிகிறோம். "நான் ஒரு தூதனை உங்களுக்கு முன்பாக அனுப்பி, கானானியனையும், எமோரியனையும், ஏத்தியனையும், பெரிசியனையும், ஏவியனையும், எபூசியனையும் துரத்திவிடுவேன் ஆனாலும் வழியிலே நான் உங்களை நிர்மூலம் பண்ணாதபடிக்கு, நான் உங்கள் நடுவே செல்லமாட்டேன்" (யாத். 33:2, 3). ஆம்! அவர் நம்மோடு கூட வருவாரானால், யுத்த மனுஷரை அதாவது பரிசுத்தமாக்கப்படாத சுபாவங்களை நிர்மூலமாக்கிக் கொண்டிருப்பார். அப்படி தேவன்

நிர்மூலம்பண்ணி, பரிசுத்தப்படுத்தும்போது, யுத்தங்களில் மனுஷர் எண்ணிக்கை குறைந்துபோவது போல், பூமிக்குரிய சரீர நன்மைகள் குறைந்து போகும். இவ்வித குறைவுகளை விரும்பாத பலர் தேவன் தங்களோடு வராவிட்டாலும், அவர் சொன்னதுபோல் அவருடைய தூதனுடைய பிரசன்னத்தால், அதாவது குறைந்த ஆசீர்வாதங்களாகிய பூமிக்குரிய நன்மைகளால் திருப்தியாக இருக்கிறார்கள். அன்றியும், தூதன் கூட வரும்போது மேற்கூறிய ஆறு ஜாதிகளை மாத்திரம் நிர்மூலம் பண்ணுவானேயன்றி, கானானில் உள்ள ஏழு ஜாதிகளையும் நிர்மூலம்பண்ணமாட்டான். ஆனால், தேவன் கூட வரும்போது, அவர் ஏழு ஜாதிகளையும் துரத்துவாரென்று உபா. 7:1-ல் பார்க்கிறோம். இது பூரண ஜெய ஜீவியத்தைக் காட்டுகிறது. சிலர் இப்பூரணத்தைக் குறித்துள்ள தரிசனம் இல்லாமையாலும், தேவன் நிர்மூலம் பண்ணுவதை விரும்பாதபடியினாலும், தூதனாலுள்ள அபூரண ஜெய ஜீவியத்தில் திருப்தியாயிருக்கிறார்கள். ஆனால் மோசே குறைந்த ஆசீர்வாதமாகிய தூதனுடைய பிரசன்னத்தால் திருப்தியாயிராது. "உம்முடைய சமுகம் என்னோடே கூடச்செல்லாமற் போனால், எங்களை இவ்விடத்திலிருந்து கொண்டுபோகாதிரும். எனக்கும் உமது ஜனங்களுக்கும் உம்முடைய கண்களிலே கிருபை கிடைத்ததென்பது எதினால் அறியப்படும்? நீர் எங்களோடே வருவதினால் அல்லவா?" (யாத். 33:15,16) என்று தேவனை கட்டாயமாய் தங்களுடன் வரும்

படி அழைக்கிறார். தேவன் அதற்கிசைய அவர்களுடன் சென்று. இச்சித்தவர்களையும், விக்கிரகாராதனைக்காரராகிய பொருளாசைக்காரர், முரட்டாட்டம் பண்ணுகிறவர்கள் முதலியோரையும், வேசித்தனம் பண்ணினவர்களையும், பரீட்சைப் பார்த்தவர்களையும், முறுமுறுத்தவர்களையும், வனாந்தரத்திலே நிர்மூலம்பண்ணி, மீந்தவர்களுக்கு கானானைக் கொடுத்தார். அப்படியே, வறுமை, வியாதி, நிந்தை முதலிய வனாந்தர வழியாக தேவன் நம்மை நடத்தி, நம்முடைய பரிசுத்தப் படாத சுபாவங்களை நிர்மூலம் பண்ணி நம்மை பரம கானானில் சேர்க்க உண்மையுள்ளவராயிருக்கிறார். ஆகவே, பரிசுத்தப்படாத சுபாவங்கள் அழியும் பொருட்டாக வனாந்தர ஜீவியம் இன்றியமையாதது.

தேவன் இஸ்ரவேலரை வனாந்தரத்தில் சுற்றித்திரியப்பண்ணி கானானுக்குள் கொண்டுவராது, இலகுவான வழியில் கொண்டுவர முயன்றிருப்பாராயின், அவர்கள் மனமடிவுள்ளவர்களாகவும், தங்கள் இருதயத்திலுள்ளதை தாங்கள் அறியாதவர்களாகவும், பிரமாணங்கள், நியமங்கள் இல்லாதவர்களாகவும், பரிசுத்தப்படாத யுத்த மனுஷர்களாகவும் இருந்திருப்பார்கள். நம்மையும் தேவன் இவ்விதமான காரியங்களில் பரிசுத்தப் படுத்தி, கிறிஸ்துவின் பூரணத்தை நாம் சுதந்தரிக்கும்படியாக, நம்மை வனாந்தரமாகிய பலவித சோதனைகளின் வழியாக நடத்துகிறார். அவ்வித சோதனைகளாகிய வனாந்தர வழியாக தேவன்

நடத்தும்போது "நீங்கள் பலவிதமான சோதனைகளில் அகப்படும்போது, உங்கள் விசுவாசத்தின் பரீட்சையானது பொறுமையை உண்டாக்குமென்று அறிந்து, அதை மிகுந்த சந்தோஷமாக எண்ணுங்கள்" என்று யாக்கோபு அப்போஸ்தலன் தன் நிருபத்தில் (யாக். 1:2, 3) கூறியதுபோல், மிகுந்த சந்தோஷமாக இருக்க தேவன் உதவி செய்வாராக.

இந்த வனாந்தரத்தில் இஸ்ரவேலர் பசியினால் சோர்ந்து போகாமலிருக்கும் பொருட்டு, தேவன் அவர்களுக்கு "மன்னாவை"க் கொடுத்ததை நாம் அறிவோமே. ஆகவே, இனி இம் 'மன்னா'வைக் குறித்து ஆராய்வோமாக.

பாகம்-2

கர்த்தருக்கு ஸ்தோத்திரம்.

மன்னு

அதிகாரம் I

மன்னுவைப் பெற்றுக் கொள்வது.

இஸ்ரவேல் ஜனங்கள், ஏலிமிலுள்ள பன்னிரண்டு நீரூற்றுகளின் ஆசீர்வாதங்களையும், எழுபது பேரீச்ச மரங்களின் நன்மைகளையும் பெற்ற பின்பு, தேவன் அவர்களை சீன்வனுந்தரத்திற்குக் கொண்டு வந்தார். ஒரு பகலுக்குப்பின் இரவையும், ஒரு பள்ளத்திற்குப்பின் மேட்டையும், மனுஷனுடைய நன்மைக்காக தேவன் சிருஷ்டித்திருப்பதுபோல, ஏலிமின் நன்மைக்குப்பின் இவர்களை வனுந்தரத்திற்குக் கொண்டுவருவது தேவனுடைய பார்வைக்கு நன்மையாக இருந்தது. இரவும் பகலும், கர்த்தருடைய பார்வையில் ஒன்றுபோல் இருக்கிறது. (சங். 139:12). மலைகளையும், பள்ளத்தாக்குகளையும் உண்டாக்கி கானுனை செழிப்பாக்கி வைத்திருக்கிறுர். (உபா. 11:11) இரவையும் பகலையும் ஒரேவிதமாகப் பார்க்கும் தேவன் இவர்கள் வனுந்தரமாகிய இரவில் எப்படி முகங்காட்டுகிறுர்கள் என்பதை சோதித்து அறிய சித்தங் கொண்டார். அவர்களோ, வனுந்தரத்தில் பிரவேசித்தபின்பு தேவனுக்கும், மோசேக்கும், ஆரோனுக்கும் விரோதமாக ஆகாரத்திற்காக முறுமுறுக்கத் தொடங்கினர்.

அவர்கள் ஆகாரத்திற்காக முறுமுறுக்க அவசியம் இருக்கவில்லை. ஒரு பிரயாணத்திற்குப் போகும்பொழுது, நமக்கும் நம் பிள்ளைகளுக்கும் உரிய ஆகாரத்தைக் குறித்து சிந்தியாமல் நாம் போவதில்லை. ஆகாரம் வாங்குவதற்காக பணத்தைக் கையில் கொண்டு போகிறோம். தேவைக்கேற்ப ஆகாரம் வாங்கிக்கொள்ள வசதியற்ற பிரயாணமாயிருந்தால், கட்டுச்சாதமோ, அல்லது பலகாரங்கள், பால் மற்றும் ஆகாரங்களையோ நம் பிள்ளைகளுக்காக ஆயத்தம் பண்ணிக்கொண்டு போகிறோம். பாவ மனுஷராகிய நமக்கு நம் பிரயாணத்தைக் குறித்துள்ள அறிவும், நம் பிள்ளைகளைக் குறித்துள்ள அன்பும் இருக்குமானால், நம் பரலோக தகப்பனுக்கு இன்னமும் எவ்வளவு அதிகமாக அறிவும் அன்பும் இருக்கும்! ஆதாமையும் ஏவாளையும் சிருஷ்டிக்கும் முன்பாகவே, அவர்களுக்குத் தேவையான ஆகாரத்தைக் கொடுக்கும் தோட்டத்தை தேவன் உண்டுபண்ணி வைத்திருந்தார் என்பதிலிருந்து இது நிரூபிக்கப்படுகிறது. அப்படியே ஆகார் பெயர்செபாவின் வனாந்தரத்தில் தண்ணீருக்காக அலைய முன் நீரூற்றை ஆயத்தப்படுத்தி வைத்திருந்தார். ஆம்! நம் தேவனுக்கு மேலான அறிவும், அன்பும் உண்டு. அத்துடன் பரிசுத்த பவுல், "போரடிக்கிற மாட்டை வாய் கட்டாயாக" என்னும் மோசேயின் பிரமாணத்திலுள்ள வாக்கை எழுதி, தேவன் நம் ஆகாரத்திற்காகக் கவலைப்படுகிறார் என்று விளக்கிக்காட்டுகிறார். (I கொரி. 9:9,10).

நம் ஆகாரத்திற்காகக் கவலைப்படும் தேவன் இவர்களுக்கு மன்னாவை வானத்தின் தானியமாகவும், தூதர்களின் அப்பமாகவும் ஆயத்தமாக்கி வானத்தில் வைத்திருந்தார். ஆதாமையும், ஏவாளையும் சிருஷ்டிக்கும் முன்பாகவே அவர்களுக்கு ஆகாரத்தை ஆயத்தமாக்கி வைத்திருந்த தேவனைக் குறித்து அறிந்திருந்த இஸ்ரவேலர், முறுமுறுக்காமல் இருந்திருக்கலாம். அவர்களுக்கு பசியுண்டான போது, முறுமுறுக்காமல், பசித்தபிள்ளை தகப்பனிடத்தில் ஆகாரம் கேட்பதுபோல, அவர்கள் ஜெபம் பண்ணியிருப்பார்களேயாயின் தேவன் துக்கப்பட்டிருக்கமாட்டார். தேவனுக்குப் பசியில்லாவிட்டாலும், மனுஷனின் பசியின் கொடுமையை நன்கு அறிவார். ஆகையால் ஆகாரத்திற்காக ஜெபிப்பது தவறன்று. கர்த்தருடைய ஜெபத்திலும், "எங்களுக்கு வேண்டிய ஆகாரத்தை இன்று எங்களுக்குத் தாரும்" என்று நம்முடைய மீட்பர் ஜெபிக்கக் கற்றுக்கொடுத்தார். இவ்வளவு அன்புள்ள தகப்பனின் தன்மையை உணராத இஸ்ரவேலர் முறுமுறுத்ததைக் கேட்ட தேவன், "இஸ்ரவேல்புத்திரரின் முறுமுறுப்புகளைக் கேட்டிருக்கிறேன்" (யாத். 16:12) என்று கூறித் துக்கப்படுகிறார். இம்முறுமுறுப்பைக் குறித்து மோசேயும், "உங்கள் முறுமுறுப்புக்கள் எங்களுக்கு அல்ல, கர்த்தருக்கே விரோதமாய் இருக்கிறது" (யாத். 16:8) என்றும், "கர்த்தருக்கு விரோதமான உங்கள் முறுமுறுப்புகளை அவர் கேட்டார்" (யாத். 16:7) என்றும் கூறித் துக்கப்படுகிறார். தேவன்

அவர்களுக்குக் கொடுப்பதற்கென்று ஆயத்தமாக வைத்திருந்த மன்னுவை, இயேசு கற்றுக் கொடுத்ததுபோல ஜெபித்துப் பெற்றுக் கொண்டிருப்பார் களேயாயின் நலமாக இருந்திருக்கும்.

தகப்பன் தன் பிள்ளைகளுக்குச் செய்யவேண்டியதை ஏற்ற வேளையில் ஏற்றவிதமாக செய்ய அறிவான். பிள்ளை முறுமுறுக்கும்பொழுது அல்லது கீழ்ப்படியாமலிருக்கும்போது உத்தம தகப்பன் துக்கத்தாலோ, கோபத்தாலோ செய்யவேண்டியதைச் செய்யாமல் இருப்பதில்லை. செய்யாமலிருக்கவும் கூடாது. ஆகவே தகப்பன் என்கிற உத்திரவாதத்தின் நிமித்தம் அவன் செய்ய வேண்யதைச் செய்கிறுன். அவ்விதமாக தகப்பன் துக்கத்தோடு தன் கடமையைச் செய்தாலும், அதை அந்த மகன் அனுபவித்தாலும் அது அவனுக்குப் ''பிரயோஜனமாயிருக்கமாட்டாதே' என்று எபி. 13:17-ல் வாசிக்கிறேம். உதாரணமாக, லூக்கா 15 ஆம் அதிகாரத்தில் இயேசு சொன்ன உவமையில் கெட்டகுமாரன் முறுமுறுத்ததினிமித்தம் அவனுக்கு கொடுப்பதற்கென்று வைத்திருந்ததை தகப்பன் கொடுத்தார். ஆனல் அது அவனுக்கு பிரயோஜனமாயிருக்கவில்லை. அவ்விதமே இஸ்ரவேலர், நித்தியபிதா அன்பின் நிமித்தம் அவர்களுக்குச் செய்யும்படியாக வைத்திருந்த நன்மையை ஜெபத்தின் மூலம் பெற்றுக்கொள்ளாது முறுமுறுத்துப் பெற்றுக் கொண்டனர், ஆகவே எபி.13:17ல், ''பிரயோஜனமாயிருக்கமாட்டாதே''

என்று வாசிப்பதுபோல, இஸ்ரவேலர் இந்த நேர்த்தியான உணவை உண்டு, அவர்கள் பார்வைக்கு அது நன்மையாக இருந்தாலும், தேவனுடைய மனதில் இருந்தபடி அது அவர்களுக்குப் பிரயோஜனமாயிருக்கவில்லை. இதை பின்வரும் வசனங்கள் மூலம் அறிகிறோம். "வனாந்தரத்திலே இச்சையுள்ளவர்களாகி, அவாந்தரவெளியிலே தேவனைப் பரீட்சைபார்த்தார்கள். அப்பொழுது அவர்கள் கேட்டதை அவர்களுக்குக் கொடுத்தார், அவர்கள் ஆத்துமாக்களிலோ இளைப்பை அனுப்பினார்" (சங். 106:14, 15). அப்படியே கெட்டக்குமாரன் தகப்பனிடத்திலிருந்து பெற்றுக்கொண்ட ஆஸ்தி, அவனுக்கு நன்மையாகத் தோன்றியது. அவன் சந்தோஷமாக தூரதேசம் போகப் புறப்பட்டான். ஆனால் அவன் தன் தகப்பனிடத்தில் மறுபடியும் திரும்பி வரும்போது, "தகப்பனே, பரத்துக்கு விரோதமாகவும், உமக்கு முன்பாகவும் பாவஞ் செய்தேன், இனிமேல் உம்முடைய குமாரன் என்று சொல்லப்படுவதற்கு நான் பாத்திரன் அல்ல" (லூக். 15:21) என்று கூறினான். இவ்விதம் தான் குமாரன் என்று அழைக்கப்படும் தைரியத்தை இழந்து, ஆத்துமாவில் இளைப்பைப் பெற்றுக் கொண்டு திரும்பி வந்தான். இதை நாம் உணர்ந்து, அவர் தகப்பனைப்போல நம்மை விசாரித்து (1 பேது. 5:7) ஆதரிக்கிறவர் (சங். 55:22) என்று அறிந்து, தேவைகள், கவலைகள் வரும்போது முறுமுறுக்காமல் ஜெபிக்கப் பழகுவோமாக. அன்றியும் ஆவியானவர் புதிய ஏற்பாட்டு சபையில் புதிய ஏற்பாட்டின் காலத்தில் இருக்கும் நம்

மிடம் அநேக நூற்றாண்டுகளுக்குப் பின்பு, 1கொரி. 10-ஆம் அதிகாரம் 10-ஆம் வசனத்தில் இஸ்ரவேலரைச் சுட்டிக் காட்டி, "அவர்களில் சிலர் முறுமுறுத்து சங்காரக்காரனாலே அழிக்கப்பட்டார்கள்; அதுபோல நீங்களும் முறுமுறுக்காதிருங்கள்" என்று கூறி நம்மை எச்சரிக்கிறார்.

அதிகாரம் II

மன்னா — இயேசு

இயேசு தாமே தம் வாயினால், "நானே வானத்திலிருந்திறங்கின ஜீவ அப்பம்" (யோவான் 6:51) என்பதால், தேவன் இஸ்ரவேலருக்கு ஆயத்தமாக்கி வைத்திருந்த இம்மேன்மையான மன்னா, புதிய ஏற்பாட்டின் காலத்தில், நம் வனாந்தர ஜீவியத்திற்கு மிகத் தேவையான இயேசுவைக் காட்டுகிறது என அறிகிறோம்.

அன்றியும் இம்மன்னாவானது ஆசரிப்புக் கூடாரத்திலிருந்த உடன்படிக்கைப் பெட்டியில் ஒரு பொற்கலசத்தில் இஸ்ரவேலருடைய சந்ததியாருக்காக காப்பதற்கு வைக்கப்பட்டிருந்தது. (யாத். 16:32, 33; எபி. 9:4). விசுவாசமாகிய பொன்னினால் நம் இருதயங்கள் பரிசுத்தமாக்கப்பட்டு (அப். 15:9), நாம் விசுவாசத்தில் வளர்ந்து தெய்வீக சுகத்தை அனுபவித்து, உலக வெறுப்புள்ளவர்களாகும்போது, நாம் பொற்பாத்திரமாக

விளங்குகிறோம் (புல. 4:2). அவ்விதம் பொற்பாத்திரமாகும்போது பொற்பாத்திரத்தில் இயேசுவாகிய மன்னுவைக் குறித்த வெளிப்படுத்தல் தொடர்ந்து வந்துக்கொண்டிருக்கிறது. இதற்காகத்தான் பரி. பவுல், "கர்த்தராகிய கிறிஸ்து இயேசுவை அறிகிற அறிவின் மேன்மை"யை (பிலி. 3:8) அடையும் பொருட்டாக உலகத்திலுள்ளவைகளை நஷ்டமென்று எண்ணிக்கொண்டிருந்தார். அவர் அப்படிச் செய்தபடியால், பொற்பாத்திரமாகிய அவருக்கு கிறிஸ்துவை அறிகிற அறிவின் மேன்மையாகிய மன்னு கிடைத்தது. இந்த அறிவு அல்லது இயேசுவைக் குறித்த வெளிப்படுத்தல் மூலமாக, அவரை அறிகிற அறிவின் வாசனையை, அவருடைய சந்ததியாராகிய நமக்கு வெளிப்படுததுகிருர் (II கொரி. 2:14). நாமும் இவ்விதம் இந்த மன்னுவாகிய இயேசுவினுல் வருகிற வெளிப்படுத்தலாகிய அறிவை என்றென்றைக்கும் மற்றவர்களுக்குக் கொடுக்கக் கடமைப்பட்டுள்ளோம். மன்னு பொற்கலசத்தில் வைக்கப்பட்டதைக் குறித்தே பரி. பவுல், "கிறிஸ்துவானவர்...... உங்களுக்குள் இருப்பதே அந்த இரகசியம்" (கொலோ. 1:28) என்கிருர்.

இம்மன்னுவாகிய கிறிஸ்து ஒரு இரகசியமாக இருப்பதாலேயே வெளி. 2:17-ல், "மறைவான மன்னு" என்று வாசிக்கிறோம். பரி. பவுலும் எபே. 3:5-ல் "கிறிஸ்துவின் இரகசியம்" என்கிருர். இந்த இரகசியம் அல்லது மறைவான மன்னு பரிபூரண ஜெய ஜீவியம் செய்கிறவர்களுக்கு மாத்

திரமே வெளிப்படுத்தப்படுகிறது என்பது "ஜெயங்கொள்ளுகிறவனுக்கு நான் மறைவான மன்னாவைப் புசிக்கக் கொடுத்து" என்பதிலிருந்து புலனாகிறது. ஆகவே, "இந்த இரகசியம் இப்பொழுது அவருடைய பரிசுத்த அப்போஸ்தலருக்கு...... வெளிப்படுத்தப்பட்டிருக்கிறது" (எபே. 3:6) என்றும் வாசிக்கிறோம். எனவே, இந்த மறைந்திருக்கும் வெளிப்படுத்தலைப் பெற்றுக் கொள்வதற்காக, ஜீவியத்தில் எல்லாவற்றிலும் ஜெய ஜீவியம் செய்ய நம்மை நாம் ஒப்புக் கொடுக்கவேண்டும். கர்த்தர் அதற்கு உதவி செய்வாராக!

இம்மன்னாவாகிய இயேசு வானத்திலிருந்து பூமிக்கு வந்ததைக் குறித்து எண். 11:9-இல், "இரவிலே பாளயத்தின்மேல் பனிபெய்யும்போது மன்னாவும் அதின்மேல் விழும்" என்றும், யாத். 16:13, 14 இல், 'விடியற்காலத்தில் பாளயத்தைச் சுற்றிப் பனி பெய்திருந்தது. பெய்திருந்த பனி நீங்கினபின், இதோ, வனாந்தரத்தின் மீதெங்கும் உருட்சியான ஒரு சிறிய வஸ்து உறைந்த பனிக்கட்டிப் பொடியத்தனையாய் தரையின் மேல்கிடந்தது" என்றும் வாசிக்கிறோம். இவ்விரண்டு வசனங்களையும் வாசிக்கும்பொழுது, எண்ணாகமத்தில் பனியின்மேல் விழும் என்றும், யாத்திராகமத்தில் தரையின்மேல் கிடக்கும் என்றும் வாசிக்கிறோம். இது நம்முடைய மனதை சிறிது குழப்பக்கூடும். இக்குழப்பம், கர்த்தருடைய வசனம் சத்தியமோ என்னும் சந்தேகத்தையும் சில தடவைகளில் பிறப்பித்துவிடும்

ஆனல் தேவ வசனம் குழப்பத்திற்கும் சந்தேகத்திற்கும் உரியதல்ல. ஏசாயா 34:16ன் படி கர்த்தருடைய வசனங்கள் ஆங்காங்கே சிதறி இருக்கும் என்றும், "அவருடைய ஆவி அவைகளைச் சேர்க்கும்" என்றும் அறிகிறேம். ஆகவே பரிசுத்தாவியானவருடைய உதவியால் இதைப் படிக்கும்போது, இவ்வித குழப்பங்கள், சந்தேகங்கள் நீங்கி கர்த்தருடைய வசனம் எவ்வளவு ஆச்சரியமானது என்று அறிந்து கொள்கிறேம் அப்போது, தாவீதுடன் சேர்ந்து, "உம்முடைய கற்பனைகளை நான் வாஞ்சிக்கிறபடியால், என் வாயை ஆவென்று திறந்து அவைகளுக்கு ஏங்குகிறேன்" (சங். 119:131) என்று நாமும் கூறக்கூடும். பரிசுத்த ஆவியானவரின் உதவியால் ஆராயும்போது பின்வரும் சத்தியத்தை அறிந்து கொள்கிறேம்.

ஓசியா 14:5ல், "நான் இஸ்ரவேலுக்குப் பனியைப் போலிருப்பேன்" என்று வாசிக்கிறேம். இங்கு பிதாவாகிய தேவன் இஸ்ரவேலருக்குப் பனியாக இருந்திருக்கிருர். இது இஸ்ரவேலருக்கு வனந்தரத்தில் பெய்த பனியாகும். யாத்திராகமத்தில், "பனி நீங்கின பின்பு...... தரையின்மேல் கிடந்தது" என்று வாசிக்கிறேம். எண்ணாகமத்தில் பனியின்மேல் மன்ன விழும் என்று வாசித்தாலும், இங்கு பனி நீங்கினபின்பு தரையின்மேல் கிடந்தது என்பதையும் கவனிக்க வேண்டும். பிதாவாகிய தேவனுடைய காலத்திற்குப் பின்பு குமாரனுகிய மன்ன பூமிக்கு வந்தார். இதை நிரூபிக்க அப்

போஸ்தலனுகிய பவுல் கலாத்தியருக்கு எழுதும்போது, "காலம் நிறைவேறினபோது,……… தம்முடைய குமாரனைத் தேவன் அனுப்பினுர்" (4:5) என்று எழுதுகிருர். இவ்வசனத்தோடு, எபே. 1:9 ஐ சேர்த்து ஆராயவேண்டிய அவசியம் ஏற்பட்டிருக்கிறது "காலங்கள் நிறைவேறும்போது விளங்கும் நியமத்தின்படி பரலோகத்திலிருக்கிறவைகளும் பூலோகத்திலிருக்கிறவைகளுமாகிய சகலமும் கிறிஸ்துவுக்குள்ளே கூட்டப்படவேண்டுமென்று' கூறப்பட்டிருக்கிறது. இங்கு காலம் என்று சொல்லப்படாமல், 'காலங்கள்' என்று சொல்லப்பட்டிருக்கிறது. இந்தக்காலங்கள் இயேசு கிறிஸ்துவுக்குப் பின்பு உள்ள முக்கிய காலங்களாகியசபையின் காலம் (கிருபையின் காலம்), 7 வருட உபத்திரவ காலம், ஆயிர வருட அரசாட்சியின் காலம் முதலியவற்றைக் காட்டுகின்றனவென்பது வேத ஆராய்ச்சியாளர் யாவரும் ஒத்துக்கொள்ளும் ஓர் சத்தியம். அதை நிரூபிக்க, "காலங்கள் நிறைவேறும்போது …… கூட்டப்படவேண்டுமென்று" எழுதுவதால் அது வருங்காலத்தைக் காட்டுகின்றதென்பது உள்ளங்கை நெல்லிக் கனி. ஆனுல் கலா. 4 : 5-ல் 'காலம்நிறைவேறினபோது' என்று எழுதுவதால், இது கடந்த காலத்தைக் காட்டுகின்றதென்றும் அறிகிருேம். ஆகவே இம் மன்னுவாகிய கிறிஸ்து, பிதாவின் காலமாகிய பனிக்குப் பின்பு (நீங்கினபின்) நமக்கு மன்னுவாகத் தோன்றினுர் என்பது எவ்வளவு வெளியரங்கமாக விளங்குகிறது

அன்றியும் இம் மன்னுவானது இஸ்ரவேலருக்காக முன் குறிக்கப்பட்டு ஆயத்தமாக்கப்பட்டிருந்தது. அப்படியே நம்முடைய மீட்பராகிய இயேசுவும் நம் நித்திய அநித்திய ஆசீர்வாதங்களுக்காக உலகத்தோற்றத்திற்கு முன்னமே முன் குறிக்கப்பட்டு, நமக்காக வெளிப்பட்டார் என்று I பேது. 1:20ல் வாசிக்கிறேம். ஆகவே இம்மன்னுவின் தன்மைகளைக்குறித்து நாம் ஆராயவேண்டியது இன்றியமையாதது ஆகும்.

அதிகாரம் III

மன்னுவின் தன்மைகள்

1. மன்னு வானத்தின் அப்பமாக இருந்தது.

மன்னு வானத்தின் அப்பமாக இருந்ததாக "வான அப்பத்தினுலும் அவர்களைத் திருப்தியாக்கினுர்" என்று சங் 105:40 ல் வாசிக்கிறேம். இயேசு இவ்வுலகில் இருந்தபோது தான் வானத்திலிருந்துவந்த அப்பம் என்று யோவான் 6:51ல் கூறினுர். ஆம்! அவர் நித்திய பிதாவாயிருந்து வானமாகிய தம்முடைய சிங்காசனத்திலிருந்து நம்மைப் போஷிக்கும்படியாக பூலோகத்திற்கு வந்தது சந்தேகிக்க இடமற்ற சத்தியமே!

வனந்தரத்தில் விதைப்பும் அறுப்பும் இல்லை. ஆகவே அங்கு ஆகாரத்திற்கு எவ்வித வழியுமில்லை

அப்பம் புசியாத மனுஷன் பெலவீனம் அடைந்து சாகக்கூடும் என்று 1 சாமு 30:11,12ன் மூலமும், சோர்ந்துபோவான் என்று மத். 15:32ன் மூலமும் அறிகிறோம். ஆகையால் இரக்கமுள்ள தேவன் அவர்கள் வனாந்தர ஜீவியம் செய்த 40 வருடங்களும் இவ்வப்பத்தைக் குறைவின்றி நிறைவாகக் கொடுத்தார். நம் வனாந்தர ஜீவியத்திலும் சோர்வும், மரணமும் சம்பவியாதபடி, இவ்வப்பமாகிய கிறிஸ்து நமக்குத் தேவை. இயேசுவாகிய இந்த மன்னாவைத் தவிர நம்மை பெலப்படுத்தக்கூடியது வேறொன்றும் இல்லை. இதையறிந்த தாவீது, "பரலோகத்தில் உம்மையல்லாமல் எனக்கு யார் உண்டு? பூலோகத்தில் உம்மைத் தவிர எனக்கு வேறே விருப்பமில்லை" (சங். 73:25) என்கிறார். ஆகாரத்தினால் ஜீவன் ஒரு மனுஷனுக்குள் நிலைத்திருக்கிறது. ஆகவே பரி. பவுல், "கிறிஸ்து எனக்கு ஜீவன்" (பிலி. 1:21) என்கிறார். அன்றியும் சீஷர்கள், "ஆண்டவரே, யாரிடத்தில் போவோம், நித்தியஜீவ வசனங்கள் உம்மிடத்தில் உண்டே" (யோவான் 6:68) என்கிறார்கள். நாம் பசியினால் மரணமடையாது, இவ்வப்பத்தினால் ஜீவன் பெற்றுக்கொள்வோம் என்பதை நிரூபிக்க, யோவான் தன் சுவிசேஷத்தில், "தேவன், தம்முடைய ஒரேபேறான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப்போகாமல் நித்தியஜீவனை அடையும்படிக்கு, அவரைத் தந்தருளி, இவ்வளவாய் உலகத்தில் அன்புகூர்ந்தார்" (3:16) என்கிறார். இஸ்ரவேலர் பசியினால் அழிந்துபோகாது

வனாந்தரத்தில் இம்மன்னுவை நாள்தோறும் புசித்து கானானில் பிரவேசித்ததுபோல, நாமும் நாள்தோறும் இயேசுவைப்புசித்து நித்தியஜீவனை அடைவோமாக.

2. மன்னு வானத்தின் தானியமாக இருந்தது.

மன்னு வானத்தின் தானியமாக இருந்ததாக, "மன்னுவை அவர்களுக்கு ஆகாரமாக வருஷிக்கப் பண்ணி, வானத்தின் தானியத்தை அவர்களுக்குக் கொடுத்தார்" என்று சங். 78:24ல் வாசிக்கிறோம். தானியத்தை இரண்டுவிதங்களில் உபயோகிக்கிறோம். முதலாவதாக ஆகாரத்திற்காகவும், இரண்டாவதாக விதைக்காகவும் உபயோகிக்கிறோம். ஒருவன் ஒரு கிலோ கோதுமையை ஆகாரத்திற்காக மாவாக்கும் போது, மாவான பின்பும் ஒரு கிலோவாகவே இருக்கிறது. வேறொருவன் ஒரு கிலோ கோதுமையை விதைக்காக உபயோகிக்கும்பொழுது, இத்தானியமானது பயிராகி. பின்பு பன்மடங்காகப் பெருகுகிறது.

அப்படியே இயேசுவை நமக்கு ஆகாரத்திற்கு அப்பமாக உபயோகித்து சோர்ந்துபோகாமல் நம்மை நாமே பெலப்படுத்தி நித்தியஜீவனுக்கு நம்மை ஆயத்தப்படுத்திக்கொள்ள வேண்டும். அத்துடன் அவரை விதையாகவும் உபயோகிக்க வேண்டும். விதையை மற்றவர்களுடைய பிரயோஜனத்திற்காக விதைத்து பெருக்குவது போல, இயேசுவைக் குறித்து மற்றவர்களுக்கு நாம் சொல்ல வேண்டும்

இவ்விதம் இயேசுவை நாம் விதைக்கும்போது விதை ஒன்று பலவாக பெருகுவதுபோல இயேசு பெருகுகிறார். ஆதி அப்போஸ்தலர்களும், இன்றும் பல பரிசுத்தவான்களும் இந்த இயேசுவை காடு கரைகளிலும், தீவுகளிலும், நாடுநகரங்களிலும் விதைத்துக் கொண்டிருப்பதாலேயே இயேசுவின் நாமம் முழு உலகிலும் பரவிக்கொண்டு வருகிறது. விதைக்கிறவன் பலபாடுகள் பட்டு விதைக்கிறான். ஆகவே, "கண்ணீரோடே விதைக்கிறவர்கள்" (சங். 126:5) என்று வாசிக்கிறோம். அக்காலத்திலும் இக்காலத்திலும் இயேசுவையும் அவருடைய சுவிசேஷத்தையும் விதைக்கிறவர்கள் பல பாடுகள் அனுபவித்தும், அனுபவித்துக்கொண்டும் இருக்கின்றனர். அப்போஸ்தலனாகிய பவுல் காலாத்தியருக்கு பெலவீனம், கண்ணீர் முதலியவற்றோடு சுவிசேஷத்தைப் பிரசங்கித்தார் என்பதை, "நான் சரீர பலவீனத்தோடு முதலாந்தரம் உங்களுக்குச் சுவிசேஷத்தைப் பிரசங்கித்தேன்" (4:13) என்று கூறுவதிலிருந்து அறிகிறோம். அத்துடன் கொரிந்தியருக்கு நிருபத்தை எழுதும்போது, "மிகுந்த வியாகுலமும் மன இடுக்கமும் அடைந்தவனாய் அதிக கண்ணீரோடே உங்களுக்கு எழுதினேன்" (II கொரி. 2:4) என்று சொல்வதால், கண்ணீரோடு விதைத்தார் என்று அறிகிறோம். அன்றியும் எபேசுவிலும் கண்ணீரோடும், வேதனையோடும் இம்மன்னாவை விதைக்கும்படியாக பாடுபட்டதாக அறிகிறோம். அப் 20:19.31. ஒரு சிலர் விதைத்து அவ்விதை பயிரானபின்பு, அப்பயிரைக் குறித்துக்

கவனமற்றிருக்கிறபடியால், பலவிதங்களிலும் பயிர் சேதமடைந்து அறுவடை இல்லாமற் போகிறது. இப்பெரும் பிழையைப் பல சுயாதீன பிரசங்கிகள் செய்கின்றனர். பயிரான அல்லது இரட்சிக்கப்பட்ட ஜனங்களை தாங்கள் பாதுகாக்காமலும், பாதுகாக்கும் மற்ற தோட்டக்காரரிடம் ஒப்படையாமலும் இருப்பதால், மிருக சுபாவமான மனுஷர் இப்பயிரை அழித்துப்போடுகின்றனர். இவ்விதமாக நித்தியஜீவனைப்பெற்று, பின்பு அதை இழந்த பெருங்கூட்டமான ஜனங்கள் இவ்வுலகில் உண்டு. சங்கீதக்காரன், "கண்ணீரோடு விதைக்கிறவர்கள்" என்று கூறி நிறுத்திவிடாது, "கண்ணீரோடு விதைக்கிறவர்கள் கெம்பீரத்தோடே அறுப்பார்கள்" என்று மேற்கூறிய வசனத்தில் கூறுகிறார். ஆகவே கண்ணீரோடு விதைக்கிறவன் தோட்டக்காரனாக இருக்க வேண்டும். அல்லது தோட்டக்காரனிடம் ஒப்படைக்க வேண்டும் இதையறிந்த பரிசுத்த பவுல் முன்பு நாம் பார்த்த அந்த சபைகளிலும், இன்னும் பல இடங்களிலும் கண்ணீரோடு விதைத்தது மாத்திரமல்ல, அவ்வாத்துமாக்களுக்கு புத்தி சொல்லியும், கண்டித்தும், நிருபங்கள் எழுதியும், மூப்பர்களை சபையில் ஏற்படுத்தியும் இப்பயிர்களை வளரச் செய்தார். அவ்விதமாக தன்னால் விதைக்கப்பட்டதும், உத்தம ஊழியராகிய தோட்டக்காரரால் பாதுகாக்கப்பட்டதுமான பயிர்களாகிய ஆத்துமாக்களின் ஆவிக்குரிய வளர்ச்சி, பரிசுத்தம் முதலியவைகளைக் கண்டு விதைத்தவனும், உத்தம ஊழியக்காரராகிய

தோட்டக்காரரும் சந்தோஷமடைகின்றனர். அத்துடன் அவர்களிடமிருந்து பல நன்மைகளையும் பெற்றுக்கொள்கின்றனர். சங்கீதக்காரன் "கெம்பீரத்தோடே அறுப்பார்கள்" என்று சொல்வதை பரி. பவுல், "எங்களுக்கு நம்பிக்கையும் சந்தோஷமும் மகிழ்ச்சியின் கிரீடமுமாயிருப்பவர்கள் யார்? நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து வரும்போது அவருடைய சந்நிதானத்திலே நீங்களல்லவா அப்படியிருப்பீர்கள்" (Iதெச. 2:19) என்று கூறி நிரூபிக்கிறார். அவ்விதமாக கர்த்தர் வரும்போது கெம்பீரத்தோடு அறுப்பது மாத்திரமல்ல, இவ்வுலகத்தில் வைத்தே கண்ணீரோடு விதைத்ததின் பலனை ஓரளவு அறுத்ததாக (அனுபவித்ததாக), "நான் தெசலோனிக்கேயிலிருந்தபோதும், என் குறைச்சலை நீக்கும்படி நீங்கள் இரண்டொருதரம் அனுப்பினீர்கள். உபகாரத்தை நான் நாடாமல், உங்கள் கணக்குக்குப் பலன் பெருகும்படியே நாடுகிறேன். எல்லாம் எனக்குக் கிடைத்தது, பரிபூரணமும் உண்டாயிருக்கிறது; உங்களால் அனுப்பப்பட்டவைகளைச் சுகந்த வாசனையும், தேவனுக்குப் பிரியமான உகந்த பலியுமாக எப்பாப்பிரோதீத்துவின் கையில் வரப்பற்றிக்கொண்டபடியால் நான் திருப்தியடைந்திருக்கிறேன்" (பிலி. 4:16-18) என்று கூறுகிறார். ஆ! என்ன பாக்கிய ஜீவியம்!

ஆகவே இத்தானியத்தை விதைக்கும் வேலையில் நீங்களும் சேர்ந்துகொண்டால், அறுப்பின் பாக்கியத்திலும் பங்கு பெறுவீர்கள்.

3. மன்ன தூதர்களின் அப்பமாக இருந்தது.

மன்ன தூதர்களின் அப்பமாக இருந்ததாக, "தூதர்களின் அப்பத்தை மனுஷன் சாப்பிட்டான்" என்று சங். 78:25ல் வாசிக்கிறோம்.

(a) தூதர்கள் தேவனுடைய சமுகத்தை எப்போதும் தரிசிக்கிறவர்கள் (மத். 18:10). இந்த மன்ன அவர்களுக்கு அப்பமாக இருந்ததாக அறிகிறோம். இது நமக்கும் அப்பமாக வேண்டுமானல், அவர்களைப்போல நாமும் எப்போதும் தேவ சமுகத்தைக் காத்துக்கொள்கிறவர்களாக இருக்க வேண்டும். சங்கீதக்காரன், "கர்த்தரை எப்பொழுதும் எனக்கு முன்பாக வைத்திருக்கிறேன்" (சங். 16:8) என்கிறார். பழைய ஏற்பாட்டின் காலத்தில் நோவாவும், ஏனேக்கும் தேவனேடு சஞ்சரித்ததை அறிவோம் அல்லவா? அவர்களுக்கு அவ்வனுபவம் இயலுமாயிருந்ததானல், புதிய ஏற்பாட்டின் காலத்தில் கிருபையின் உதவியாலும், பரிசுத்தாவியின் உதவியாலும் எப்போதும் தேவ பிரசன்னத்தைக் காத்துக்கொள்வது எவ்வளவு இலகுவும் நிச்சயமும் ஆனது! ஆகவே லூக். 18:1 ல் இயேசு கிறிஸ்து, "எப்பொழுதும் ஜெபம்பண்ண வேண்டும்" என்று சொல்லி அவ்விதம் செய்யக்கூடும் என்பதை ஒரு உவமையால் நிரூபித்தார். அவ்வுவமையை முடிக்கும் 7 ஆம் வசனத்தில், "தேவன் தம்மை நோக்கி இரவும் பகலும் கூப்பிடுகிறவர்களாகிய . தம்மால் தெரிந்துகொள்ளப்பட்டவர்களின் விஷயத்தில்" என்று சொல்லி, இடைவிடா

மல் அநாவது இரவும் பகலும் ஜெபிக்கக்கூடும் என்பதை நிரூபிக்கிறார். பரிசுத்த ஆவியானவர், பரி. பவுல் மூலமாக, இடைவிடாமல் ஜெபம்பண்ண வேண்டும் என்ற கட்டளையைக் கொடுக்கிறார். (1 தெச. 5:17) இதைப் பிரமாணமாக பரி. பவுல் ஏற்றுக்கொண்டது மாத்திரமல்ல, தானும் தனது அனுதின ஜீவியத்தில் அதை அனுபவித்திருக்கிறார். ஆகவே அவர், "நம்முடைய பிதாவாகிய தேவனுக்கு முன்பாக நாங்கள் இடைவிடாமல் நினைவுகூர்ந்து, ...எங்கள் ஜெபங்களில் இடைவிடாமல் உங்களைக் குறித்து விண்ணப்பம்பண்ணி" (1 தெச. 1:2.4) என்று எழுதி, அவர் இடைவிடாது எப்போதும் தேவ பிரசன்னத்தைக் காத்திருந்தார் என்பதை உறுதிப்படுத்துகிறார். இவ்விதமாக தூதர்களைப்போல் தேவ சந்நிதானததில் எப்போதும் இருக்கிறவர்கள் இந்த அப்பத்தைப் புசிக்கலாம்.

(b) தூதர்கள் பரிசுத்தமானவர்கள் (மாற். 8:38) இந்த மன்னா அவர்களுக்கு ஆகாரமாக இருந்ததாக அறிகிறோம். நாம் இந்த தூதர்களின் அப்பத்தைப் புசிக்க வேண்டுமானால் நமக்கும் பரிசுத்தம் இன்றியமையாதது. ஆகவே இந்த அப்பமாகிய இயேசுவின் சரீரத்தையும், அவருடைய இரத்தத்தையும் நினைவுகூரும்படி பங்குபெறும் கர்த்தருடைய பந்தியில், தகுதியற்றவர்களாய் ஒருவரும் பங்குபெறக்கூடாது என்று பரி. பவுல் 1 கொரி 11-ஆம் அதிகாரத்தில் கூறி நம்மை எச்சரிக்கிறார். அன்றியும், "சகோதரனென்னப்பட்ட ஒருவன் விபசாரக்காரனாயாவது, பொருளா

சைக்காரனுயாவது, விக்கிரகாராதனைக்காரனுயாவது, உதாசினனுயாவது, வெறியனுயாவது, கொள்ளைக்காரனுயாவது இருந்தால், அவனோடே கலந்திருக்கக் கூடாது; அப்படிப்பட்டவனுடனேகூடப் புசிக்கவுங்கூடாது" என்று 1 கொரி. 5:11-ல் பரிசுத்த ஆவியானவர் எச்சரிக்கிறுர். இங்கே, விபசாரக்காரனேடு மாத்திரமல்ல, பொருளாசைக்காரன், உதாசினன் முதலியவர்களோடும் கலந்து புசிக்கக் கூடாது என்பது இக்காலத்தில் நாம் மிகக் கவனிக்கவேண்டிய ஒன்ருகும். நாம் அவர்களுடன் பங்குபெறுவது அவர்கள் பாவங்களுக்குக் கைகொடுப்பதாகும். ஆகையால், ஆவியானவர், "அந்தப் பொல்லாதவனை உங்களைவிட்டுத் தள்ளிப்போடுங்கள்" (1 கொரி. 5:13) என்கிறுர். இவ்விதம் தள்ளும் விஷயத்தில் பாவம் செய்பவருடைய கல்வி, பணம், உலக மேன்மை முதலியவற்றை எண்ணி பல சபைகள் கவலையீனமாக இருக்கின்றன அங்குமிங்கும் சபை நடத்துகிறவர்களும் இவைகளுக்குட்பட்டிருக்கிறபடியால் அவர்களைக் கண்டித்துத் தள்ளும் தைரியமற்றிருக்கின்றனர். இதனிமித்தம் தேவநாமம் தூஷிக்கப்படுகிறது. ஆ! என்ன பரிதாபம். ஆகையால், பாவம் சபையில் வளர்ந்து பரிசுத்தம் நஷ்டமடையாதபடி கர்த்தருடைய சபையைப் பரிசுத்தமாகக் காத்துக்கொள்ள ஜாக்கிரதையாயிருப்போமாக! இதிலிருந்து பரிசுத்த தூதர்களின் அப்பமாகிய மன்னுவை நாம் இயேசுவாக நினைவுகூர்ந்து கர்த்தருடைய பந்தியில் புசிக்க பரிசுத்தம் எவ்வளவு இன்றியமையாதது என்பதை அறிகி

ேறோம். அத்துடன் சில தடவைகளில் தேவனு டைய ஜனங்கள் தங்கள் பரிசுத்தத்தை ஒரு வார்த்தையினுலோ, கோபத்தினுலோ, எண்ணங் களினுலோ இழக்கும்போது தாங்கள் புசித்துக் கொண்டிருந்த தேவ பிரசன்னத்தை இழக்கின்ற னர். ஆரோனும் மிரியாமும் மோசேக்கு விரோத மாகப் பேசினபோது, கர்த்தர் ''போய்விட்டார்' என்று எண் 12:9-ல் வாசிக்கிறேம். இவ்வித மாக வார்த்தைகளினுலும் தேவ பிரசன்னத்தை இழந்துபோகாது ஜாக்கிரதையாயிருப்போமாக.

(c) தூதர்கள்—பணிவிடை ஆவிகள் (எபி. 1:14) இந்த மன்னு அவர்களுக்கு ஆகாரமாக இருந்ததாக அறிகிறேம் நாம் தேவனுடைய பிள்ளைகளான பின்பு ''தகப்பனுக்குப் பிள்ளை ஊழி யஞ் செய்வது போல' தேவனுக்கு ஊழியஞ்செய்ய வேண்டும் என்னும் ஆவி நமக்குள் இருக்கவேண் டும். உத்தம பிள்ளைகள் தகப்பனுக்கு அன்பினுல் தங்கள் கடமைகளை உணர்ந்து ஊழியஞ் செய்கின் றனர். கர்த்தர் நம்மை இரட்சித்ததின் நோக்கம் நம்மைப் பிள்ளைகளாக்கிப் பரலோகத்திற்கு கொண்டுபோவது மாத்திரமல்ல, நாம் அவருக்கு ஊழியஞ்செய்வதற்கும் ஆகும். ஆகவே எபி. 9:14ல், ''கிறிஸ்துவினுடைய இரத்தம் ஜீவனுள்ள தேவ னுக்கு ஊழியஞ்செய்வதற்கு உங்கள் மனச்சாட்சி யைச் செத்த கிரியைகளறச் சுத்திகரிப்பது எவ் வளவு நிச்சயம்!'' என்று பரி. பவுல் எழுதுகிறுர். ஆகவே தூதர்களின் அப்பத்தை நாம் புசிக்கவேண்

டுமாயின், தூதர்களைப்போல நாம் தேவனுக்கு மனப்பூர்வமாய் ஊழியஞ் செய்கிறவர்களாக இருக்கவேண்டும்.

முதலாவதாக, தூதர்கள் மனுஷருக்குச் செய்திகளை அறிவித்து ஊழியஞ்செய்கின்றனர். (ஆதி. 19 ஆம் அதிகாரம்). இரண்டாவதாக, அபாயங்களினின்று காக்கின்றனர். (சங். 34:7) இவ்விதமாக இயேசுகிறிஸ்து கொடுக்கும் இலவசமான இரட்சிப்பைச் சுவிசேஷமாகச் சொல்லி, நித்தியநரகமாகிய நித்திய அபாயத்தினின்று ஆத்துமாக்களைப் பாதுகாத்து ஊழியஞ்செய்ய வேண்டும். அத்துடன் பசி பட்டினியாயிருக்கிறவர்களுக்கும், வியாதியஸ்தர்களுக்கும், பல சிக்கல்களுக்குள் அகப்பட்டு தப்ப முடியாமல் இருக்கிறவர்களுக்கும், இன்னும் பலவிதமாய் துன்பப்பட்டு ஆபத்துக்குட்படக்கூடியவர்களாக இருக்கிறவர்களுக்கும் ஊழியஞ் செய்கிறவர்களாக இருக்கவேண்டும்.

மேற்கூறியபடி எப்போதும் தேவ சமுகத்தைத் தரிசிக்கிறவர்களாகவும், பரிசுத்தமுள்ளவர்களாகவும், தேவனுக்கு ஊழியஞ்செய்கிறவர்களாகவும் இருப்போமாயின் மாத்திரமே தேவதூதரின் அப்பமாகிய இந்த மன்னாவைப் புசிக்கத் தகுதியுள்ளவர்களாவோம்.

4. மன்னா மிகுதியாய்ச் சேர்த்தவனுக்கு மீதியாக இல்லாமலும், கொஞ்சமாய்ச் சேர்த்தவனுக்குக் குறையாமலும் இருந்தது.

இம்மன்னாவைக் குறித்து, "மிகுதியாய்ச்சேர்த்தவனுக்கு மீதியானதும் இல்லை. கொஞ்சமாய்ச்

சேர்த்தவனுக்குக் குறைவானதும் இல்லை'' என்று யாத். 16:18ல் வாசிக்கிறோம்.

மத்தேயு 6:7,8ல் இயேசு மிகுதியாய்ச் சேர்த்தவனுக்கு மீதியாக இல்லாமல் இருந்ததைக் குறித்து, ''நீங்கள் ஜெபம்பண்ணும்போது, அஞ்ஞானிகளைப்போல வீண் வார்த்தைகளை அலப்பாதேயுங்கள்; அவர்கள், அதிக வசனிப்பினால் தங்கள் ஜெபம் கேட்கப்படுமென்று நினைக்கிறார்கள். அவர்களைப்போல நீங்கள் செய்யாதிருங்கள்'' என்றார். இவ்விதமாக ஜெபத்தில் அதிக வசனிப்பு செய்கிறவர்களை அஞ்ஞானிகள் என்று இயேசு கூறியிருக்கிறார். தனி ஜெபத்தின் ருசியை அறியாதவர்களான தேவனுடைய பிள்ளைகளில் சிலர், பொதுக்கூட்டங்களில் அதிக நீண்ட ஜெபங்களைப்பண்ணி தங்களை உயர்த்திக்காட்ட விரும்புகின்றனர். இவர்களுடைய அதிக வசனிப்பான ஜெபங்கள் மற்றவர்கள் இவர்களுடன் இசையக்கூடாதபடி ஒரு மனதைக் கெடுக்கிறது. இவ்விதமாக அவர்கள் ஜெபத்தில் சேர்க்கும் மிகுதியான மன்னா பிரயோஜனமற்றதாகப் போகிறது.

D.L. மூடி ஒரு தடவை ஒரு கூட்டத்தை நடத்திக்கொண்டிருந்தபோது மேற்கூறிய விதங்களில் ஒருவர் நீண்ட ஜெபத்தை ஆரம்பித்தார். ஜெபம் முடியாதபடியால் கூட்டத்தில் பரபரப்பு உண்டாயிற்று. ஆகவே D.L. மூடி, ''நம் நண்பர் ஜெபித்துக்கொண்டிருக்கட்டும். நாம் ஓர் பாட்டுப் பாடுவோம்'' என்று சத்தமாகக் கூறி,

பாட்டை ஆரம்பித்தார். சர். வில்பிரெட் கிரென் பெல் என்பவர் கூட்டம் நடத்தினவரின் ஆவி யின் நடத்துதலைக் கவனித்தார். D. L. மூடி அவர் களின் இச்செய்கை அவர் கூடடத்தைவிட்டு வெளியே போகாதபடி தடுத்து நிறுத்தியது. பின் இவர் கூட்டங்களில் ஊக்கம் காண்பித்து, இரட் சிக்கப்பட்டு ஒரு தேவ மனுஷனாக மாறினார். ஆம்! இன்றைக்கும் இவ்வித ஜெபங்களுக்கு இவ் வித மாற்று மருந்தைக் கொடுத்தால், பலர் நம் கூட்டங்களில் ஊக்கம் காட்டி, கர்த்தரிடம் வழி நடத்தப்படுவார்கள் என்பது நிச்சயம்.

பரிசுத்தாவியின் அபிஷேகத்தைப் பெற்ற சிலருக்குள் ஒருவித அதிக வசனிப்பான ஜெபத் தைக் காணலாம். பரிசுத்தாவியைப் பெற்றதின் அடையாளமாகிய அந்நிய பாஷைப் பேசுதலை, சரியான நிறைவின்றியும், ஆவியை அடக்காமலும் பழக்கத்தினிமித்தம் கூடுதல் பேசி தங்களைப் பெரிய நிறைவுள்ளவர்கள் என்று காட்டுகின்ற னர். ஆனல், I கொரி. 14:26–32 ஐ படிக்கும் போது, சபையில் அந்நிய பாஷை பேசும்போது (காத்திருப்புக் கூட்டத்தில் அல்ல) ஒழுங்காகவும், பக்திவிருத்திக்கேதுவாகவும் அடக்கவேண்டிய சந்தர்ப்பத்தில் அடக்கியும் பேசவேண்டும் என் றும் காண்கிறோம். அன்றியும், பரி. பவுல் 15-ஆம் வசனத்தில், "நான் ஆவியோடும் விண்ணப்பம் பண்ணுவேன், கருத்தோடும் விண்ணப்பம் பண் ணுவேன்" என்று எழுதுவதால், ஆவியில் நிறைந்து அந்நிய பாஷை பேசும்போது, கருத்து

அல்லது அறிவோடுதான் அந்நிய பாஷையைப் பேசுகிறார்கள் என்பது விளங்குகிறது. ஆகவே, 18-ஆம் வசனத்தில், "உங்களெல்லாரிலும் நான் அதிகமாய்ப் பாஷைகளைப் பேசுகிறேன்" என்று எழுதுகிறார். இதிலிருந்து அந்நிய பாஷை பேசும் போது, கருத்து அல்லது அறிவும் கிரியை செய்கிறது என அறிகிறோம். ஆகவேதான் சபையில் அந்நிய பாஷை பேசிக்கொண்டிருக்கும்போது, நடத்துகிறவர்கள் கைதட்டவோ; வேறு எந்த விதத்திலாயினும் நிறுத்தவோ செய்யும்போது, பாஷை பேசுகிறவர்களுடைய கருத்துக் கிரியை செய்து, நடத்திப்பிற்குக் கீழ்ப்படிந்து உடனே அந்நிய பாஷை பேசுதலை நிறுத்திவிடுகின்றனர். அந்நிய பாஷை பேசும்போது கருத்தும் கிரியைசெய்கிறது என்பதை விளங்கிக் கொள்ளாது, இவ்வித சந்தர்ப்பங்களைக் கண்டு இடறுவாறும் உண்டு. இதிலிருந்து அந்நியபாஷை பேசுகிறவன் அதை அடக்கிக் கொள்ளக்கூடும் என்றும் அறிகிறோம். இதற்கு மிஞ்சி கூடுதலாக பேசுகிறவர்கள் கொஞ்சம் கொஞ்சமாக பெருமைக்கு இடங்கொடுத்து, ஆவிக்குரிய உள்ளான பெலனை இழந்து, சில தடவைகளில் கூடுதலாக சேர்க்கப்பட்ட மன்னா நாறுவது போல, தேவநாமம் தூஷிக்கப்பட ஏதுவாக நடந்துகொள்கின்றனர். ஆகவே இதிலும் அடக்கமாகவும், கவனமாகவும் இருக்க வேண்டியது அவசியம்.

லூக்கா 18 ஆம் அதிகாரத்தில் இயேசு கூறிய ஒரு உவமையிலிருந்து மிகுதியாகச் சேர்க்கிறவர்களையும், கொஞ்சமாய்ச் சேர்க்கிறவர்களையும்

குறித்து ஒரு காரியத்தை நிதானித்துக் கொள்ள லாம். பரிசேயனுடைய அதிக வசனிப்பான (கூடுதல் சேகரித்த) ஜெபத்தைக் குறித்து இங்கு வரையாமலேயே நீங்கள் அறிவீர்களே! அவன் வந்தது போலத் திரும்பிப்போனுனேயன்றி கூடுதல் ஒன்றும் கொண்டுபோகவில்லை. ஆனுல் ஆயக்காரன், "பாவியாகிய என்மேல் கிருபையாயிரும்" என்று மாத்திரம் சொல்லி, தான் குறைவாக சேர்த்ததைத் தன் மூன்று வார்த்தைகளால் வெளிப்படுத்துகிறுன். ஆனுல் இவன், "நீதிமானுக்கப்பட்டவனுய்த் தன் வீட்டுக்குத் திரும்பிப்போனுன்" என்று பின்பு வாசிப்பதால், இவன் கொஞ்சமாக சேர்த்ததை தேவன் இவனுக்கு நிறைவாக்கி, இம்மன்னு கொஞ்சமாய்ச் சேர்த்தவனுக்கு குறையாமல் இருந்தது என்பதை நிரூபித்தார்.

பரிசேயனைப்போல அதிக வசனிப்பாக ஜெபிக்கக் கூடாதென்றும், ஆயக்காரனைப்போல் இரண்டொரு வார்த்தைகளால் ஜெபிக்கவேண்டும் என்றும் வாசித்தபோது வாசகர்களில் ஒரு சிலர் நீண்ட ஜெபம் செய்வது தப்போ என்னும் சந்தேகத்திற்கு இடங்கொடுத்திருக்கலாம். வேறு சிலர் இரண்டொரு வார்த்தைகளால் தான் ஜெபிக்கவேண்டும் என்று எண்ணி, நீண்ட ஜெபத்தை அற்பமாக எண்ணவும், இடமுண்டாக்கி இருக்கலாம். இங்கே, இயேசு கூறிய உவமையில் அவர்கள் வெளியரங்கமாக தேவாலயத்தில் நின்று ஜெபித்தார்கள். ஆகவே முன்பு "பொதுக்கூட்டங்களில்" என்று எழுதியிருப்பதைக் கவனியுங்கள். நீண்ட தனி

ஜெபம் செய்யவேண்டியது அவசியம். அதன் பொருட்டு இயேசு சொன்னதுபோல, அறை வீட்டுக்குள் பிரவேசித்து கதவைப்பூட்டி ஜெபிக்க வேண்டும். ஜனங்கள் காண தேவாலயத்திற்கு முன்பாக நின்று அல்ல. இயேசு வனாந்தரத்திற்கும், மலைக்கும் சென்று இராமுழுவதும் நீண்ட ஜெபம் செய்ததுபோல நீண்ட தனிஜெபம் மிக அவசியம். இவ்வித நீண்ட தனி ஜெபத்தாலேயே லூக். 21:36ல் இயேசு கூறியதுபோல, ஜெபித்து அவர் வருகைக்காகக் காத்திருக்கக் கூடும்.

5. மன்னாவை விடியற்காலந்தோறும் சேர்க்க வேண்டும்.

மன்னாவை விடியற்காலந்தோறும் சேர்த்ததாக, "அதை விடியற்காலந்தோறும் அவரவர் புசிக்கும் அளவுக்குத்தக்கதாகச் சேர்த்தார்கள்" என்று யாத். 16:21ல் காண்கிறோம். இச்சத்தியத்தை அறிந்த தாவீது ராஜா, "தேவனே, நீர் என்னுடைய தேவன்; அதிகாலமே உம்மைத் தேடுகிறேன்" (சங். 63:1) என்கிறார். சாலொமோன் ராஜாவும், "அதிகாலையில் என்னைத்தேடுகிறவர்கள் என்னைக் கண்டடைவார்கள்" என்று நீதி. 8:17ல் கூறி, இம்மன்னாவை அதிகாலையில் சேகரிக்க வேண்டும் என்று நம்மை ஞாபகப்படுத்துகிறார். தாவீது இன்னமும் சங். 17:15ல், "நான் விழிக்கும்போது உமது சாயலால் திருப்தியாவேன்" என்று கூறி, அதிகாலையில் தனக்குத் தேவையான இம்மன்னாவைத் திருப்திகரமாக சேர்த்துக்கொள்வதாக

வெளிப்படுத்துகிறார். தன் சகோதரனாகிய ஏசாவிற்கு பயந்து, யாப்போக்கு என்கிற ஆற்றின் கரையிலிருந்த யாக்கோபும் பொழுது விடிந்து வரும்வேளையில் தன்னிடம் வந்தவரோடு போராடி தேவாசிர்வாதத்தைப் பெற்றுக் கொண்டார். இவைகளின் காரணமென்னவென்றால், வெயில் ஏறஏற மன்னா உருகிப்போவதுபோல வெயிலில் உள்ள உஷ்ணமாகிய பல கஷ்டங்கள், கவலைகள் மனிதனுடைய மனதில் நுழையும்போது அவன் தேவபிரசன்னத்தை அனுபவிக்கக் கூடாதிருக்கிறான். ஆகவே, நம்முடைய ஜீவியத்திலும் அதிகாலையில் கர்த்தரைத் தேடும் பழக்கத்தை வாஞ்சிப்போமாயின், தேவன் அதற்கு உதவிசெய்ய வல்லவராயிருக்கிறார். தாவீது கர்த்தரை அதிகாலையில் தேடினது தனக்கு யாவும் சந்தோஷமாயிருந்தபோதல்ல, பல துன்பங்களால் யூதாவின் வனாந்தரத்திலிருந்தபோதே தேடினாரென்று 63 ஆம் சங்கீதத்தின் ஆரம்பத்திலுள்ள குறிப்பை வாசிக்கும்போது அறிந்து கொள்கிறோம். இதைப் பன்முறை அனுபவித்த தாவீது தேவனுடைய சிந்தையையறிந்து, சங். 91:15ல், "அவன் என்னைநோக்கி கூப்பிடுவான், நான் அவனுக்கு மறுஉத்தரவு அருளிச்செய்வேன்; ஆபத்தில் நானே அவனோடிருந்து, அவனைத் தப்புவித்து, அவனைக் கனப்படுத்துவேன்" என்று கூறுகிறார். ஆகையால், தாவீது யூதாவின் வனாந்தரத்தில் கர்த்தரை அதிகாலையில் தேடினபடியால், சங். 91:15ன்படியே விடுதலை பெறவும், கர்த்தரை மகிமைப்படுத்தவும் ஏதுவாயிற்று. அப்படியே நம்முடைய வனாந்தரமாகிய

கஷ்ட நஷ்டங்களிலும் தாவீதைப்போல அதிகாலை யில் தேவனைத் தேடுவோமாயின், மேற்கூறிய வசனத்தின்படி நாம் விடுதலை பெற்று கர்த்தரை மகிமைப்படுத்தக்கூடும். அன்றியும், தாவீது விழிக்கும் போது தேவசாயலைப் பெற்று ஜீவித்தது போல, நாமும் அதிகாலையில் தேவனைத் தேடினுல் தேவ சாயலைப்பெற்று உலகத்திற்கு தேவனைக் காட்டக் கூடும். அதிகாலையில் நாம் தேவனைத் தேடுவதால், சாலொமோன் கூறுவதுபோல அவரைக் கண்டுகொள்வது மாத்திரமல்ல, எரேமியா கூறுவதுபோல அவரிடத்திலிருந்து புதிய கிருபையையும் பெற்றுக்கொள்ளலாம் (புல. 3:22, 23). இவ்விதம் அதிகாலையில் அவரைக் கண்டு புதிய கிருபைகளைப்பெற்றுக்கொள்ளும்போது, பகலில் வருகிற பல் வேறு புது சோதனைகளில் இப்புது கிருபையால் ஜெயம் பெற்று ஜெயவீரராய் இரவுக்குள் பிரவேசிக்கலாம். அப்போது இரவின் பயங்கரத்திற்கு பயப்படாதிருப்பது மாத்திரமல்ல, இரவில் படுக்கையில் அவரை நினைத்துத் தியானிக்கும் போது, "நீர் எனக்குத் துணையாயிருந்ததினுல், உமது செட்டைகளின் நிழலிலே களிகூருகிறேன்" (சங். 63:7) என்று தாவீதுடன் சேர்ந்து சொல்லலாம். இவ்விதமாக, இருண்ட பயப்படக்கூடிய இரவில் களிகூரும் சிலாக்கியத்தைப் பெற்றுக் கொள்கிறோம். ஆ! என்ன இன்ப ஜீவியம்!

அத்துடன் காலைதோறும் பெறும் கிருபையானது அவனைத் தன் வாழ்நாளெல்லாம் மகிழச் செய்கிறது (சங். 90:14). ஆகவே காலைதோறும் மன்னுவைப் பொறுக்க முயலுகிறுன். அதிகாலையில் குளிரினுல் தூங்கிப் பழகும் மனுஷருக்கு அதிகாலையில் விழிப்பு வராதே என்ற கவலை உண்டாகிறது. இக்கவலையை நீக்கும் உத்தரவாதம் தேவனுக்குரியதாகும். ஆகவே ஏசாயா, "காலைதோறும் என்னை எழுப்புகிறுர்" (ஏசா. 50:4) என்று நமக்கு கூறுகிறுர். இதை நாம் நம்பி வாஞ்சிப்போமாயின், நிச்சயமாகவே இப்பாக்கியத்தை அனுபவிப்போம். இதை அனுபவிக்கும் பல பரிசுத்தவான்கள் எக்காலத்திலும் உலகில் உண்டு. தேவன் அவ்விதம் நம்மை எழுப்பும் பொருட்டாக, நம் தீர்மானத்தையும் வாஞ்சையையும் காண்கிறுர். ஆகவே ஒரு பரிசுத்தவான். "நான் தேவனுடைய முகத்தைப் பார்ப்பதற்கு முன் வேறொரு முகத்தையும் பார்க்கமாட்டேன்" என்றுர். நாம் காலை நான்கு மணிக்கு பேரூந்தில் அல்லது புகைவண்டியில் ஓரிடத்திற்குப் பிரயாணம் புறப்பட எண்ணி, முந்தின இரவில் தாமதித்து தூங்கினுலும் நான்கு மணிக்கு முன்னமே நமக்கு விழிப்பு வருவது இயல்புதானே! இவ்வித விழிப்பு வருவதற்குக் காரணம் வாஞ்சை மாத்திரமல்ல, வாஞ்சையுடன் சேர்ந்த கவலையுமே. இவ்விதமாக ஆவிக்குரிய காரியங்களுக்காக உண்மையாய் நாம் கவலைப்படும்போது (1 கொரி. 7:34)

தேவன் தம் வாக்குத்தத்தத்தின்படி, தம் உத்தர வாதத்தில் உண்மையுள்ளவராக அதிகாலையில் நம்மை எழுப்பி, மேற்கூறிய ஆசீர்வாதங்களைப் பெற்றுக்கொள்ள உதவி செய்வார்.

6. இம் மன்ன சோதிக்கிறது.

மன்னவைக்கொண்டு இஸ்ரவேலரைக் கர்த்தர் சோதித்ததாக, "நான் உங்களுக்கு வானத்திலிருந்து அப்பம் வருஷிக்கப்பண்ணுவேன்; ஜனங்கள் போய், ஒவ்வொரு நாளுக்கு வேண்டியதை ஒவ்வொரு நாளிலும் சேர்த்துக்கொள்ள வேண்டும்; அதினால் அவர்கள் என் நியாயப்பிரமாணத்தின்படி நடப்பார்களோ நடக்கமாட்டார்களோ என்று அவர்களைச் சோதிப்பேன்" என்று யாத். 16:4-ல் வாசிக்கிறோம்.

நீதிமான்களைச் சோதித்தறிகிற தேவன் இவர்களையும் மன்னவின் மூலமாக சோதித்தறிய சித்தங்கொண்டார். நாம் இயேசு கிறிஸ்துவின் இரத்தத்தால் நீதிமான்களாக்கப்பட்டிருக்கிறோம் (ரோ. 5:9). இஸ்ரவேல் ஜனங்கள் பஸ்கா ஆட்டுக்குட்டியாகிய இயேசுக்கிறிஸ்துவின் இரத்தத்தால் நீதிமான்களாக்கப்பட்டு, வனந்தரத்திற்குக் கொண்டுவரப்பட்டார்கள். சோதனைகளாலே நீதிமான்களை அறியும் தேவன் (சங். 11:5), இவர்கள் தம்முடைய நியாயப் பிரமாணங்களைக் (நியாயம்+பிரமாணம்) கைக்கொள்வார்களோ மாட்டார்களோ என்று சோதிக்க விரும்பினர்.

மேற்கூறிய வசனத்தில் ஒவ்வொரு நாளுக்கு வேண்டிய மன்னுவை ஒவ்வொரு நாளிலும் சேர்த்துக்கொள்ள வேண்டும் என்று கண்டோம். இக் கற்பனையில் இரு அம்சங்களைக் காண்கிறோம்.

(a) மன்னு நம் ஆவிக்குரிய ஜீவியத்தில் கிறிஸ்துவைக் காட்டுகிறது என்று கண்டோம். சிலர் வருங்காலம் அல்லது நாளையைக் குறித்து, தங்கள் ஆவிக்குரிய ஜீவியம் நிலைநிற்குமோ இல்லையோ என்று பயந்து. தேவ சித்தத்திற்கு மாருக உபவாசித்து பல பொருத்தனைகளையும் செய்கின்றனர். சவுல் ஜனங்கள் தன்னை விட்டுச் சிதறிப் போவதால் ராஜ்யபாரம் தன்னை விட்டுப் போய் விடும் என்று பயந்து, ஆசாரிய ஊழியமாகிய பலி செலுத்துதலைச் செய்தான். இவ்விதமாக வருங் காலத்திற்காக அல்லது நாளைக்காக, தன் ராஜ்ய பாரத்தை நிலைநிறுத்தப் பிரயாசப்பட்டான். சவுலைப்போல் ஒரு சிலர் தங்கள் நாளைக்குரிய ஆவிக்குரிய ஜீவியத்திற்காகக் கவலைப்பட்டு, "ஆரோனைப்போலத் தேவனுல் அழைக்கப்பட்டாலொழிய, ஒருவனும் இந்தக் கனமான ஊழியத்துக்குத் தானுய் ஏற்படுகிறதில்லை" (எபி. 5:4) என்ற தேவ ஒழுங்கிற்கு மாருக அழைப்பில்லாமலேயே ஊழியத்திற்குப் புறப்படுகின்றனர். இவ்விதமாகத் தங்கள் இரட்சிப்பைத் தங்கள் சுய முயற்சியினுல் மாத்திரம் நிலைநிறுத்தப் பிரயாசப்படுகின்றனர். தேவன் சவுலை என்றென்றைக்குமாக ராஜாவாக நிலைநிறுத்த எண்ணியிருந்தார் என்பதை I சாமு. 13:11-13-ன் மூலம் அறிகிறோம்.

("ஜனங்கள் என்னை விட்டுச் சிதறிப்போகிறதை ...... நான் கண்டபடியினாலே, ... எண்ணித் துணிந்து, சர்வாங்க தகனபலியைச் செலுத்தினேன் என்றான் சாமுவேல் சவுலைப் பார்த்து: புத்தியீனமாய்ச் செய்தீர்; உம்முடைய தேவனாகிய கர்த்தர் உமக்கு விதித்த கட்டளையைக் கைக்கொள்ளாமற்போனீர்; மற்றப்படி கர்த்தர் இஸ்ரவேலின்மேல் உம்முடைய ராஜ்யபாரத்தை என்றைக்கும் ஸ்திரப்படுத்துவார்"). அப்படியே, "வழுவாதபடி உங்களைக் காக்க...... வல்லமையுள்ளவர்" (யூதா 24), "உங்களை அழைக்கிறவர் உண்மையுள்ளவர், அவர் அப்படியே செய்வார்" (I தெச. 5:24) என்பதுபோன்ற வாக்குத்தத்தங்கள் நமக்கு இருக்கின்றன. மேலும், "இவைகளைச் செய்தால் நீங்கள் ஒருக்காலும் இடறிவிழுவதில்லை" (II பேது. 1:10) என்றும் வாசிக்கிறோம். இங்கே ஒருக்காலும் இடறிவிழுவதில்லை என்பது குறிப்பிடத்தக்கதாகும். இவ்வாக்குத்தத்தங்களை நம்பி நாள்தோறும் கிறிஸ்துவுக்குள் வளர்ந்து வராது, மேற்கூறியபடி பயந்து உபவாசித்து புத்தியீனமான பொருத்தனைகளைச் செய்து மன்னாவை கூடுதல் சேகரிக்க ஆரம்பிக்கின்றனர். பயத்தினால் இவ்விதம் கூடுதல் சேகரிக்கும் பலர் கிருபையிலிருந்து விழுந்து, சிலர் பாவத்தில் அகப்பட்டு, தங்கள் ஊழியங்களையும் நஷ்டப்படுத்தி கிறிஸ்தவ உலகத்திற்கு நாற்றத்தை உண்டுபண்ணிக் கொண்டு வருவதை நாம் காண்கிறோம் அல்லவா?

G.B. Sathyanesan, B.A

ஆகவே II பேது 3:18ல் கூறியிருப்பதுபோல, கிறிஸ்துவின் கிருபையிலும், அவரை அறிகிற அறிவிலும் நாள்தோறும் வளர்ந்து கொண்டிருப்போமாக.

(b) மன்னு நம் ஆவிக்குரிய ஜீவியத்தில் கிறிஸ்துவைக் காட்டினுலும், இஸ்ரவேலருக்கு சரீரப்பிரகாரமான ஆகாரமாகவே இருந்தது. ஆகவே இதிலிருந்து பின்வரும் காரியத்தைக் கற்றுக் கொள்வது நம் உலக ஜீவியத்திற்கு இன்றியமையாததாகும்.

"நாளைக்காகக் கவலைப்படாதிருங்கள்; நாளையத்தினம் தன்னுடையவைகளுக்காகக் கவலைப்படும். அந்தந்த நாளுக்கு அதினதின் பாடு போதும்" (மத். 6:34) என்னும் பிரமாணத்தைக் கைக்கொள்வார்களோ என்று அறிய கர்த்தர் அவர்களைச் சோதித்தார். ஆனுல் பலரும் அச்சோதனையில் தோல்வியுற்று மறுநாளுக்காக சேகரித்தனர். அப்படி சேகரித்து வைத்தவர்களைக் குறித்து மோசே கோபப்படவும், கர்த்தர் துக்கப்படவும் ஏதுவாயிற்று. (யாத். 16:20) இதிலிருந்து நாம் நாளைக்காகக் கவலைப்படக்கூடாது என்றும், அவ்விதம் கவலைப்படுவது தேவனுக்கும் பரிசுத்தவான்களுக்கும் துக்கத்தை உண்டுபண்ணும் என்பதையும் அறிந்துகொள்வோமாக. இதை உணராத சிலர் நாளைக்காகக் கவலைப்பட்டு கர்த்தருக்காகச் செய்யவேண்டிய காரியங்களைச் செய்யாது பணத்தையும் பொருட்களையும் சேகரிக்கின்றனர். இவ்

வித சேகரிப்பினிமித்தம் கூடுதலாக சேகரித்த மன்னாவில் பூச்சியும், நாற்றமும் உண்டானது போல, இவர்கள் சேகரிப்பிலும் உண்டாகிறது. பொருளாசைக்காரர் பொய் பேசுவது இயற்கை. இரக்கமில்லாதவர்களாயிருப்பது இயல்பு. இவ்வித பூச்சிகள் அவர்கள் ஜீவியத்தில் பிடிப்பதுடன், இதனிமித்தம் நாற்றம் பிடித்து, குடும்பங்களிலும், சபைகளிலும், தேசத்திலும் நற்சாட்சியற்றவர்களாகின்றனர். இதை நிரூபிக்க பரி பவுல், "ஐசுவரியவான்களாக விரும்புகிறவர்கள் சோதனையிலும் கண்ணியிலும், மனுஷரைக் கேட்டிலும் அழிவிலும் அமிழ்த்துகிற மதிகேடும் சேதமுமான பலவித இச்சைகளிலும் விழுகிறார்கள். பண ஆசை எல்லாத் தீமைக்கும் வேராயிருக்கிறது; சிலர் அதை இச்சித்து, விசுவாசத்தைவிட்டு வழுவி, அநேக வேதனைகளாலே தங்களை உருவக் குத்திக் கொண்டிருக்கிறார்கள்" (1 தீமோத்தேயு 6:9.10) என்று எழுதுகிறார்.

இவ்வித பூச்சி பிடித்தலிலிருந்தும், நாற்றத்திலிருந்தும் கர்த்தர் உம்மைக் காப்பாராக.

7. ஆறும் நாளில் மன்னாவை இரண்டத்தனையாகச் சேர்க்க வேண்டும்.

ஆறும் நாளில் மன்னாவை இரண்டத்தனையாகச் சேர்க்கவேண்டும் என்பதை, "ஆறும் நாளிலோ, அவர்கள் நாள்தோறும் சேர்க்கிறதைப் பார்க்கிலும் இரண்டத்தனையாய்ச் சேர்த்து, அதை ஆயத்தம்பண்ணி வைக்கக்கடவர்கள்" என்று யாத். 16:5ல் காண்கிறோம்.

(எ) ஆறும் நாளில் இவர்கள் கடந்த ஐந்து நாட்களின் பழக்கத்தை விட்டு, தேவனுடைய புதிய பிரமாணத்தைக் கவனித்து, புதிய கீழ்ப்படிதலுக்குள் வரவேண்டியது அவசியமாயிருக்கிறது. ஆனால் ஆறும் நாளில் இரண்டத்தனையாக சேர்க்க வேண்டும் என்ற புதிய பிரமாணத்திற்குக் கீழ்ப்படியாது, "ஏழாம் நாளில் ஜனங்களில் சிலர் அதைச் சேர்க்கப் புறப்பட்டார்கள்; அவர்கள் அதைக் காணவில்லை" (யாத். 16:27). அப்படியே இக்காலத்திலும் சிலர் புதியதான வெளிப்படுத்தல்கள், ஏவுதல்கள் கிடைக்கும்போது அவைகளை அசட்டையாக விட்டுவிட்டு, பழைய பாரம்பரியத்தின்படியே இயேசுவைத் தேடுகின்றனர். ஆகையால் இஸ்ரவேலர் மன்னாவை அன்று காணாததுபோல, இவர்களும் இயேசுவின் நிறைவான வளர்ச்சியைக் குறித்துள்ள அறிவின்றி, தாங்கள் அடையும்படி அழைக்கப்பட்டுள்ள பூரண இளைப்பாறுதலைப் பெற்றுக் கொள்ளாதிருக்கின்றனர். இயேசு கூறியதின்படியே தங்கள் பாரம்பரியத்தினாலே தேவனுடைய கற்பனையை மீறி அவமாக்குகிறார்கள். (மத். 15:3,6)

மோசே கன்மலையை அடித்து தண்ணீரை வரவழைத்திருந்தார். மிகுந்த அனுபவங்களைப் பெற்றுக் காதேஸ் வந்தபின்பு, கன்மலையோடு பேசி அதன்மூலம் தண்ணீரை வரவழைக்க வேண்டும் என்று தேவன் எதிர்பார்த்து, புதிய கட்டளையைக் கொடுத்தார். மோசே இப்புதிய பிரமாணத்தை விசுவாசித்து, கீழ்ப்படியாது, பழைய அனுபவத்

தின்படியே கன்மலையை அடித்தார். இதனிமித்தம் தேவன் அவருக்கென்று வைத்திருந்த இளைப்பாறுதலின் தேசமாகிய கானானுக்குள் பிரவேசிக்கக் கூடாமற் போயிற்று.

ஆகவே நாம் நம் பாரம்பரியங்களை விட்டு, ஆவியானவர் மூலமும், பரிசுத்தவான்களின் மூலமும் அவ்வப்போது கொடுக்கப்படும் புதிய வெளிப்படுத்தல்கள், ஏவுதல்கள் இவற்றிற்குக் கீழ்ப்படிவோமானால் மாத்திரமே, இவ்வுலகில் பூரண இளைப்பாறுதலுடன் ஜீவித்து, கடைசியில் பரம கானானாகிய பரலோகத்தைப் பெற்றுக் கொள்ளக் கூடும்.

(b) ஏழாம் நாள் ஓய்வு நாளாக இஸ்ரவேலருக்குக் கொடுக்கப்பட்டிருந்தது. இப்பொழுது இவ்விளைப்பாறுதல் நமக்கு ஆவிக்குரிய பிரகாரமாகப் பரிசுத்தாவியின் அபிஷேகத்தால் கிடைக்கிறது (ஏசா. 28:11,12). ஆனால் எழுத்திற்குரிய இளைப்பாறுதலைக் குறித்து, ''தேவனுடைய ஜனங்களுக்கு இளைப்பாறுகிற காலம் இனி வருகிறதாயிருக்கிறது'' (எபி. 4:9) என்று ஆவியானவர் கூறுகிறார். இவ்விளைப்பாறுதல் வரப்போகும் ஆயிர வருட அரசாட்சியைக் காட்டுகிறது என்பது வேத ஆராய்ச்சியாளர் யாவரும் ஒத்துக்கொள்ளும் ஒரு சத்தியமாகும். ஆண்டவருடைய பார்வையில் ஒரு நாள் ஆயிரம் வருஷத்துக்கு ஒப்பாக இருக்கிறது என்று II பேது. 3:8-ல் வாசிக்கிறோம் அல்லவா? இவ்வித வேத கணக்கின்படி சிருஷ்டிப்பிலிருந்து கணக்கிடும்போது கிறிஸ்து

வுக்கு முன்னுள்ள ஏறத்தாழ 4000 வருஷத்தையும், கிறிஸ்துவுக்குப் பின் உள்ள ஏறத்தாழ 2000 வருஷத்தையும் சேர்த்து, 6000 வருஷமாகிய ஆறும் நாளில் அல்லவோ நாம் இருக்கிருேம். ஏழாம் நாளில் பிரவேசிக்கவேண்டிய நாம், இந்த ஆறும் நாளில் இரண்டத்தனையாக இயேசுவைச் சேர்க்கக் கடன்பட்டிருக்கிருேம். இதையறிந்த ஆவியானவர் இக்காலத்தில் சபைகளில் தூதுகள் மூலமும், தீர்க்கதரிசனங்கள் மூலமும், "கிறிஸ்து சீக்கிரம் வருகிருர், ஆயத்தப்படுங்கள்" என்று எச்சரித்துக் கொண்டிருக்கிருர். உலக சம்பவங்கள், யுத்தங்கள், கலகங்கள், பூமியதிர்ச்சிகள், பஞ்சங்கள், கொள்ளை நோய்கள், வானத்தின் அடையாளங்கள், ஞானம் பெருகுதல், யூதர் ராஜ்யத்தை ஸ்தாபித்து முன்னேறுதல் இவை யாவும் ஏழாம் நாளின் இளைப்பாறுதலில் நாம் பிரவேசிக்கப் போகிறதை நமக்குப் பறைசாற்றுகின்றது. ஆகவே அதற்கு முன் இப்பொழுதே இரண்டத்தனையாக இயேசுவைச் சேர்த்துக்கொள்ள நாம் கூடுதல் விழிப்படைந்து ஜாக்கிரதையாக இருக்கவேண்டும். மேற்கூறிய அடையாளங்கள் சம்பவிக்கும்போது, நாம் நிமிர்ந்து பார்த்து நம் தலையை உயர்த்தவேண்டும் என்று இயேசு எச்சரித்திருக்கிருர் (லூக். 21: 28).

அன்றியும் பரிசுத்த பவுல், "நாம் விசுவாசிகளானபோது இரட்சிப்பு சமீபமாயிருந்ததைப் பார்க்கிலும் இப்பொழுது அது நமக்கு அதிக

சமீபமாயிருக்கிறது" (ரோ. 13:11) என்று கூறு கிருர். ஆம்! நாம் விசுவாசிகளான நாட்களைப் பார்க்கிலும் இப்போது இயேசுவின் வருகை சமீபம்.

மாணவ மாணவிகளுக்கு தேர்வு நெருங்கும் போது முன்பு ஒரு மணிநேரம் படித்தவர்கள் இப்பொழுது இரண்டு மணிநேரம் விழித்திருந்து படிக்கின்றனர். பரீட்சைக்கு முன் சிநேகிதர்களைக் கேலிசெய்து விளையாடி பாடசாலைக்குச் சென்றுகொண்டிருந்தவர்கள். இப்பொழுது வெட்கப் படாமல் தெருவில் நடந்துபோகும்போதும், வாகனங்களில் போகும்போதும் படித்துக்கொண்டே போகின்றனர். அப்படி முயற்சிக்கும் பெரும்பான்மையானவர்கள் வெற்றிபெற்று உயர்வகுப்பை அடைகின்றனர். அவ்விதமே இக்காலங்களில் உலகம், மாம்சம், பிசாசு இவைகளோடுள்ள சோதனைகளில் வெற்றிபெற ஆரும் நாளாகிய இக்காலத்தில் இரட்டிப்பாகப் பிரயாசப்படுவோமாக. இதற்காக ஒரு மணிநேரம் ஜெபித்தவர்கள் இரண்டு மணிநேரம் ஜெபித்தும், இன்னும் ஆவிக்குரிய சகல முயற்சிகளிலும் இரண்டு பங்காகப் பெருகியும், தேவனிடத்திலிருந்து வெளிப்படுத்தல்களைப் பெற்றும், பரிசுத்ததிலும், நற்கிரியைகளிலும் இரண்டு பங்காகப் பெருகுவோமாக!

இவ்விதம் பிரயாசப்பட்டால் மாத்திரமே இயேசுவின் வருகையில் உயரே உன்னதத்தில் எடுத்துக்கொள்ளப்பட்டு அவருடன் மகிழ்வோம். பின்பு அவருடன் ஆயிரவருட அரசாட்சியில் இவ்வுலகில் ஆளுகை செய்து ஏழாம் நாளின் இளைப்

பாறுதலைப் பூரணமாக அனுபவிப்போம். அவ்வி தம் ஏழாம் நாளில் பிரவேசிப்போமானால், இஸ்ரவேல் ஜனங்கள் மறுபடியும் எட்டாம் நாளாகிய முதலாம் நாளில் பிரவேசித்துப் பாடுபட்டது போல, நாம் பாடுபட அவசியமில்லை. நம் இளைப் பாறுதல் நித்திய நித்தியமாயிருக்கும். அல்லேலூயா!

(c) இஸ்ரவேல் ஜனங்கள் ஆறும் நாளில் இரண்டத்தனையாகச் சேர்த்து, ஏழாம் நாளில் குறைவின்றி நிறைவாக பூச்சியும் நாற்றமும் இல்லாமல் புசித்ததின் காரணத்தை யாத். 16:24-ல் வாசிக்கிறோம். "மோசே கட்டளையிட்டபடியே, அதை மறுநாள் வரைக்கும் வைத்து வைத்தார்கள்; அப்பொழுது அது நாறவும் இல்லை. அதிலே பூச்சிபிடிக்கவும் இல்லை." இதற்குக் காரணம் மோசேயாகிய ஊழியக்காரனுடைய சொற்படி செய்ததே ஆகும் அக்காலத்தில் மோசே சபையை நடத்தினதுபோல, இக்காலத்தில் அபிஷேகிக்கப் பட்ட ஊழியர் நடத்துகின்றனர். அத்துடன் பரிசுத்த ஆவியானவரும் நம்மை வழிநடத்துகிறார். "சத்திய ஆவியாகிய அவர் வரும்போது, சகல சத்தியத்திற்குள்ளும் உங்களை நடத்துவார்" (யோவா. 16:13). இஸ்ரவேல் புத்திரருக்கு ஆகாரமாகக் கொடுக்கப்பட்ட மன்னாவில் பூச்சியும் நாற்றமும் வராதிருந்ததுபோல, கர்த்தர் நமக்குத் தருகிற பூலோக ஆசீர்வாதங்களில் பூச்சியாகிய பாவமும், நாற்றமாகிய துர்க்கீர்த்தியும் வராதிருக்க வேண்டும். அதற்காகப் பூமிக்குரிய காரி

யங்களிலும், ஊழியர்களுடைய ஆலோசனையும், ஆவியானவரின் வழிநடத்துதலும் மிகத் தேவை. ஆகவே, "உங்கள் தேவனாகிய கர்த்தரை நம்புங்கள், அப்பொழுது நிலைப்படுவீர்கள்; அவருடைய தீர்க்கதரிசிகளை நம்புங்கள், அப்பொழுது சித்தி பெறுவீர்கள்" என்று II நாளா. 20:20-ல் வாசிக்கிறோம்.

சிலர் இவ்விரண்டிலும் கவனம் செலுத்தாது, கர்த்தர் தங்களுக்குக் கொடுக்கும் மிகுதியான ஆசீர் வாதங்களை, வீணாக அவ்வப்போது செலவுசெய்து, மாதக்கடைசியிலும், வயோதிபத்திலும், திடீரென ஏற்படும் தேவைகளிலும் கஷ்டப்படுகின்றனர். இயேசு 5000 பேரை ஐந்து அப்பங்களினால் போஷிப்பித்தபின், மீதித் துணிக்கைகளைக் குறித்து கவலையற்றவராய் விட்டுவிடாது, சேர்க்கும்படி சொன்னார். அவர் விசுவாசக் குறைவாலோ, நாளையைக் குறித்துள்ள கவலையினாலோ சேர்க்கும்படி சொல்லவில்லை. நாம் பூலோக ஆசீர்வாதங்களை ஞானமாக செலவழிக்க வேண்டும் என்பதைக் காட்டவே அப்படிச் செய்தார். இஸ்ரவேலர் ஆறும் நாளில் திருப்தியாகச் சாப்பிட்ட பின்பு, மீதியானதை ஏழாம் நாளுக்கென்று வைத்ததுபோலவும், இயேசு ஜனங்களை திருப்தியாகப் போஷிப்பித்த பின்பு மீதியானவற்றைச் சேகரித்தது போலவும், நாம் பூமிக்குரிய ஆசீர்வாதங்களை மிகுதியாகப் பெற்றுக்கொள்ளும்போது, நமக்கும், குடும்பத்திற்கும், மற்றவர்களுக்கும், கர்த்தருடைய ஊழியத்திற்கும் செய்யவேண்டியனவற்றைச்

சரிவரச் செய்து, மீந்ததை தேவசித்தத்தின் படியே சேகரித்து வைப்பது தவறல்ல. இதைக் குறித்தே சாலொமோன் ராஜா, "கர்த்தரின் ஆசீர்வாதமே ஐசுவரியத்தைத் தரும்; அதனோடே அவர் வேதனையைக் கூட்டார்" (நீதி 10:22) என்கிறார். தேவனுக்கும் மனிதனுக்கும் செய்ய வேண்டியதைச் செய்த பின்பு மாத்திரமே கர்த்தர் மனிதனை ஆசீர்வதிக்கிறார். அவ்விதம் செய்து, பெற்றுக்கொள்ளும் ஆசீர்வாதமாகிய ஐசுவரியத்தில் எவ்வித வேதனையும் இராது. அப்படிச் சேகரித்து வைப்பது யோசேப்பின் காலத்தில் செழிப்பான 7 வருட காலத்தில் சேகரித்து வைத்தவை, பஞ்சமான 7 வருடத்தில், மற்றவர்களுக்கு உதவினதுபோல உதவும். இவ்வாலோசனையின் நிமித்தம் நீங்கள் பொருளாசைக்கும், நாளையைக் குறித்துள்ள கவலைக்கும் இடங்கொடாது, மோசேயைப் போல தேவசித்தத்தை அறியும் ஊழியக்காரரின் ஆலோசனையின்படியும், பரிசுத்த ஆவியானவருடைய ஆலோசனையின்படியும் செய்யக் கவனமாயிருங்கள். இதில் ஆவியானவருடைய நடத்துதல் மிக முக்கியமானது. அப்படிச் செய்யாது உங்கள் விருப்பப்படி செய்தால் மோசேயின் சொற்படி கேளாமல் சேகரித்தவர்களுடைய மன்னாவில் பூச்சியும் நாற்றமும் பிடித்தது போல (யாத். 16:20), உங்களுக்கும் சம்பவிக்கும் என்பதை மறவாதீர்கள். இதை வற்புறுத்தவே யாக்கோபு அப்போஸ்தலன், "உங்கள் பொன்னும் வெள்ளியும் துருப்பிடித்தது; அவைகளிலுள்ள துரு உங்களுக்கு விரோதமாகச் சாட்சியாயிருந்து, அக்கினியைப்போல் உங்கள்

மாம்சத்தைத் தின்னும். கடைசி நாட்களிலே பொக்கிஷத்தைச் சேர்த்தீர்கள். இதோ, உங்கள் வயல்களை அறுத்த வேலைக்காரருடைய கூலி உங்களால் அநியாயமாய்ப் பிடிக்கப்பட்டுக் கூக்குரலிடுகிறது; அறுத்தவர்களுடைய கூக்குரல் சேனைகளுடைய கர்த்தரின் செவிகளில்பட்டது; பூமியிலே நீங்கள் சம்பிரமமாய் வாழ்ந்து, சுகபோகத்தில் உழன்றீர்கள்'' (யாக். 5:3-5) என்று எழுதுவதைக் கவனித்து ஆசீர்வாதத்தைப் பெற்றுக்கொள்வதற்கும், சாபத்திலிருந்து நீங்கிக்கொள்வதற்கும் ஏற்றபடி ஞானமாய் ஜீவிக்கக் கர்த்தர் உதவி செய்வாராக.

மிகுதியான நன்மைகள் இல்லாதவர்கள் இவ்வித கவலைகளுக்குட்படாதிருக்க, ''முதிர்வயது வரைக்கும் .... தாங்குவேன்'' (ஏசாயா 46:4) என்றும், "உலகத்தின் முடிவுபரியந்தம் சகல நாட்களிலும் நான் உங்களுடனேகூட இருக்கிறேன்" (மத். 28:20) என்றும், ''சிங்கக்குட்டிகள் தாழ்ச்சியடைந்து பட்டினியாயிருக்கும்; கர்த்தரைத் தேடுகிறவர்களுக்கோ ஒரு நன்மையுங் குறைவுபடாது'' (சங். 34:10) என்றும் அவர்களுக்குக் கர்த்தர் வாக்குக் கொடுக்கிறார். அத்துடன் சங்கீதக்காரன், ''நீதிமான் கைவிடப்பட்டதையும், அவன் சந்ததி அப்பத்துக்கு இரந்து திரிகிறதையும் நான் காணவில்லை'' (சங். 37:25) என்கிறார். ஆகையால் மிகுதியான நன்மைகள் இல்லாதவர்கள் கவலைக்கு இடங்கொடாது, ''ஒன்றுமில்லாதவர்களென்னப்பட்டாலும், சகலத்தையுமுடையவர்களாகவும் எங்களை

விளங்கப்பண்ணுகிறேம்'' (II கொரி. 6:10) என்று கூறும் பரி. பவுலுடைய ஜெயத்தொனியை நம்பினுல் கர்த்தர் உங்களையும் அப்படியே நடத்துவார். அப்படியே நடத்தப்பட்டவர்களும், நடத்தப்பட்டுக் கொண்டிருக்கிறவர்களுமான ஆயிரக் கணக்காண குடும்பங்கள் உலகில் உண்டே. நீங்களும் அவர்களில் ஒருவராவீர்கள்.

8. மன்னுவின் ருசி தேனிட்ட பணிகாரத்திற்கு ஒப்பாக இருந்தது.

மன்னுவின் ருசி தேனிட்ட பணிகாரத்திற்கு ஒப்பாக இருந்ததாக, "அதின் ருசி தேனிட்ட பணிகாரத்திற்கு ஒப்பாக இருந்தது'' என்று யாத். 16:31 ல் வாசிக்கிறேம். தேன் இனிமையானது. அவ்விதமாகவே இம்மன்னுவாகிய கிறிஸ்துவும் இனிமையானவராக இருக்கிறபடியால், தாவீது 104 ஆம் சங்கீதம் 34 ஆம் வசனத்தில், "நான் அவரைத் தியானிக்கும் தியானம் இனிதாயிருக்கும்'' என்று கூறுகிருர். அவரைப் போலவே, இன்றும் இயேசுவை அனுபவிக்கிறவர்கள் அவரை இனியவராகவே கண்டுகொள்கின்றனர். ஆகவே பரிசுத்தவான்களில் ஒரு சிலர் 'இன்ப இயேசு' என்று அழைக்கின்றனர். உண்மையாகவே அவர் இனியவர்தான். தாவீது இந்த இனிய தேவனுக்கு சங். 73:1ல் "நல்லவர்'' என்னும் அடைச்சொல்லையும் பயன்படுத்தியுள்ளார். இவ்விதமாக ஒரு கூட்டத்தார் இன்பமானவர், இனியவர், நல்லவர் என்று போற்றிப் புகழும்போது, வேறொரு கூட்டத்தார்

இவ்விதமான இனிமையை அனுபவித்து ருசிக்கக் கூடாதவர்களாக இருக்கின்றனர். வேறொரு கூட்டத்தார் தங்களுக்கு வந்த கஷ்டங்கள், நஷ்டங்கள், வியாதிகள், தங்கள் அருமையானவர்களுக்குச் சம்பவித்த மரணங்கள் முதலியவற்றால் தேவனைக் கசந்து பலவாறு தூஷிக்கின்றனர். இவ்வித மாறுபாடுகளுக்குக் காரணம் என்ன?

கொடிய காய்ச்சலினால் பாடுபடும் ஒருவனுக்கு நேர்த்தியான சுத்தத் தேன் கசப்பாகத் தெரியும். இது தேனுடைய பிழையும் அல்ல. அவனுடைய பிழையும் அல்ல. அவனுக்குள் இருக்கும் வியாதியே அதற்குக் காரணம். அப்படியே தேவனை இனிமையானவர் என்று அனுபவிக்க முடியாததற்குக் காரணம் அவனுக்குள் இருக்கும் வியாதியாகிய பாவமே என்று பின்வரும் வசனத்திலிருந்து நிதானித்துக்கொள்ளலாம். தாவீது, தேவன் எல்லாருக்கும் நல்லவர் என்று சொல்லாது, "சுத்த இருதயமுள்ளவர்களாகிய இஸ்ரவேலருக்குத் தேவன் நல்லவராகவே இருக்கிறார்" என்று சங் 73:1-ல் சொல்கிறார். இதிலிருந்து தேவன் ஒருவனுக்குத் தேனிட்ட பணியாரம் போல, இனியவராகவும், இன்பமானவராகவும், நல்லவராகவும் ருசிக்கவேண்டுமானால் சுத்த இருதயம் அவசியம் எனவும், சுத்த இருதயமில்லாதவர்களுக்கு அவர் நல்லவராகத் தென்படார் எனவும் அறிகிறோம்.

மனுஷர் எல்லாரும் பாவஞ்செய்து தேவ மகிமையற்றவர்களாக இருக்கிறார்கள். அன்றியும், இயேசு மாற். 7:21-23-ல், "மனுஷருடைய இருதயத்திற்குள்ளிருந்து பொல்லாத சிந்தனைகளும்' விபசாரங்களும், வேசித்தனங்களும், கொலைபாதகங்களும், களவுகளும், பொருளாசைகளும், துஷ்டத்தனங்களும், கபடும், காமவிகாரமும், வன்கண்ணும், தூஷணமும், பெருமையும், மதிகேடும் புறப்பட்டுவரும். பொல்லாங்கானவைகளாகிய இவைகளெல்லாம் உள்ளத்திலிருந்து புறப்பட்டு மனுஷனைத் தீட்டுப்படுத்தும்'' என்று கூறுகிறார். ஆகவே மேற்கூறிய பொல்லாங்கானவைகளாகிய இவைகளெல்லாம் மனுஷனுடைய இருதயத்திற்குள்ளிருப்பதால், அவனுடைய இருதயம் சுத்தமானதல்ல என்று அறிகிறோம். காய்ச்சல் நீங்கின பின், அதே மனுஷனுக்கு முன்பு கசந்திருந்த அதே தேன் இனிமையாக இருப்பதுபோல, இவ்வசுத்தங்கள் நீங்கி இருதயம் சுத்தமாகும்போது, தேவன் நல்லவராக, தேனிட்ட பணியாரமாக அவனுக்கு இருக்கிறார்.

நண்பனே! உம்முடைய இருதயம் இவ்விதமாகச் சுத்திகரிக்கப்பட்டிருக்கிறதா?

உலகத் தகப்பன் தன் பிள்ளையின் வியாதி நீங்க வேண்டுமென்று விரும்புகிறான். அவ்விதமே நம் பரமதகப்பனும் விரும்பி, சுத்திகரிப்பிற்குரிய பரிகாரத்தை உண்டுபண்ணியிருக்கிறார். அச்சுத்திகரிப்பிற்குரிய பரிகாரம் இயேசுவின் இரத்தமே

என்று எபி. 9:22-ல் வாசிக்கிறோம். இச்சுத்திகரிப்பைப் பெற்றுக்கொள்ள தானதர்மங்கள் செய்ய வேண்டுமென்றோ, புண்ணிய ஸ்தலங்களுக்கு யாத்திரை செய்ய வேண்டுமென்றோ, காடு மலை சென்று கடுந்தவம் செய்ய வேண்டுமென்றோ எதிர்பார்க்கப்படவில்லை. ஆனால் நம் பாவங்களை மனஸ்தாபத்துடன் அறிக்கையிடவேண்டும் என்னும் நிபந்தனை வைத்திருப்பதை I யோவா. 1:9-ன் மூலம் அறிகிறோம். அவ்விதம் அறிக்கையிடும் போது இரக்கமுள்ள தகப்பன் இயேசுவின் இரத்தத்தால் நம் இருதயத்திலுள்ள சகல பாவங்களையும் நீக்கிச் சுத்திகரிக்கிறார் (I யோ. 1:7). அதுமாத்திரமல்ல, ''பாவங்களை.........இனி நினையாமலிருப்பேன்'' (எபி. 8:12) என்றும் வாக்களிக்கிறார். ஆ! என்ன அற்புத தேவனும், அதிசய சுத்திகரிப்பும்!

இவ்விதம் சுத்திகரிக்கப்பட்ட பின்பு, இச்சுத்திகரிப்பில் நாம் வளரவேண்டும் என்று வெளி. 22:11-ன் மூலம் அறிகிறோம். இவ்வித வளர்ச்சிக்காக வசனத்தினால் உண்டாகும் சுத்திகரிப்புத் தேவை (யோவா. 17:17). இச்சுத்திகரிப்பு ஞானஸ்நானத்தினால் வருகிறது என்பதை பரி. பவுல் தன் சொந்த வாயால், ''ஞானஸ்நானம் பெற்று, உன் பாவங்கள் போகக் கழுவப்படு'' (அப். 22:16) என்று அனனியா தன்னிடம் கூறியதை எடுத்துக் கூறுவதிலிருந்து அறிகிறோம். ஆகவே, நாம் உண்மையான் முழுக்கு ஞானஸ்நானம் எடுக்கும்போது, இச்சுத்திகரிப்பில் வளருகிறோம். இன்னமும்,

"புறஜாதியாராகிய பலி பரிசுத்த ஆவியினுலே பரிசுத்தமாக்கப்பட்டு" என்று ரோமர் 15:15-ல் வாசிப்பதால், அந்நிய பாஷை அடையாளத்துடன் பரிசுத்த ஆவியைப் பெற்றுக்கொள்ளும்போது (அப். 2:4), பரிசுத்தத்தில் மேன்மேலும் வளர பரிசுத்த ஆவியானவர் உதவி செய்கிருர் என்று அறிகிருேம்.

இவ்விதமாக ஆத்தும வியாதி நீங்கி சுத்திகரிப்பைப் பெற்ற ஒருவன் தேவனை நல்லவராக, இனிமையானவராக ருசிக்கத் தொடங்குகிருன். இதன் பின்பு இருதயத்தின் சுத்தத்தை எல்லாக் காவலுடனும் காத்துக்கொள்ள வேண்டும். அப்படிக் காத்துக்கொள்ளும்போது தேவன் செய்யும் ஒவ்வொரு கிரியையிலும் அவர் நல்லவராக இருப்பதாகக் காணலாம். ஒரு பொருளை நாவில் வைத்து ருசித்துக்கொண்டேயிருந்து அதின் ருசி எப்படி என்று அறிந்துகொள்கிருேம். அப்படியே சுத்த இருதயத்தின் மூலம் தேவன் நல்லவர் என்று அறிய ஆரம்பித்த நாம், அவரை ருசி பார்த்துக்கொண்டே இருக்கவேண்டும். இதை நிரூபிக்கவே, "கர்த்தர் நல்லவர் என்பதை ருசித்துப்பாருங்கள்" (சங். 34:8) என்று தாவீது ராஜா கூறுகிருர். தாவீது ருசிபார்த்துக்கொண்டேயிருந்து, கர்த்தர் நல்லவர் என்றும்; தியானித்துக்கொண்டேயிருந்து அவர் இனிமையானவர் என்றும் அறிந்துகொண்டார். நல்லவர் எனபதும் இனிமையானவர் என்பதும் ஒன்றே என்பதை அனுபவத்தால் அறிவோமே. இவ்விதம் நல்லவர் அல்லது இனிமை

யானவர் என்று கண்டுபிடிக்க, ருசி பார்த்தலாகிய தியானம் அவசியமாயிருக்கிறது. ஆகவே ருசி பார்த்தல் என்பது தியானமாகும். அதாவது நமக்குச் சம்பவிக்கும் ஒவ்வொரு காரியத்திலும் இருக்கும் நன்மையைத் தியானத்தின் மூலம் கண்டு கொள்ளவேண்டும்.

யோசேப்பு தனக்குச் சம்பவித்த தீமைகள் யாவும் தன்னுடைய நன்மைக்காக நல்ல தேவனிடத்திலிருந்து வந்தன என்று கூறுகிறார். அவர் தன் வாய்மொழியால், "நீங்கள் எனக்குத் தீமை செய்ய நினைத்தீர்கள்; தேவனோ, இப்பொழுது நடந்துவருகிறபடியே, வெகு ஜனங்களை உயிரோடே காக்கும்படிக்கு, அதை நன்மையாக முடியப்பண்ணினார்" (ஆதி. 50:20) என்றும், "நீங்கள் அல்ல, தேவனே என்னை இவ்விடத்துக்கு அனுப்பி, என்னைப் பார்வோனுக்குத் தகப்பனாகவும், அவர் குடும்பம் அனைத்திற்கும் கர்த்தனாகவும், எகிப்து தேசம் முழுதுக்கும் அதிபதியாகவும் வைத்தார்" (ஆதி. 45:8) என்றும் கூறுகிறார். இவ்விதம் கூறுவதால் அவர் தேவனைத் தியானித்து நல்லவர் என்று ருசித்ததாக அறிகிறோம். ஒருவனுக்கு சுத்த இருதயம் உண்டாகும்போது, சுத்த இருதயத்தின் மூலம், "இனம் இனத்தோடு சேரும்" என்று சொல்வதுபோல, தன் இனமாகிய பரிசுத்தரை நேசிக்கத் தொடங்குகிறான். ஆகவே அவரிடத்தில் அன்புகூருகிறவர்களுக்குச் சகலமும் நன்மைக்கு ஏதுவாக நடக்கிறதென்று ரோமர் 8:28ல் எழுதி

யிருப்பது அவன் ஜீவியத்தில் சம்பவிக்கிறது. சுத்த இருதயத்தின் மூலம் தேவன் நல்லவர் என்று தியானிக்கப் பழகின இவன், அவரில் அன்புகூர ஆரம்பித்த பின், தனக்கு சம்பவிக்கிறதெல்லாவற்றிலும் தனக்கு நன்மை இருப்பதைக் கண்டு களிக்கிருன். இவ்விதக் களிப்பு 'கர்த்தர் நல்லவர், கர்த்தர் நல்லவர்' என்று சொல்ல அவனை ஏவுகிறது. இவ்விதமாக அவன் இம்மன்னுவைத் தேனிட்ட பணியாரமாக அனுபவிக்கிருன்.

தேன் இனிமையாக இருப்பது மாத்திரமல்ல, இருதயத்தைப் (நெஞ்சை) பெலப்படுத்தி இரத்தத்தைச் சுத்திகரிக்கும் தன்மையுடையது. அப்படியே இம்மன்னுவாகிய இயேசுவைப் புசிக்கும் ஒருவன் அவரைத் தியானித்துத் தியானித்துச் சிங்கத்திற்கொத்த இருதயமுள்ளவனுகிருன். சிலர் பேச்சிலும், கிரியையிலும் பயப்படாது வீரர்களைப் போலக் காண்பித்தாலும், இருதயம் பயத்தினுல் நிரம்பியிருக்கிறது. அவ்விதமாகவே தாவீது பொதுவாக, "நான்......பயப்படேன்" என்று தன் சங்கீதங்களில் (உ ம். சங். 23:4) கூறுகிருர். ஆனுல் தேவனை நல்லவராக ருசிபார்த்து இத்தேனினுல் அவர் இருதயம் பெலப்பட்டது. ஆகவே பொதுவாக 'பயப்படேன்' என்று சொல்லாது, இருதயத்திலுள்ள பயம் நீங்கி, "என் இருதயம் பயப்படாது" (சங். 27:3) என்று கூறி, இத்தேனினுல் தன் இருதயம் பெலப்பட்டிருக்கிறது என்பதை நிரூபிக்கிருர். அன்றியும் இத்தேனை ருசித்த செம்மையானவனுடைய "இருதயம் கர்த்தரை நம்பித்

திடனாயிருக்கும்" (சங். 112:7) என்று கூறுவதால், இத்தேனின் நிமித்தம் கர்த்தரை நம்பி இருதயம் திடனாகி செம்மையானவருமானார் என்று அறிகிறோம். இரத்தசாட்சிகளின் ஜீவிய சரித்திரத்தை வாசிக்கும்பொழுது நம் நெஞ்சம் உருகி, கண்கள் கலங்குகின்றனவன்றோ! ஆனால் அவர்களுடைய இருதயம் பயப்படாது. அவர்கள் பட்டயத்திற்கும், தீயிற்கும், சொல்லொண்ணா உபாதைகளுக்கும் தைரியமாய் முகங்காட்டினார்கள். தைரியத்தோடு மரிக்க அவர்கள் இருதயத்தைப் பெலப்படுத்தினது இத்தேனாகிய கிறிஸ்துவன்றோ! இவ்விதம் இத்தேனிட்ட பணியாரம் மனுஷனுடைய இருதயத்தைப் பெலப்படுத்தி, எவ்வித உபத்திரவத்தையும் சகிக்க அவனுக்குப் பெலன் கொடுக்கிறது. அதை அனுபவித்த பரி. பவுல், "என்னைப் பெலப்படுத்துகிற கிறிஸ்துவினாலே எல்லாவற்றையுஞ்செய்ய எனக்குப் பெலனுண்டு" (பிலி. 4:13) என்று கூறி ஜெயத்தொனியை முழங்கப்பண்ணுகிறார். அல்லேலூயா!

தேன் இரத்தத்தைச் சுத்திகரிப்பது போல, இத்தேனிட்ட பணியாரம் உள்ளான மனுஷனைச் சுத்திகரிக்கிறது என்பதை நிரூபிக்க, கர்த்தரை ருசித்தவர்கள் துர்க்குணம், கபடு, வஞ்சகம், பொறாமை, புறங்கூறுதல் முதலிய சுபாவங்களினின்று விடுதலைபெற்று சுத்தமாக்கப்படக்கூடும் என்று 1 பேது 2:1, 2ல் பரி. பேதுரு கூறுகிறார். ஒருவன் தேவனை நல்லவர் என்று ருசித்து தியானித்து அறிந்த பின்பு இவ்வறிவு அவன் பரிசுத்தத்தில்

வளர அவனுக்கு உதவிசெய்கிறது. மனச்சாட்சிக்கு இசைய ஜீவிக்கும் ஒரு சாதாரண மனுஷன், ஒருவனிடமிருந்து பல நன்மைகளைப் பெற்ற பின்பு தனக்கு நன்மைகள் செய்தவனைத் துக்கப்படுத்தாது, சந்தோஷப்படுத்தி ஜீவிக்கப் பிரயாசப்படுகிறுன், நம்முடைய இயேசு நமக்காக இரத்தம் சிந்தி, நமக்கு இப்பெரிய இரட்சிப்பையும், தமது பரிசுத்த ஆவியையும் தந்து, நாம் பாவத்தை வெறுத்து ஜீவிக்கக் கிருபை தந்திருக்கிறுர். இவ்விதமாக நம்மை ஆவிக்குரிய ஜீவியத்தில் உன்னதத்தில் உட்கார வைத்திருக்கிறுர் அன்றியும் உலகில் பல்லாயிர ஜனங்கள் உண்ண உணவும், உடுக்க உடையும், வசிக்க இடமுமின்றி இருக்கின்றனர். வேறுசிலர் கொடும் வியாதிகளால் பாடுபடுகின்றனர். இன்னெரு கூட்டத்தார் பாவத்தைத் தண்ணீரைப் போலக் குடித்து, அறியாமையினுல் நித்திய நரகத்திற்குத் தங்களை ஆயத்தப்படுத்திக் கொண்டிருக்கின்றனர். ஆனுல் தேவனே நமக்கு இவ்வித காரியங்களிலிருந்து விடுதலை தந்து, பல்லாயிரங்களுக்கு இல்லாத பாக்கிய சிலாக்கியங்களை இலவசமாகத் தந்து நடத்துகிறுர். இவைகளைத் தியானிக்கும்போது அவர் நம்மேல் தயவுள்ளவர் என்று ருசித்தறிகிறேும். தயையுள்ள கர்த்தரிடத்திலிருந்து எண்ணிலடங்கா நன்மைகளைப் பெற்று, 'அவர் நல்லவர்' என்று ருசித்து அறிந்த ஒருவனுடைய இருதயம் தேவனுக்கு முன்பாக நன்றியால் நிறைந்திருக்கிறது. ஆகவே தேவனைத் துக்கப்படுத்தாது அவரைப்பிரியப்படுத்த வேண்டும் என்னும் எண்ணம் அவனுக்குள் உண்டாகிறது. எபேசியர்

4:30, 31ன் மூலம் பாவங்கள் அவரை துக்கப்படுத்துகின்றன என்று அறிவோம். எனவே மேற்கூறிய தியானம் இவ்வித எல்லா பாவங்களையும் வெறுக்கச்செய்து அவரைச் சந்தோஷப்படுத்த நம்மை ஏவுகிறது.

அழிந்துபோகிற (அநித்திய) நன்மைகளை ஒருவனிடத்திலிருந்து குறைவாகப் பெற்ற ஒருவன் தனக்கு நன்மை செய்தவனைத் துக்கப்படுத்தாது, அவனைச் சந்தோஷப்படுத்த முயற்சிக்கிறான். நித்திய, அநித்தியமான எண்ணிலடங்கா நன்மைகளைத் தந்து, நித்தியத்தில் நம்மை மேன்மைபடுத்தும் இயேசு பரிசுத்தத்தை சிநேகிக்கிறார். ஆகையால் அவர் சிநேகிக்கும் பரிசுத்தமுள்ளவர்களாக (மல். 2:11) ஜீவித்து, அவரைச் சந்தோஷப்படுத்தவேண்டியது எத்தனை அத்தியாவசியம்! இவ்வெண்ணம் இடைவிடாது உம் உள்ளத்தில் இருக்குமாயின், இயேசுவுக்குப் பிரியமாக இருப்பது மாத்திரமல்ல, பரிசுத்த ஜீவியமும் இலகுவாகும். மேற்கூறியபடி பரிசுத்தமாக்கப்படுகிறவர்கள் நரகத்தையோ, பிசாசையோ, தேவனுடைய சிட்சையையோ எண்ணி பரிசுத்தமாக ஜீவிக்கத் தூண்டப்படுவதில்லை. தேவன் செய்த கோடா கோடி சரீர, ஆவிக்குரிய, உலக நன்மைகள் அவர்கள் கண்களுக்கு முன் குவிந்து மலைபோல இருப்பதால், அவைகளைத் தியானித்து நன்றியால் நிறைந்திருப்பதால் பரிசுத்த ஜீவியம் அவர்களுக்கு சுலபமாகின்றது. இவ்விதமாகப் பரிசுத்தமாக்கப்படுகிறவர்கள், "தேவன் தமது பரிசுத்தத்தைக்

கொண்டு விளம்பினுர், ஆகையால் களிகூருவேன்'' (சங். 60:6) என்று கூறி, பரிசுத்தத்தில் களிகூருகின்றனர்.

9. மன்னுவின் ருசி புது ஒலிவ எண்ணெயின் ருசிபோல் இருந்தது.

மன்னுவின் ருசி புது ஒலிவ எண்ணெயின் ருசி போல இருந்ததாக, ''அதின் ருசி புது ஒலிவ எண்ணெயின் ருசி போலிருந்தது'' என்று எண். 11:8-ல் வாசிக்கிறேம். எண்ணெயில் கொழுப்புச் சத்து உள்ளதை அறிவோம். சரீர சுக பெலனுக்குக் குறிக்கப்பட்ட அளவு கொழுப்புச் சத்து மிக இன்றியமையாதது. இச்சத்து குறையும்போது பல்வேறு வியாதிகள் சரீரத்தைப் பீடிக்கின்றன. அப்படியே, உள்ளான மனிதனுகிய ஆத்துமாவிற்கும் கொழுப்புச் சத்து அவசியமாயிருக்கிறது. இதன் நிமித்தமே இம் மன்னுவாகிய இயேசுவிலும், இச்சத்து அடங்கியிருக்கும் எண்ணெய் சேர்ந்திருக்கிறது. தாவீது ருசித்து தேனைக் கண்டது மாத்திரமல்ல, இக்கொழுப்பையும் தன் ஆத்துமாவில் ருசித்ததாக பின்வருமாறு கூறுகிறுர். ''பரிசுத்த ஸ்தலத்தில் உம்மைப்பார்க்க ஆசையாயிருந்து, உமது வல்லமையையும் உமது மகிமையையும் கண்டேன். ....என் உதடுகள் உம்மைத் துதிக்கும். ....நிணத்தையும் கொழுப்பையும் உண்டது போல என் ஆத்துமா திருப்தியாகும்; என் வாய் ஆனந்தக்களிப்புள்ள உதடுகளால் உம்மைப் போற்றும்'' (சங். 63:2 - 5) என்று

கூறி. தேவனை பரிசுத்த ஸ்தலத்தில் தேடி, அவரைக் கண்டு துதித்ததினிமித்தம் இக்கொழுப்பு தன் ஆத்துமாவிற்குக் கிடைத்ததாக வெளிப்படுத்துகிறார். தேவையான அளவு கொழுப்புச் சத்துள்ள மனுஷன் சுகபெலனுடன் ஜீவித்து சந்தோஷப்படுகிறான். அவ்விதமே தாவீதுடைய ஆத்துமா கொழுப்பினால் திருப்தியடைந்தபடியால், சாதாரண உதடுகளால் தேவனைப் போற்றுது, ஆனந்தக் களிப்புள்ள உதடுகளால் அவரைப் போற்றிப் புகழ்ந்ததை மேற்கூறிய வசனத்திலிருந்து அறிகிறோம். இவ்விதம் அவரை ஆனந்தக் களிப்புடன் துதிக்கும்போது நாம் பேரானந்தம் அடைகிறோம்.

சிலர் துதிக்கும், ஸ்தோத்திரத்துக்கும் உள்ள வித்தியாசத்தை அறியாதபடியால், வித்தியாசமான அனுபவங்களைப் பெற்றுக்கொள்ளக் கூடாதவர்களாக இருக்கின்றனர். தாவீது 103-ஆம் சங்கீதம் 1, 2-ஆம் வசனங்களில் தேவனைத் துதியாது, அவரை ஸ்தோத்திரிக்கிறார். 'என் ஆத்துமாவே, கர்த்தரை ஸ்தோத்திரி; அவர் செய்த சகல உபகாரங்களையும் மறவாதே'' என்று கூறி ஸ்தோத்திரம் என்பது என்ன என்பதை வெளிப்படுத்துகிறார். ஸ்தோத்திரிப்பது என்பது அவர் செய்த நன்மைகளை மறவாது அதற்காக நன்றி செலுத்துவது (Thanks giving) ஆகும். இவ்விதம் நாம் அவரை ஸ்தோத்திரிக்கும்போது, II கொரி. 4:15-ல கூறப்பட்டிருப்பதுபோல, நமக்கு அதிகமான கிருபை கிடைக்கிறது.

148-ஆம் சங்கீதத்தில் தாவீது தேவனை ஸ்தோத்திரியாமல் துதிப்பதைக் காண்கிறோம். முதலாம் வசனத்தில் "அல்லேலூயா, வானங்களில் உள்ளவைகளே, கர்த்தரைத் துதியுங்கள்" என்று கூறுகிறார். அத்துடன் கர்த்தருடைய வல்லமை விளங்கும் சிருஷ்டிகளையும் அழைத்துத் துதிக்கச் சொல்லுகிறார். கடைசியாக, "அவர்கள் கர்த்தரின் நாமத்தைத் துதிக்கக்கடவர்கள்; அவருடைய மகிமை பூமிக்கும் வானத்திற்கும் மேலானது" என்று 13 ஆம வசனத்தில் கூறி, போற்றிப் புகழ்ந்து கொண்டாடுகிறார். இங்கு அவர் துதிக்கும்போது, தேவன் செய்த நன்மைகளைச் சிந்தியாது, தேவனுடைய அளவற்ற வல்லமை, மகிமை, மேன்மை முதலியவற்றைச் சிந்தித்து அவரைப் புகழுகிறார். ஆகவே தேவனைத் துதிப்பதென்பது அவருடைய அளவற்ற வல்லமை, மகிமை, மேன்மை முதலியவற்றை சிந்தித்து அவரைப் புகழ்வதாகும். (Fraise)

இவைகளிலிருந்து ஸ்தோத்திரத்தினுலே கிருபை பெருகுகின்றது என்றும், துதியினுலே ஆனந்தக் களிப்புள்ள உதடுகள் கிடைக்கின்றன என்றும் அறிந்து கொள்கிறோம்.

இவ்விரண்டையும் அறிந்திருந்த நெகேமியா ஆலயத்தைப் பழுதுபார்த்த பின்பு ஸ்தோத்திரிப்பதற்கு ஒரு கூட்டத்தாரையும், துதிப்பதற்கு வேருெரு கூட்டத்தாரையும் நியமித்தார் என்று நெகே. 12:46ல் காண்கிறோம். நெகேமியா செய்த

பிரகாரமாகவே, எசேக்கியா ராஜா செய்ததையும் II நாளா. 31:2ன் மூலம் அறிகிறோம். ஆகவே ஸ்தோத்திரித்துக் கிருபை பெற்றுக்கொள்வது மாத்திரமல்ல, துதித்து ஆனந்தக் களிப்புள்ள உதடுகளைப் பெற்று நிணத்தையும் கொழுப்பையும் உண்டதுபோல ஆத்துமா திருப்தியடையக் கர்த்தர் உதவி செய்வாராக.

இம் மன்னுவிலுள்ள எண்ணெயானது மேற் கூறிய பாக்கியத்தைத் தருவது மாத்திரமல்ல, மனுஷருக்கு முகக்களையையும் உண்டாக்குகிறது என்று சங். 104:15ல் தாவீது ராஜா கூறுகிறார். இதிலிருந்து நாம் உள்ளத்தில் சந்தோஷமுடையவர்களாயிருந்தால் மட்டும் போதாது, முகத்திலும் சந்தோஷம் வெளிப்படவேண்டும் என்பது விளங்குகிறது. ஒரு சில கர்த்தருடைய பிள்ளைகள் உள்ளத்தில் சந்தோஷமுடையவர்களாக இருப்பதாகக் கூறிக் கொண்டு, முகத்தை ஒரு சிலர் நீட்டியும், வேறு சிலர் தூக்கியும் வைத்துக்கொண்டு ஜீவிப்பது துக்ககரமானதாகும். இவ்வித ஜீவியத்தால் கர்த்தருடைய ஊழியம் குற்றப்படும் என்று அறிந்த பரி. பவுலும், அவரோடிருந்தவர்களும், தங்கள் துக்கத்திலும் எப்போதும் சந்தோஷமுடையவர்களாகத் தங்களை விளங்கப் பண்ணினார்கள். ஆகவே "இந்த ஊழியம் குற்றப்படாதபடிக்கு ....துக்கப்படுகிறவர்கள் என்னப்பட்டாலும் எப்பொழுதும் சந்தோஷப்படுகிறவர்களாகவும்......எங்களை விளங்கப்பண்ணுகிறோம்" (II கொரி. 6:3, 10)

என்று அவர் எழுதுகிருர். நண்பனே! உம்மிடத்தில் முகக்களை எப்போதும் காணப்படாவிட்டால், கர்த்தருடைய ஊழியம் குற்றப்பட்டு ஆத்துமாக்களுக்கு இடறலாய் இருக்கிறீர் என்பதை அறிந்து கொள்வீராக.

இம்மன்னுவாகிய கிறிஸ்துவைக் காட்டும் நட்சத்திரத்தைக் கண்டபோது சாஸ்திரிகள் சந்தோஷமடைந்தார்கள் என்று மத் 2:10ல் வாசிக்கிறோம். பலவித பாரங்களாலும், கவலைகளாலும் நிறைந்திருக்கும் மனுஷர் சந்தோஷத்தைத் தேடுகின்றனர். சந்தோஷத்தைப் பெற்றுக்கொள்ளும் பொருட்டு தற்காலிகமான சந்தோஷத்தைக் கொடுக்கும் நாகரீகங்கள், பாவங்கள், படக்காட்சிகள் முதலியவற்றிற்குத் தங்கள் பணத்தை வாரியிறைக்கின்றனர். இவைகளெல்லாவற்றிலும் திருப்தியடையாது, மெய் சந்தோஷத்தைத் தேடித் திரியும் மனுஷருக்கு நம் முகமலர்ச்சியினிமித்தம் நம்மில் மனமகிழ்ச்சியிருக்கிறது என்பதை விளங்கப்பண்ண வேண்டும். அப்படி நம்மை நாம் விளங்கப்பண்ணும்போது தேன் உள்ள பூவிடம் வண்டை வரவழைக்க அவசியமிராதது போலவும், சர்க்கரையிடம் எறும்பை வரவழைக்க அவசியமிராதது போலவும், மேற்கூறியவாறு சந்தோஷத்தைத் தேடும் மனுஷர் நம்மிடம் இருக்கும் சந்தோஷத்தைக் கண்டு, தாங்களாகவே வந்து இச்சந்தோஷத்தைப் பெற்றுக்கொள்வர். அழகான செயற்கை பூவிடம் வண்டைக் கூவி அழைத்தாலும் அது வராதே! பல இடங்களிலும் தேவ

மனுஷருடைய சந்தோஷத்தைக் கண்டு அவர்களிடம் நெருங்கி இச்சந்தோஷத்தின் காரணத்தை வினவி தாங்களும் சந்தோஷமடைந்த பலர் உண்டு. இப்போது அவர்களும் "மனமகிழ்ச்சி முகமலர்ச்சியைத் தரும்" என்ற சத்தியத்தை உலகத்திற்குக் காட்டுகின்றனர்.

10 மன்னா கொத்தமல்லி அளவு சிறியதாக இருந்தது.

மன்னா சிறியதாக இருந்ததாக, "வனாந்தரத்தின் மீதெங்கும்......ஒரு சிறிய வஸ்து உறைந்த பனிக்கட்டிப் பொடியத்தனையாய்த் தரையின் மேல் கிடந்தது" என்று யாத். 16:14, 31ன் மூலம் அறிகிறோம். இயேசு எல்லா நாமங்களுக்கும் மேலான நாமத்தை உடையவராயிருந்தும் (பிலி. 2:11), அவர் மன்னாவைப்போலச் சிறியவராகக் காணப்பட்டார். சத்திரத்திலும் இடம் இல்லாது மாட்டுத்தொழுவின் முன்னணையில் கிடத்தப்பட்டார். யூதேயாவிலுள்ள ஆயிரங்களுக்குள்ளே சிறியதான பெத்லகேமிலே (மீகா 5:2) பிறந்து சிறிய மன்னாவாகத்தன்னை ரூபகாரப்படுத்தினார். இவ்விதமாக இம்மன்னா பிறப்பிலேயே சிறிதாகக் காணப்பட்டார். நாசரேத்திலிருந்து யாதொரு நன்மை உண்டாகக் கூடுமோ என்று நாத்தான்வேலால் கூறப்பட்டு சிறியவராகக் காணப்பட்டார். தனக்குப் பிரசங்கம்பண்ண பிரசங்க பீடமும் இல்லாது மற்றவர்களுடைய படகில் நின்று பிரசங்கித்து சிறியவராக காணப்பட்டார். பலதடவைகள்

பசியாகவும், தாகமாகவும் இருந்து சிறுமைப்பட்ட வராகக் காணப்பட்டார். தங்கவும் தலைசாய்க்க வும் இடமின்றி பல தடவைகளில் வனாந்தரங்களுக் கும மலைகளுக்கும் சென்று சிறியவராகக் காணப் பட்டார். செப்படவரைத் தனக்கு சீஷராகத் தெரிந்துகொண்டு, சிறியவராக உலகத்திற்குக் காணப்பட்டார். சீஷர்களுடைய பாதங்களைக் கழுவித் தம்மைத்தாமே சிறியவர் என்று உலகத் திற்குக் காண்பித்தார். நியாயம் விசாரிக்கப்படும் பொழுது, "என் ராஜ்யம் இவ்வுலகத்திற்குரிய தல்ல" என்று கூறி, சிறியவராகக் காணப்பட்டார்.

அன்றியும் சிறியவைகளும், சிறியவர்களும் சாதாரணமாக அசட்டைப் பண்ணப்பட்டு புறக் கணிக்கப்படுவதுபோல, இச் சிறு மன்னாவாகிய கிறிஸ்து சிறியவர் மாத்திரமல்ல, அவர் அசட்டை பண்ணப்பட்டவரும், புறக்கணிக்கப்பட்டவருமா யிருந்தார் என்று ஏசாயா தீர்க்கதரிசி அவர் பிறப் பதற்கு ஏறக்குறைய 700 வருடங்களுக்குமுன் தீர்க்கதரிசனமாகக் கூறினார். தச்சனுடைய குமாரன் என்றும், யோசேப்பு, மரியாளுடைய குமாரன் என்றும் அழைக்கப்பட்டு யூதரால் அசட்டைப்பண்ணப்பட்டார். யூதர்களால் பாவி களின் சிநேகிதன் என்று அழைக்கப்பட்டு, "மற்ற வர்களை இரட்சித்தான்; தன்னைத்தான் ரட்சித்துக் கொள்ளத் திராணியில்லை" என்று கூறப்பட்டு, மற்றவர்களால் அசட்டைப்பண்ணப்பட்டார். பிசாசுகளைப் பன்றிகளுக்குள் துரத்தினபோது, அவ்வூருக்குள் பிரவேசியாதபடி வெளியே துரத்

தப்பட்டுப் புறக்கணிக்கப்பட்டார். யூதரால் கொலைபாதகனுகிய பரபாஸ் ஏற்றுக்கொள்ளப் பட்டு, நீதிபரனுகிய இயேசு புறக்கணிக்கப் பட்டார். ஆம்! இம்மன்னுவாகிய கிறிஸ்து சிறியவரே!

இஸ்ரவேலர் கண்ட இச்சிறு உருட்சியான கொத்தமல்லி அளவான மன்னுவை தானியேல் உருண்டுவருகிற ஒரு கல்லாகக் (கல் சிறியது) காண் கிருர். இக்கல் தானியேல் கண்ட பெரும் சிலையா கிய 5 பெரும் ராஜ்யங்களையும் மோதி அவற்றைப் பறந்துபோகிற பதரைப்போலாக்கி, அவற்றை நிர் மூலம் பண்ணியது. அக்கல்லோவென்ருல் பெரிய பர்வதமாகி பூமியையெல்லாம் நிரப்பிற்று. (தானி. 2:35). கொத்தமல்லி அளவான இம்மன்னுவை தானியேல் கல்லாகக் கண்டான். அக்கல் பூமியை யெல்லாம் நிரப்பும் பெரிய பர்வதமாகிய நம் அருமை இரட்சகராகிய இயேசுவைக் காட்டுகிறது என்னும் அறிவு நமக்கு பரவசத்தை உண்டாக்கு கின்றதன்ருே! அவ்விதமே ஆயிரம்வருட அரசாட் சியில் உலகத்தின் ராஜ்யபாரம் முழுவதும் இரா ஜாதி ராஜாவாகிய இயேசுவின் கையில் இருக்கு மென்பது மாருசத்தியம்! சிறியவர்களை உயர்த்தி மகிமையுள்ள சிங்காசனத்தைச் சுதந்தரிக்கப்பண் ணுவார் (I சாமு. 2:8) என்று வாசிப்பதுபோல, இச்சிறிய, அசட்டைப்பண்ணப்பட்டு, புறக்கணிக் கப்பட்ட மன்னுவாகிய இயேசு எல்லா வானங் களுக்கும் மேலாக உயர்த்தப்பட்டு இராஜாதி இரா ஜாவாகக் காணப்படுகிருர். இச்சிறிய மன்னு

பொற்பாத்திரத்தில் ஆசரிப்புக் கூடாரத்தில் மகா பரிசுத்த ஸ்தலத்தில் வைக்கப்பட்டு கனம் பண்ணப்பட்டதுபோல, இவரும் நித்தியத்தில் மகா பரிசுத்தஸ்தலமாகிய சீயோனில் ராஜாவாக கனம்பண்ணப்பட்டிருக்கிறார். ஆ! என்ன அற்புத சிறிய மன்னு!

இயேசு சிறியவராகக் காணப்பட்டதுபோல நாமும் தாழ்மையுள்ளவர்களாக இருக்கவேண்டியது மிக அவசியம். இதையறிந்த பரி. பவுல் தான் மேன்மைபாராட்டக்கூடிய அல்லது மாம்சத்தின் மேல் நம்பிக்கை வைத்திருக்கக் கூடியவைகளான தன் நிலை, குலம், கல்வி, ஐசுவரியம் முதலிய எல்லாவற்றையும் விட்டு, அவைகளைக் குப்பையாக எண்ணி, தன்னைத்தானே சிறுமையாக்கினுர். அன்றியும் கொரிந்திய சபையாரால் கொஞ்சமாய் அன்புகூரப்பட்டு, மாம்சத்தின்படி நடக்கிறவர் என்ற பேரைப் பெற்றுக்கொண்டு (IIகொரி. 10:2), துடைத்துப் போடப்படுகிற அழுக்கைப் போல மற்றவர்களால் எண்ணப்பட்டு, அசட்டைப்பண்ணப்பட்டிருந்தார். குறிசொல்லுகிற ஆவியை ஒரு ஸ்திரீயிடத்திலிருந்து துரத்தினபடியால், பரி. பவுலும் சீலாவும் அவ்விடத்திலிருந்து தெருவில் இழுத்துச் செல்லப்பட்டு, வஸ்திரங்கள் கிழிக்கப்பட்டு, அநேக அடிகள் அடிக்கப்பட்டு, சிறைச்சாலைக்குக் கொண்டுபோகப்பட்டு, இவ்விதமாகப் புறக்கணிக்கப்பட்டனர்.

மேற்கண்டவாறு, சிறியதும், அசட்டைப்பண்ணப்பட்டதும், புறக்கணிக்கப்பட்டதுமான சிறிய மன்னாவாகிய இயேசுவைப்போல் பரி. பவுல் இருந்தபடியால், அவர் அன்றும், இன்றும், பரிசுத்தவானாகக் கனம்பண்ணப்பட்டிருக்கிறது மாத்திரமல்ல, தேவனால் ராஜாவாகவும் முடி சூட்டப்பட்டார். ஆகவே ராஜாக்களுக்குரிய கிரீடம் தனக்கு வைக்கப்பட்டிருப்பதாக II தீமோ. 4:8-ல் கூறுகிறார். ஆகவே நண்பனே! நீர் வீட்டிலும், வெளியிலும், நாட்டிலும், நகரிலும், வேலை ஸ்தலத்திலும், சிறியவனாக்கப்படவும், அசட்டைப்பண்ணப்படவும், புறக்கணிக்கப்படவும் முகங்கோணாது ஒப்புக்கொடுத்து, இச்சிறு மன்னா முகத்தைக் கற்பாறையாக்கினது போல, உம்மை ஆக்குவீராக. (ஏசா. 50:7). இவ்விதம் நீர் உம்மை சிறியவராக்கும் போது, இயேசுவுக்கும் பரி. பவுலுக்கும் கிடைத்த ராஜ்யபாரம் உமக்கும் உரியதாகும். அல்லேலூயா! அல்லேலூயா!

11. மன்னா உருட்சியானது (Round).

மன்னா உருட்சியாக அல்லது உருண்டையாக இருந்ததாக, 'வனாந்தரத்தின்மீதெங்கும் உருட்சியான ஒரு சிறிய வஸ்து............தரையின்மேல் கிடந்தது'' என்று யாத். 16:14-ல் காண்கிறோம்.

(a) இயேசு சீஷர்களை நோக்கி, "பூமியின் கடைசிபரியந்தமும் எனக்குச் சாட்சிகளாயிருப்பீர்கள்'' (அப். 1:8) என்றார். அன்றியும் இயேசுவைக் குறித்துள்ள சுவிசேஷம், "பூலோகமெங்கு

G.B. Sathyanesan, B.

முள்ள சகல ஜாதிகளுக்கும் சாட்சியாகப் பிரசங்கிக்கப்படும்'' என்று இயேசு மத். 24:14-ல் கூறினார். பூமி உருண்டையாக இருக்கிறது என்று ஏசா. 40:22-ல் வாசிக்கிறோம். இயேசுவைக் குறித்துள்ள சுவிசேஷம் உருண்டையான பூமி முழுவதும் அறிவிக்கப்படவேண்டும் என்று சொன்னதும், இந்த மன்னாவாகிய இயேசு உருண்டையாக இருப்பதும் எவ்வளவு ஆச்சரியம்! நம்முடைய இயேசு முழு உலகத்திற்கும் உரியவராயிருக்கிறார்; வேறு பல மார்க்கங்கள் குறிக்கப்பட்ட சில ராஜ்யங்களுக்குள் கட்டப்பட்டதாய் இருக்கின்றன. ஆனால் இயேசுவின் மார்க்கமோ முழு உலகத்திற்கும் உரியதாக இருந்து, எந்தக் கடையாந்தரத்திலும் அவருடைய நாமம் உச்சரிக்கப்படத்தக்கதான மகிமையான மார்க்கமாயிருக்கிறது. மெகல்லன் A.D. 1522-ல் பூமி உருண்டையாயிருக்கிறது என்று நிரூபித்திருக்காவிட்டால், B.C. 13-ஆம் நூற்றாண்டில் உருண்டையாகக் காணப்பட்ட இம்மன்னாவைக் குறித்த தேவனுடைய மறைவான நித்திய நோக்கத்தை, உலகம் அறிந்திராதே. ஆ! வேத வாக்கியங்கள் எவ்வளவு சத்தியமானவை! தேவனுடைய வழிகள் ஆராய்ந்து அறியப்படக்கூடாதவைகளாயிருந்தாலும் (ரோ. 11:33), அவைகள் எவ்வளவு உத்தமமானவை! (Perfect) சங். 18:30 இம்மன்னாவாகிய கிறிஸ்து உருண்டையாக இருப்பதால் இயேசு சொன்னதுபோல், பூமியின் கடைசிபரியந்தமும் நாம் அவருக்கு சாட்சியாயிருப்போமாக!

பூமியின் கடைசிபரியந்தமும் சாட்சியாக இருக்கவேண்டும் என்று இயேசு சொன்னதை எண்ணி, உலகமுழுவதும் பிரயாணம்பண்ணி சாட்சிசொல்ல எத்தனிப்பாரும் உண்டு. அது தவருக இல்லாதிருந்தாலும், உம்திராணிக்கு மிஞ்சி தேவ நோக்கத்திற்கு மாருக ஆசைக்கு இடம் கொடுக்க வேண்டாம். அப்போஸ்தலஞகிய பவுல் அமெரிக்கா போகவில்லை. அப்போஸ்தலஞகிய பேதுரு ஆப்பிரிக்கா போகவில்லை. யாக்கோபு அப்போஸ்தலன் ஜப்பான் போகவில்லை. ஆயினும் இவர்கள் எல்லாரும் உலகமுழுவதும் சாட்சிகளாயிருக்கிருர்கள். அவ்விதமே நம்முடைய பரிசுத்த ஜீவியத்தையும், தியாக ஜீவியத்தையும் மற்றவர்கள் கவனித்து, அவர்கள் நம்மைக் குறித்து மற்றவர்களுக்கு கொடுக்கும் சாட்சியின் மூலமாக, ஒருவரிடமிருந்து இன்னொருவரிடத்திற்குச் சென்று, உலக முழுவதும் நாம் சாட்சியாகக்கூடும் உதாரணமாக, ஆக்கியோன் ஆந்திராவில் ஊழியம் செய்து கொண்டிருந்த போது, ஒரு ஏழைக் குடும்பத்திற்கு தங்கள் அன்ருடக ஜீவியத்திற்குப் போதிய வருமானம் இல்லாதிருந்தது. அவர்கள் ஒரு எருமையை வாங்கி, அதன்மூலம் ஊதியம்பெற எண்ணி அப்படியே செய்தனர். ஆக்கியோன் அவர்கள் வீட்டிற்கு ஒரு முறை சென்றபோது, அதைக் கண்ணுற்று ஆசீர்வதித்துத் திரும்பினர். சில வாரங்களுக்குப் பின்பு மறுபடியும் அவர் அங்கு போனபோது அந்த எருமையைக் காணவில்லை. ஆகவே அதைக் குறித்து விசாரித்தார். அப்பொழுது அந்த சகோ

தரன், "ஐயா! எருமை, எங்கள் தனி ஜெபம், வேதவாசிப்பு, சபை கூடுதலுக்குப் போதல் முதலியவற்றிற்குத் தடையாக இருந்தது. அதினிமித்தம் எங்கள் ஆவிக்குரிய ஜீவியம் குறைந்து விடுகிறது. ஆகவே அதை விற்றுவிட்டேன்" என்று சந்தோஷமாகக் கூறினுர். இதைச் செவியுற்ற ஆக்கியோன், கர்த்தர் அவர்களுடைய ஆவிக்குரிய ஆசையை நிறைவேற்றவும், பூமிக்குரிய புதிய வாசல்களைத் திறக்கவும் ஊக்கமாக ஜெபித்துத் திரும்பினுர். ஆச்சரியமான பிரகாரமாகவும், எதிர்பாராதவிதமாகவும் திடீரென்று அச்சகோதரனுக்கு வேலை உயர்வு கிடைத்தது. இவ்விதமாகக் கர்த்தர், அவருடைய ஆவிக்குரிய வாஞ்சையைக் கண்டு கனம்பண்ணினுர். இச்செய்தியை ஆக்கியோன் போகுமிடமெல்லாம் கூறுவது வழக்கம். ஆந்திராவிலுள்ள அந்த சகோதரன் ஆக்கியோன் போன தேசங்களெல்லாம் சாட்சியாக இருக்கிருர். இச்சாட்சியை ஆக்கியோன் மூலம் கேட்டவர்கள் நிச்சயமாகவே பல இடங்களிலும் கூறியிருப்பார்கள். இதை வாசிக்கும் நீங்கள் ஒரு சிலருக்காயினும் சொல்வீர்கள் என்பது திண்ணம். இவ்விதமாக ஆந்திராவிலுள்ள இந்த ஏழை சகோதரன் முழு உலகத்திற்கும் சாட்சியாகிக் கொண்டு இருக்கிருர். அன்றியும் உம் அனுபவங்களைக் கைப்பிரதிகளாக அச்சடித்து மற்றவர்களுக்கு விநியோகிப்பீரேயாயின், அதுவும் உலக முழுவதும் சாட்சியாகப் போய்ச்சேரும். அவ்விதமாகவே, உலகத்திலுள்ள பல பரிசுத்தவான்கள் தமிழ் நாட்டிற்கு வந்திராவிட்டாலும், அவர்கள் சாட்சிகளை நாம்

வாசித்தும், கேட்டும் இருக்கிறோமல்லவா? இவ்வண்ணம் அவர்கள் உலகமுழுவதும் சாட்சியாக இருக்கிறார்கள். அவ்விதமாக உம் ஜீவியமும் நற்கந்தமாக இருக்குமாயின், இந்த நற்கந்தம் உலகமுழுவதும் சென்று, உருண்டையாக இருக்கும் மன்னாவாகிய கிறிஸ்துவின் மூலம் உமக்கு இப்பரம ஜீவியம் கிடைத்தது என்று உருண்டையான இவ்வுலகத்திற்கு அறிவிக்கலாம்.

(b) மன்னா உருண்டையாக இருப்பது மற்றொரு ஆவிக்குரிய காரியத்தையும் காட்டுகிறது. உருண்டை குறிப்பான ஒரு பக்கம் இல்லாமல் பூரணமாக இருக்கிறது. இது கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் பூரணத்தைக் காட்டுகிறது. பிதாவும் குமாரனும் ஒன்றாக இருக்கிறார்கள். பிதா பூரணராயிருப்பதை மத். 5:48ல் இயேசு, "பிதா பூரண சற்குணராயிருக்கிறது போல" என்று கூறுவதிலிருந்து அறிகிறோம். அந்த பூரணம் இயேசுவுக்குரியது. ஏனெனில் பிதாவும் குமாரனும் ஒன்றாக இருக்கிறார்கள். இதை நிரூபிக்க இயேசு, "என்னைக் கண்டவன் பிதாவைக்கண்டான்;......நான் பிதாவிலும், பிதா என்னிலும் இருக்கிறதை நீ விசுவாசிக்கிறதில்லையா?" (யோவா. 14 9. 10) என்கிறார். மேலும் பரி. பவுல், "தேவத்துவத்தின் பரிபூரணமெல்லாம் சரீரப்பிரகாரமாக அவருக்குள் வாசமாயிருக்கிறது" (கொலோ. 2:9) என்கிறார். இயேசுவின் ஜீவியத்தை முழுவதும் ஆராயும் போது அவர் எல்லாவிதத்திலும் பிதாவுடையபூரணத்தை உடையவராக இருந்தார் எனக் காண்கிறோம். அவர் பூரணமாக

இருந்தது மாத்திரமல்ல, நாமும் அவருடைய பூரணத்தை அடைய வேண்டுமென்று விரும்பி, மேற்கண்ட வசனத்தின் பின்பகுதியில், "நீங்களும் பூரண சற்குணராயிருக்கக் கடவீர்கள்" என்கிறார்.

ஒரு காரியத்தைச் செய்ய நமக்கு ஒரு மாதிரி அவசியம். ஆகையால் இயேசு நாம் பூரணத்தை அடையும்பொருட்டாக, "பிதா பூரண சற்குண ராயிருக்கிறதுபோல" என்று பிதாவின் பூரணத்தை மாதிரியாகக் கூறுகிறார். இங்கு 'போல' என்கிற வார்த்தையினிமித்தம், நாம் பிதாவைக் கவனித்து அவரைப் போல பூரணப்பட வேண்டும் என்பது வெள்ளிடை மலை. இது இயேசுவுடைய விருப்பமாயிருந்தது மாத்திரமல்ல, பரிசுத்த ஆவியானவருடைய விருப்பமாகவும் இருந்தபடியால், எபி. 6:2ல் "பூரணராகும்படி கடந்து போவோமாக" என்றும் கூறுகிறார். அன்றியும் சபையைப் பூரணப்படுத்தும் நோக்கத்துடன், கிறிஸ்துவினுடைய நிறைவான வளர்ச்சியின் அளவுக்குத்தக்க பூரண புருஷராகும் வரைக்கும் பரிசுத்தவான்கள் சீர்பொருந்தும் பொருட்டு (Perfect), அவர் சிலரை அப்போஸ்தலர்களாகவும் (governing = ஆளுகை), சிலரைத் தீர்க்கதரிசிகளாகவும் (guiding = வழிநடத்துதல்), சிலரைச் சுவிசேஷகராகவும் (gathering = கூட்டிச் சேர்த்தல்), சிலரை மேய்ப்பராகவும் (guarding = பாதுகாத்தல்), போதகராகவும் (grounding = ஸ்திரப்படுத்துதல்) ஏற்படுத்தினார். (எபே. 4:11-13) இதிலிருந்து

இவர்களுடைய ஆளுகை, வழிநடத்துதல், கூட்டிச் சேர்த்தல், பாதுகாப்பு, ஸ்திரப்படுத்துதல் முதலியவற்றால் சபை பூரணப்படுகின்றதென்று நாம் தெளிவாகக் காண்கிறோம் ஆகவே இவ்வித ஐந்து உத்தியோகஸ்தர்களும் இல்லாமல் தனித்தனியே கட்டப்படும் சபைகள் பூரணத்தை அடையமுடியாது என்பது நிச்சயமே! ஒரு பயிர் பூரண பலனைக் கொடுக்கத் தோட்டக்காரன், தண்ணீர், எரு, காற்று, வெயில் முதலியன தேவையாயிருப்பதுபோல, சபையின் பூரணத்திற்கு மேற்கூறிய ஐந்துவித உத்தியோகஸ்தர்களும் சபையில் தேவை. இவ்வித ஐந்துவித ஊழியங்களும் உள்ள சபையில் நீர் ஐக்கியமாயிருந்தால் மாத்திரமே பூரணத்தை அடையமுடியும் என்பது ஞாபகமிருக்கட்டும்.

(i) பூரண சற்குணரான பிதாவின் தன்மையை மத். 5:48-ல காண்கிறோம். அங்கே, "பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதா" என்று வாசிக்கிறோம்.

கர்த்தர், "கிறிஸ்து இயேசுவுக்குள் நம்மை அவரோடே கூட எழுப்பி, உன்னதங்களிலே அவரோடே கூட உட்காரவும் செய்தார்" (எபே. 2:7). எனவே நாம் ஆவிக்குரிய ஜீவியத்தில் குறிப்பிட்ட சில அனுபவங்களைப் பெறும்போது, மேற்கூறிய வசனத்தின்படி உன்னதங்களில் (பரலோகத்தில்) அவரோடே கூட இருக்கிறோம். நாம் உன்னதங்களில் இருப்போமாயின் பிதாவின் பூரணத்தைப்

பெற்றுக்கொள்வோம் என்பதை அறிந்த பிசாசு பலவித இச்சைகளால் நம்மைக் கீழே தள்ளப் பிரயாசப்படுகிருன். அப்படிச் செய்துகொண்டும் இருக்கிருன் என்று வெளி. 12:4-ல் காண்கிருேம். உன்னதத்திலிருந்த தேமா இப்பிரபஞ்சத்தின்மேல் ஆசை வைத்து, பரிசுத்தவான்களின் ஐக்கியத்தை விட்டுவிட்டான் (II தீமோ. 4:10). இவ்விதமாக இக்காலத்திலும் விசுவாசத்திலும், விசுவாச ஊழியத்திலும் நிலேத்திருந்த உன்னதங்களிலிருந்த பலர் மண்ணுசை, பொன்னுசை, பெண்ணுசை முதலியவைகளால் இழுக்கப்பட்டுக் கொண்டிருக் கின்றனர். அவர்களில் சிலர் கீழே விழுந்து பரிதாப நிலேயில் இருப்பதை நாம் காண்கிருேம். ஆகவே இப்பெரும் நஷ்டம் அடையாதிருக்க, கொலோ. 3:1,2ல் கூறப்பட்டிருப்பதுபோல, மேலானவைகளேயே தேடவும், நாடவும் செய்வோமாக. பிலி. 4:8-ல் கூறியிருப்பதுபோல, "உண்மையுள்ளவைகளெவைகளோ, ஒழுக்கமுள்ளவைகளெவைகளோ, நீதியுள்ளவைகளெவைகளோ, கற்புள்ளவைகளெவைகளோ, அன்புள்ளவைகளெவைகளோ, நற்கீர்த்தியுள்ளவைகளெவைகளோ, புண்ணியம் எதுவோ, புகழ் எதுவோ" அவைகளேயே சிந்தித்துக்கொண்டிருப்போமாக. அப்படிப் பழகும்போது தேவன் நம்மை உட்காரவைத்த உன்னதத்திலேயே இருந்துகொண்டு, "நம்முடைய குடியிருப்போ பரலோகத்திலிருக்கிறது" (பிலி. 3:20) என்று தைரியமாகக் கூறலாம். அப்பொழுது நாமும் பிதாவைப்போல, பரலோகத்திலிருக்கிறவர்களாயிருக்கலாம்.

(ii) பூரண சற்குணரான பிதாவின் மற்றொரு தன்மையை மத். 5:45-ல் காண்கிறோம். அங்கே "அவர் தீயோர்மேலும் நல்லோர்மேலும் தமது சூரியனை உதிக்கப்பண்ணி, நீதியுள்ளவர்கள்மேலும் அநீதியுள்ளவர்கள்மேலும் மழையைப் பெய்யப் பண்ணுகிறார்" என்று வாசிக்கிறோம்.

அவர் பிதாவாக இருந்து தம் பூரண அன்பை வெளிப்படுத்துகிறார். நாமும் அவர் பிள்ளைகளாக இப்பூரணத்தைப் பெற்றுக்கொள்ளும் பொருட்டாக, 44 ஆம் வசனத்தில், "உங்கள் சத்துருக்களைச் சிநேகியுங்கள்; உங்களைச் சபிக்கிறவர்களை ஆசீர்வதியுங்கள்; உங்களைப் பகைக்கிறவர்களுக்கு நன்மை செய்யுங்கள்; உங்களை நிந்திக்கிறவர்களுக்காகவும் உங்களைத் துன்பப்படுத்துகிறவர்களுக்காகவும் ஜெபம் பண்ணுங்கள்" என்று கூறி, அதன் பின் அடுத்த வசனததில், "இப்படிச் செய்வதினால் நீங்கள் பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதாவுக்குப் புத்திரராயிருப்பீர்கள்" என்கிறார். ஆகவே அவருடைய பூரணத்தைப் பெற்றுக்கொள்வதன் வேறொரு அம்சம் சத்துருக்களை நேசிப்பது ஆகும். சில கர்த்தருடைய பிள்ளைகள் சத்துருக்களை நேசிக்கக்கூடாதவர்களாக, பாலாக்கைப் போல சத்துருக்களை சபிக்கவும் வேண்டாம், ஆசீர்வதிக்கவும் வேண்டாம் (எண். 23:25) என்று நடுநிலையைக் காத்துக்கொண்டு ஜீவிக்கின்றனர். அவ்விதம் ஜீவிக்கிறவர்கள் பூரணத்தை வாஞ்சிக்கிறவர்கள் அல்ல.

இயேசுவைப் பிடிக்க வந்த கூட்டத்தாரில் ஒருவனுடைய காது வெட்டப்பட்டது. ஆனால் இயேசு அவன் காதைத் தொட்டு சொஸ்தப்படுத்தி தம் பூரண அன்பை வெளிப்படுத்துகிறார். அன்றியும் இயேசு சிலுவையிலறையப்பட்டபோது, அவரை நிந்தித்துத் துன்பப்படுத்தினவர்களுக்காக "பிதாவே, இவர்களுக்கு மன்னியும்" என்று ஜெபித்து ஆசீர்வதித்தார். ஸ்தேவானும் சத்துருக்களால் சூழப்பட்டு கல்லெறியப்படும்போது இயேசு செய்ததுபோலவே, "ஆண்டவரே, இவர்கள்மேல் இந்தப்பாவத்தைச் சுமத்தாதிரும்" (அப். 7:60) என்று ஜெபித்து, சத்துருக்களை நேசிக்கக்கூடும் என்பதை நிரூபிக்கிறார். அப்படியே இம் மன்னாவாகிய இயேசுவைப்போல் பூரணப்படுகிறவர்கள், தங்களுக்கு தீமை செய்தவர்களுக்கு நன்மை செய்தும், அவர்கள் பாவத்தின் தண்டனை அவர்கள்மேல் வராதபடி அவர்களுக்காக ஜெபித்தும் பழகுகின்றனர். சிறியதாக ஆரம்பிக்கும் இப்பழக்கம், கொஞ்சம் கொஞ்சமாக வளர்ந்து, அப்பூரணத்தை அடையச் செய்யும். கிருபையும் நியாயப்பிரமாணமும் கிடைக்கும் காலத்தின் முன்னதாகவே ஜீவித்த யோசேப்பு தனக்கு தீமை செய்த தன் சகோதரர்களை நேசித்து அவர்களுக்கு ஆகாரம் கொடுத்தது மாத்திரமல்ல, அவர்களும் அவர்கள் ஆடுமாடுகளும் பஞ்சகாலத்தில் செழிப்பாக ஜீவிக்கத்தக்க ஒழுங்குகளையும் செய்தான். எகிப்தியருக்கு மேய்ப்பர்கள் அருவருப்பானவர்கள். (ஆதி. 46:34) யோசேப்பு எகிப்தில் மிகுந்த

கனமுள்ளவனுயிருந்தபோதிலும், சத்துருக்களாகிய தன் சகோதரர்களை நேசித்து கனப்படுத்தும்போது இவனும் மேய்ப்பர்களைச் சகோதரர் என்று அறிவித்து. அந்த நிந்தையையும் தானுகவே தன் தலையின்மேல் வருவித்துக் கொண்டான்.

அன்றியும், சீரியா இராஜா இஸ்ரவேலருக்கு விரோதமாகப் பன்முறை யுத்தத்திற்கு வந்து கொண்டிருக்குங்கால், ஒரு தடவை எலிசாவின் உதவியால், சீரிய இராணுவம் இஸ்ரவேலின் இராஜாவாகிய யோராமிடத்தில் கொண்டுவரப்பட்டது. சீரியர் சத்துருக்களாக இருந்தபடியால் இஸ்ரவேலின் இராஜா எலிசாவிடம், "என் தகப்பனே, நான் அவர்களை வெட்டிப் போடலாமா?" (II இரா. 6:21) என்று கேட்டான். எலிசா அதைத் தடைபண்ணி அவர்களுக்கு அப்பமும், தண்ணீரும் கொடுக்கச் சொன்னுர். இராஜா அச் சத்துருக்களுக்கு எலிசாவின் வார்த்தையின்படி அப்பமும், தண்ணீரும் மாத்திரமல்ல, அவர்களுக்குப் பெரிய விருந்துப்பண்ணி, அவர்களைச் சுகமாக அனுப்பிவிட்டான் (II இராஜா 6:22, 23).

கிருபையின் காலத்திற்கு முன்னமே ஜீவித்து வந்த யோசேப்பும் எலிசா தீர்க்கதரிசியும், யோராம் இராஜாவும் இவ்விதம் சத்துருக்களை நேசித்திருக்க, கிருபையையும், பரிசுத்தாவியையும் பெற்றுக் கொண்டு, இயேசுவின் பரிந்து பேசுதலையும் அனுபவிக்கும் நாம் எவ்வளவுக்கதிகமாக சத்துருக்களை நேசிக்கவேண்டும் என்றும், நேசிக்கக்கூடும் என்றும் ஆராய்ந்து அப்படியே செய்வோமாக.

(iii) பூரண சற்குணரான பிதாவின் மற்ருெரு தன்மையை மத். 6:14-ல் காண்கிறோம். அங்கே, "மனுஷருடைய தப்பிதங்களை நீங்கள் அவர்களுக்கு மன்னித்தால், உங்கள் பரம பிதா உங்களுக்கும் மன்னிப்பார்" என்று வாசிக்கிறோம்.

தேவனுடைய பிள்ளைகளாகிய நம்முடைய தப்பிதங்களை தேவன் நமக்கு மன்னிக்க வேண்டுமானின் நாம் ஒருவருக்கொருவர் தப்பிதங்களை மன்னிக்க வேண்டியது அவசியமாய் இருக்கிறது. இதை நிரூபிக்கவே மறுபடியும் இயேசு, மாற். 11:25,26-ல் "ஒருவன்பேரில் உங்களுக்கு யாதொரு குறை உண்டாயிருக்குமானால், பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதா உங்கள் தப்பிதங்களை உங்களுக்கு மன்னிக்கும்படி, அந்தக் குறையை அவனுக்கு மன்னியுங்கள். நீங்கள் மன்னியாதிருப்பீர்களானால், பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதாவும் உங்கள் தப்பிதங்களை மன்னியாதிருப்பார்" என்றார்.

பரம பிதா நம் தப்பிதங்களை மன்னிப்பது மாத்திரமல்ல, மன்னித்த பாவங்களை "இனி நினையாமலிருப்பேன்" என்றும் எபி. 8:12-ல் சொல்கிறார். நாமும் அவருடைய பிள்ளைகளாக இப்பூரணத்தைப் பெற்றுக்கொள்ளும் பொருட்டாக, ஆவியானவர் கொலோ. 3:13-ல், "கிறிஸ்து உங்களுக்கு மன்னித்ததுபோல, ஒருவருக்கொருவர் மன்னியுங்கள்" என்று பரிசுத்த பவுலின் மூலமாகக் கூறுகிறார். அதாவது கிறிஸ்து நம் பாவங்களை மன்னித்து, அவைகளை நினையாமலிருப்பதுபோல,

நாமும் சகோதரர்களுடைய தப்பிதங்களை மன்னித்துப் பின அவற்றை நினையாமலுமிருக்க வேண்டும்.

இதை பரி· பவுல் உபதேசமாக சபைக்கு எழுதினது மாத்திரமல்ல, கொரிந்திய சபையார் அவருக்குச் செய்தவைகளை அவர் மன்னித்துமிருக்கிறார். அவர் ஆவியின் பிரமாணத்தினால் பாவ பிரமாணத்தினின்று விடுதலை பெற்றிருந்தவர் (ரோமர் 8:2). கிறிஸ்துவினுடைய அச்சடையாளங்களைத் தன் சரீரத்திலே தரித்துக்கொண்டிருந்தவர் (கலா. 6:17). "என்னிடத்தில் நான் யாதொரு குற்றத்தையும் அறியேன்" (I கொரி. 4:4) என்று மிகுந்த தைரியமாக சாட்சி பகர்ந்தவர். இப்படிப்பட்ட மேன்மையான பரிசுத்தவானை, மாம்சத்தின்படி நடக்கிறவர் என்று எண்ணுகிற சிலர் கொரிந்திய சபையில் இருந்தனர் (II கொரி. 10:2). ஆனால், "கிறிஸ்து உங்களுக்கு மன்னித்தது போல ஒருவருக்கொருவர் மன்னியுங்கள்". என்று சபைக்கு புத்திமதி சொன்ன அவர், தான் அப்படியே செய்யும் அனுபவத்தைப் பெற்றிருப்பதை, "எதை நான் மன்னித்திருக்கிறேனோ, அதை உங்கள் நிமித்தம் கிறிஸ்துவினுடைய சந்நிதானத்திலே மன்னித்திருக்கிறேன்" என்று கொரிந்தியருக்கு எழுதி நிரூபிக்கிறார் (II கொரி' 2:10).

இவ்விதம் மற்றவர்களுடைய தப்பிதங்களை மன்னித்து மறக்கும் சுபாவத்தைப் பெற்றுக்கொள்ளும்போது, பிதாவின் பூரண சற்குணத்தைப்

பெற்றுக்கொள்கிறோம். பிதாவிற்கு இத்தன்மை இருப்பதால் அவர் மகிமை உள்ளவராக இருக்கிறார். அப்படியே மனுஷனும் இச்சுபாவத்தின் மூலம் மகிமையைப் பெற்றுக்கொளகிறான் என்று நீதி. 19:11-ன் மூலம் அறிகிறோம்.

ஆனால், ஒருவன் சகோதரனுக்கு மன்னியாமல் அவன்மேல் பழிவாங்க எண்ணுவானேயாயின், அவனுக்கு முன்பு மன்னிக்கப்பட்ட பாவங்களையும் தேவன் மறுபடியும் கணக்கிலிட்டு, அதற்கேற்றத் தண்டனையைக் கொடுப்பார் என்று மத். 18:23, 35-ல் கூறி நிரூபித்திருக்கிறார். ஆகவே மற்றவர்களுடைய தப்பிதங்களை மன்னிக்கத் தாமதியாது, மன்னித்து மறந்து பிதாவின் பூரணத்தைப் பெற்றுக்கொள்வோமாக.

(iv) பூரண சற்குணரான பிதாவின் மற்றொரு தன்மையை மத். 6:26, 30, 32-ல் காண்கிறோம். அங்கே, "பரமபிதா பிழைப்பூட்டுகிறார்" (போஷிப்பிக்கிறார் – Feedeth) என்றும், உடுத்துவிக்கிறார் என்றும், இவைகளெல்லாம் "உங்களுக்கு வேண்டியவைகள் என்று உங்கள் பரமபிதா அறிந்திருக்கிறார்" என்றும் வாசிக்கிறோம்.

மேற்கூறியபடி தேவன் நம்மை ஆச்சரியமாக நடத்திவருகிறதை நாம் அறிவோம். சிலர் சில தடவைகளில் இவைகள் தங்களுக்கு சரிவர நடக்கவில்லையென்று தேவனுக்கு விரோதமாக முறுமுறுக்கின்றனர். ஆனால் அது தேவனுடைய பிழை அல்ல. தாங்கள் ஆவியானவரின் சத்தத்

யைக் கேட்டு, தேவ சித்தத்தின்படி போஜனம், வஸ்திரம் முதலிய காரியங்களில் நடந்து கொள்ளாதபடியால் கஷ்டங்களுக்குள் அகப்படுகின்றனர். நன்றாக இருக்கும் காலங்களில் பெருந்தீனி, தகுதிக்கு மிஞ்சின வஸ்திரம் ஆகிய இவ்விதமான உலக காரியங்களுக்கு பணத்தை செலவு செய்துவிட்டுப் பின்னர் கஷ்டப்படுகின்றனர். மேலும் இவ்விதமான கஷ்டங்களுக்கு வேறொரு காரணம், கர்த்தருடைய ஊழியத்தையும், கர்த்தரின் வீட்டையுங் குறித்துக் கவலையற்றிருந்து, கர்த்தருக்குச் செலுத்த வேண்டியனவற்றைச் செலுத்தாமலிருப்பது ஆகும் என்று ஆகாய் 1:6-9ல் கர்த்தர் சொல்லுகிறார்.

மேற்கூறியபடி ஜீவியாது தேவ ஒழுங்கின்படி நீதியாக ஜீவித்தால், நாம் குறைவில்லாமல் ஜீவிக்கலாம் என்பது நிச்சயம் (சங். 37:25; 34:10). இதைப் பல பரிசுத்தவான்களின் ஜீவியங்களின் மூலமாகவும், முன்பு நாம் பார்த்த வாக்குத்தத்தங்களிலும் கண்டோம் அல்லவா? அவைகளை நிரூபிக்க, தனக்கு மாத்திரம் கொஞ்சமாக வைத்திருந்தும் எலியாவைப் போஷித்த விதவையின் "பானையிலே மாசெலவழிந்து போகவும் இல்லை; கலசத்தின் எண்ணெய் குறைந்துபோகவும் இல்லை" (I இரா. 17:16) என்று காண்கிறோம். அப்படியே எலிசாவிற்கு மெத்தையின்மேல் அறைவீட்டை ஆயத்தம்பண்ணி, அவரைப் பராமரித்த ஸ்திரீ, தேசத்தில் வந்த பஞ்சத்தில் அகப்படவில்லை. பஞ்சம் வருவதற்கு முன்னமே எலிசா அவளை

நோக்கி, "நீ உன் வீட்டாரோடுங்கூட எழுந்து புறப்பட்டுப்போய் எங்கேயாகிலும் சஞ்சரி; கர்த்தர் பஞ்சத்தை வருவிப்பார்" (II இராஜா. 8:1) என்று சொன்னார். இதற்குக் கீழ்ப்படிந்து அவள் புறதேசம் சென்று, திருப்தியாகப் புசித்து வாழ்ந்தாள். அத்துடன் திரும்பிவந்தபின் தான் இழந்துபோன யாவற்றையும் மறுபடியும் பெற்றுக்கொண்டாள். இவ்விமாக நம் பரமபிதா நம்மைப் பிழைப்பூட்டுகிறது மாத்திரமல்ல, பிழைப்பூட்ட அறிந்துமிருக்கிறார். அவர் அறிந்திருக்கிறபடியாலேயே அந்த ஸ்திரீயைப் பஞ்சகாலத்திற்குமுன் தீர்க்கதரிசியின் மூலமாக அந்நிய நாடு போகச்சொன்னார். அப்படியே நாமும் ஆவியானவர் மூலமாகவும், கர்த்தருடைய தாசர்கள் மூலமாகவும், கர்த்தர் நம்மோடு பேசுவதைக் கேட்டு அதன்படி ஜீவித்தால், "ஒரு நன்மையுங் குறைவுபடாது" ஜீவிக்கக் கர்த்தர் உதவி செய்வார்.

பிதாவின் பூரணத்தைப் பெற்றுக்கொள்ள நாமும் மற்றவர்களுடைய கஷ்டங்களை அறிந்து, அவர்களைப் போஷிப்பித்து, உடுப்பிக்க வேண்டும். பழைய ஏற்பாட்டின் காலத்திலிருந்த யோபு, மற்றவர்களுடைய அவசியங்களை அறிந்து அவர்களைப் பிழைப்பூட்டினார் என்பதை தன் வாய்மொழியினால் பின்வருமாறு கூறுகிறார்: "எளியவர்கள் வாஞ்சித்ததை நான் கொடாதிருந்து, விதவையின் கண்களைப் பூத்துப்போகப்பண்ணி, தாய்தகப்பனில்லாத பிள்ளை என் ஆகாரத்தில்

சாப்பிடாமல், நான் ஒருவனுக்குச் சாப்பிட்ட துண்டோ? என் சிறுவயதுமுதல் அவன் தகப்பனிடத்தில் வளர்வதுபோல என்னோடே வளர்ந்தான்; நான் என் தாயின் கர்ப்பத்திலே பிறந்தது முதல் அப்படிப்பட்டவர்களை கைலாகு கொடுத்து நடத்தினேன். ஒருவன் உடுப்பில்லாததினால் மடிந்துபோகிறதையும், ஏழைக்கு மூட வஸ்திரமில்லாதிருக்கிறதையும் நான் கண்டபோது, அவன் என் ஆட்டுமயிர்க் கம்பளியினாலே அனல் கொண்டதினால், அவன் இடை என்னைப் புகழாதிருந்ததும்" இல்லை (யோபு 34:16-20). ஆ! எவ்வளவு உத்தமசாட்சி! அவருக்கு அவ்விதம் செய்யக்கூடுமாயின், நாமும் அவ்விதம் ஜீவிக்க ஆசித்து கர்த்தரிடத்தில் கேட்போமாயின், அக்கிருபை எவ்வளவு நிச்சயமாய் நமக்குக் கிடைக்கும்! இதையறிந்த ஆவியானவர் நாம் அப்படி ஜீவிக்க வேண்டும் என்று விரும்பி, "அந்நியரை உபசரிக்க மறவாதிருங்கள்" (எபி. 13:2); "யாவருக்கும், விசேஷமாக விசுவாச குடும்பத்தார்களுக்கும், நன்மை செய்யக்கடவோம்" (கலா. 6:10), "பரிசுத்தவான்களுடைய குறைவில் அவர்களுக்கு உதவி செய்யுங்கள்" (ரோ. 12:13) என்பன போன்ற இவ்விதமான பிரமாணங்களை நமக்குத்தந்திருக்கிறார். அப்படியே செய்வோமாயின், அவருடைய பூரணத்தைப் பெற்று மன்னாவைப் போல உருண்டையாக இருக்கலாம்.

இவ்விதமான பூரணத்தைப் பெற்றுக் கொள்வது மாத்திரமல்ல, தேவன் நீதிபரராயிருக்

கிறபடியால், இவ்விதமான செய்கைகளை மறவாமலிருந்து அதற்கேற்ற பலனை நித்தியத்தில் தருவாரென்பதும் திண்ணமே. (எபி. 6:10) ஒரு கலசம் தண்ணீர் கொடுக்கிறவனுக்கும் அதன் பலன் உண்டே! (மத். 10:42).

12. மன்னு வெண்மையாக இருந்தது.

மன்னு வெண்மையாக இருந்ததாக, "இஸ்ரவேல் வம்சத்தார் அதற்கு மன்னு என்று பேரிட்டார்கள்; அது............வெண்மை நிறமாயும் இருந்தது" என்று யாத். 16:31 ல் காண்கிறோம்.

வெண்மை பரிசுத்தத்தைக் காட்டுகிறது என்று நாம் எல்லோரும் அறிவோமே. நம்முடைய இயேசு பரிசுத்தராயிருந்தார் என்பது நாம் கூருமலேயே உலகம் முழுவதும் அறிந்திருக்கிற ஒரு சத்தியம்! அவரை நியாயம் விசாரித்த பிலாத்து கூட, "நான் அவரிடத்தில் ஒரு குற்றமும் காணேன்" என்று சாட்சி பகர்ந்தான். பிலாத்துவின் மனைவி, அவர் நீதிமான் என்று சாட்சி கொடுத்தாள். அவரைக் காட்டிக் கொடுத்த யூதாஸ், "குற்றமில்லாத இரத்தத்தை நான் காட்டிக்கொடுத்ததினால் பாவஞ் செய்தேன்" என்றான். இயேசு தாமே, "என்னிடத்தில் பாவம் உண்டென்று உங்களில் யார் என்னைக் குற்றப்படுத்தக்கூடும்?" (யோவா. 8:46) என்று தன் முன்பு நின்ற மாபெரும் கூட்டத்திடம் அறைகூவியபோது, அக்கூட்டத்திலிருந்த ஒருவராலும் அவர் பாவத்தைச் சுட்டிக்காட்ட முடியவில்லை.

தாவீது, "உம்முடைய பரிசுத்தவானை அழிவைக் காணவொட்டீர்" (சங். 16:10) என்று சொல்லி, இயேசு பரிசுத்தர் என்று உலகத்திற்குக் காட்டுகிறார். இவ்விதமாக எல்லா மனுஷராலும் பரிசுத்தர் என்று இயேசு நிரூபிக்கப்பட்டார்.

இம்மன்னாவைக் குறித்து, பரிசுத்த பவுல் "அவர் பாவம் அறியாதவர்" (II கொரி. 5:21) என்றும், பரிசுத்த பேதுரு "அவர் பாவஞ் செய்ய வில்லை" (I பேது. 2:22) என்றும் கூறுகின்றனர். பரிசுத்த பவுலும், பரிசுத்த யோவானும், அவரிடத்தில் பாவம் இல்லை (எபி. 4:15; I யோவா. 3:5) என்று சொல்கிறார்கள். இவ்விதமாக இவர் சிந்தை, இருதயம் முதலியவற்றால் ஆவியில் பாவம் அறியாதவராகவும், சரீரத்தின் அவயவங்களினால் பாவஞ் செய்யாதவராகவும், இவைகளிமித்தம் ஆத்துமாவில் உண்டாகும் பாவம் இல்லாதவராகவும், ஆவி, சரீரம், ஆத்துமாவில் பரிசுத்தராயிருந்தார் என்று நிரூபிக்கின்றனர்.

பாவம் அறியாதவராக இருந்தார் என்று சொல்லும் போது, பொய், களவு, விபசாரம் என்று சொன்னால், அவருக்கு என்ன என்றே தெரியாதோ என்று கேட்கக்கூடும். அறிவு என்பது இருவகைப்படும். முதலாவதாக ஒரு விஷயத்தைக் குறித்துள்ள பொதுவான அறிவும், இரண்டாவதாக அதே விஷயத்தைக் குறித்துள்ள நுட்ப அனுபவ அறிவும் உண்டு. கல்வியற்ற ஒருவன் ஒரு விஞ்ஞான புத்தகத்தைப் பார்த்து அது புத்தகம்

என்பான். ஆனால் அதினுள் இருக்கும் பொருளடக்கங்களைக் குறித்து ஒன்றும் அறியான். அப்புத்தகத்தைக் குறித்து அவனுக்கு நுட்ப அறிவு இல்லை. ஆகையால் அப்புத்தகத்தைக் குறித்து அவனுக்கு அறிவு இல்லை என்கிறோம். ஆனால் அப்புத்தகத்திலுள்ளவைகளைப் படித்து பரிசோதனைகள் (experiments) செய்து, அதன் மூலம் கற்கும் ஒருவன் அதன் பொருளடக்கத்தை அறிந்திருக்கிறபடியால், அப்புத்தகத்தைக் குறித்து அவனுக்கு அறிவு இருக்கிறது. இவ்விதமாக இயேசுவிற்கு பாவத்தைக் குறித்துள்ள பயிற்சி அறிவு இருக்கவில்லை. சிலர் பாவத்தைக் குறித்து அறிய, அதை ஆய்ந்து தேடி அவைகளை நிறைவேற்றப் பிரயத்தனம் பண்ணுகின்றனர். ஆகவே சங்கீதக்காரன், "அவர்கள் நியாயக்கேடுகளை ஆய்ந்துதேடி, தந்திரமான யோசனை நிறைவேறும்படி பிரயத்தனம்பண்ணுகிறார்கள்" (சங். 64 6) என்கிறார். அன்றியும் இததுடன் நிறுத்தாது, சிலர் பாவங்களை நிறைவேற்றத் தாங்களே பயிற்சி செய்தும், மற்றவர்களைப் பயிற்சிக்கவும் செய்கின்றனர். இதையறிந்த எரேமியா "பொய்யைப்பேசத் தங்கள் நாவைப் பழக்குகிறார்கள்" (எரே. 9:5) என்று கூறுகிறார். இவ்விதம் செய்பவர்களுக்கு பாவத்தைக் குறித்துள்ள அறிவு உண்டாகிறது. இக்காலத்தில் சாதாரணமாக மனுஷர் இவ்வித பாவங்களைக் குறித்துப் பேசி, ஆராய்ந்து படித்துப் பழகுகின்றனர் பெரியோர் சினிமாக்களுக்குச் சென்றும், பிள்ளைகளை சினிமாக்களுக்கு அனுப்பியும், பாவத்தின் அறிவைப் பெற்று, பின்பு அனுபவத்தில் பாவத்

தைச் செய்கின்றனர். வாலிபர் அருவருப்பான காரியங்களைப் பேசிப் பழகி, ஒரு சிலர் சிறு வயதிலேயே கொடும் பாவிகளாகின்றனர். ஆனால் பரிசுத்தவான்களுடைய மத்தியில் இவ்வித பாவங்களைக் குறித்துள்ள அனுபவ அறிவு இல்லாமல் இருக்கும் பொருட்டு பரிசுத்த பவுல். "பரிசுத்தவான்களுக்கு ஏற்றபடி, வேசித்தனமும், மற்றெந்த அசுத்தமும். பொருளாசையும் ஆகிய இவைகளின் பேர் முதலாய் உங்களுக்குள்ளே சொல்லப்படவுங் கூடாது" (எபே. 5:3) என்று கட்டளையிடுகிறார். இவ்விதம் பாவத்தைக் குறித்து பேசாமலும் இருக்கும் ஜீவியத்தின் மூலமாகவே ஆவி, ஆத்துமா, சரீரம் பரிசுத்தமாக்கப்பட முடியும். ஆகையால் தான இயேசு பாவம் அறியவில்லை என்று கூறப்பட்டிருக்கிறது.

தனக்குத் தீமை செய்கிற மனுஷனை அல்லது தன்னைக் கனம் பண்ணாத ஒருவனைக் கோபிக்கவோ சபிக்கவோ ஆவி சிந்தையின் மூலமாக சரீரத்தைத் தூண்டுகிறது. இத்தூண்டுதலுக்கு சரீரம் இசையும்போது. அவன் கோபித்து அல்லது சபித்து அல்லது கிரியை செய்து பாவம் செய்கிறான். இவ்விதமாக பரிசுத்தமடையாத ஆவிக்குப் பரிசுத்தமடையாத சரீரம் கீழ்ப்படிந்து ஆத்துமாவில் பாவம் உள்ளவனாகிறான். இதையறிந்த யாக்கோபு அப்போஸ்தலன். "இச்சையானது கர்ப்பந்தரித்து, பாவத்தைப் பிறப்பிக்கும்" (யாக். 1:15) என்கிறார். எனவே பாவம் என்பது பிறப்பதற்கு, பரிசுத்தம் இல்லாத மனுஷனுடைய ஆவியும், சரீரமும் இசை

கிறது. இவ்விதமாக ஒரு மனுஷன் தன் ஆத்துமாவில் பாவம் உண்டு என்கிற நிலைக்கு வருவதற்கு முன், பாவமுள்ள அவன் ஆவி, அவன் சரீரத்தை ஏவ, சரீரம் அதற்குக் கீழ்ப்படிந்து, ஆத்துமாவில் பாவத்தை உண்டாக்குகிறது.

சவுலைப் பார்க்கிலும் தாவீது கனம்பண்ணப் பட்டபோது, பரிசுத்தமில்லாத சவுலுடைய ஆவி, தாவீதையும், அவனுக்கு அநுகூலமாக இருந்தவர்களையும், பகைக்கவும் கொல்லவும் அவன் சரீரத்தை ஏவிற்று. அவன் சரீரம் அதற்குக் கீழ்ப்படிந்து, தாவீதைக் கொல்ல வகைதேடிற்று. அன்றியும், தாவீதுக்கு அநுகூலமாயிருந்த குற்றமற்ற ஆசாரியர்களாகிய பரிசுத்தவான்களைக் கொல்லவும் செய்தது. இவ்விதமாக அவன் தன் ஆத்துமாவில் பாவம் உண்டென்பதை நிரூபித்தான். பின் அவன் ஆத்துமாவில் பாவம் பெருகினபடியால் அவன் அபிஷேகம் பண்ணப்பட்டவனாயிருந்தும், தேவனால் கைவிடப்பட்டவனாக கில்போவா மலையில் மரித்தான்.

அம்னோன் பாவமுள்ள தன் ஆவியினால் தன் சகோதரியுடன் பாவஞ் செய்ய தன் சரீரத்தில் தூண்டப்பட்டான். இதற்கு சந்தர்ப்பத்தை ஆராய்ந்து தேடி தந்திரமான யோசனை நிறைவேறும்படி பிரயத்தனம் பண்ணினான். இதை நிறைவேற்ற யோனதாப் அவனைப் பழக்கினான். இவ்விதமாக அம்னோன் பாவத்திற்குள்ளாகி, தன் ஆத்துமாவில் பாவம் உண்டென்று நிரூபித்தான்.

ஆகவே, விருந்தாகிய சந்தோஷத்தை அனுபவித்துக் கொண்டிருக்குங்கால், சற்றும் எதிர்பாராத நேரத்தில் கொல்லப்பட்டான்.

இவ்விதமாக இவர்களும் இவர்களைப்போல அன்றும், இன்றும் ஆயிரக்கணக்கான மக்களும் பரிசுத்தமில்லாத தங்கள் ஆவியினால் தங்கள் சரீரங்களில் பாவஞ்செய்யத் தூண்டப்பட்டு, அதற்கு இசைந்து தங்கள் ஆத்துமாக்களில் பாவம் உள்ளவர்களாகக் காணப்படுகின்றனர். இவ்விதமே பாவத்தைப் பிறப்பித்து, "பாவத்தின் சம்பளம் மரணம்" என்னும் இரண்டாம் மரணமாகிய அக்கினியும் கந்தகமும் எரிகிற கடலிலே நித்தியத்தில் பங்குபெற ஆயத்தமாகின்றனர். ஆகையால் சிந்தையில் பாவம் ஆரம்பிக்கும்போதே அதைக் கிள்ளிவிடுவீரேயாயின், இப்பெரும் நித்திய தண்டனையிலிருந்து தப்பிக்கொள்வீர்.

சிந்தையை சிறைப்படுத்தி (II கொரி. 10:5), சரீரத்தை அடக்கி, அனுதினமும் பாவத்திற்கு சாகப் பழகும்போது, சிந்தை ஆவியின் சிந்தையாக மாறி (ரோமர் 8:6), சரீரத்தின் அவயவங்கள் பரிசுத்தத்தை நடப்பிக்க தேவனுக்கு அடிமைகளாகின்றன (ரோமர் 6:19). இவ்விதம் ஆத்துமாவில் பாவம் இல்லாமல் ஆகலாம.

இயேசுவைக் குறித்துப் பேசும்போது, அவர் பாவம் இல்லாதவர் என்று பரி. யோவான் கூறுகிறார். சமாரியர் இயேசுவைத் தங்கள் ஊருக்குள் ஏற்றுக்கொள்ளாதபோது, சீஷர்கள் சமாரி

G.B. Sathyanesan, B

யாவை அக்கினியால் அழிக்கவேண்டும் என்று இயேசுவிடம் கூறினர். இத்தூண்டுதலுக்கு அவரது ஆவி இடங்கொடாது, அவர் சீஷர்களை அதட்டினது மாத்திரமல்ல, தன் சரீரத்தினுல் அப்படிச் செய்யாமல், இதனுல் தன்னைப் பாவஞ்செய்யாதவர் என்று நிரூபித்து தன் ஆத்துமாவில் பாவம் இல்லை என்பதை வெள்ளிடை மலையாக்குகிருர்.

அப்படியே கெத்சமனேயிலும் பேதுரு நூற்றுக்கு அதிபதியின் வேலைக்காரனைக் காதற வெட்டினபோது, இயேசு தன் ஆவியில் பழிவாங்கும் சுபாவம் இல்லாதிருந்தபடியால், பேதுரு தன் பட்டயத்தை உறையிலிடப் பண்ணினுர். இவ்விதமாகத் தன் சத்துருக்களின் கஷ்டத்தைக் காணக்கூடாத தன் பரிசுத்தமான ஆவியின் தூண்டுதலால், தன் கையினுல் அவன் காதைத் தொட்டு, சுகப்படுத்தி தன் சரீரமும் பரிசுத்தமானது (பாவஞ் செய்யாதவர்) என்று நிரூபித்து, தன் ஆத்துமாவில் பாவம் இல்லை என்பதை வெளிப்படுத்துகிருர்.

அன்றியும் சிலுவையில் தாங்கொண்ணு வேதனை அனுபவிக்கும்போது, தன் பரிசுத்தமான ஆவியினுல் தூண்டப்பட்டு, தன் வாயினுல் (சபித்து பாவஞ் செய்யாது), "பிதாவே, இவர்களுக்கு மன்னியும்" என்று சொல்லி, தன் சரீரம் பரிசுத்தமானது (பாவஞ்செய்யாதவர்) என்று நிரூபித்து தன் ஆத்துமாவில் பாவம் இல்லை என்பதைக் காண்பிக்கிருர்.

இவைகளை முன்னமே கண்ணுற்ற சேராபீன்கள், இவர் ஆவி, சரீர, ஆத்துமாவில் பரிசுத்தமானவர் என்பதை நிரூபிக்க, பரிசுத்தர், பரிசுத்தர், பரிசுத்தர் என்று மும்முறை கூறி முழங்குகின்றனர் (ஏசா. 6:3). ஆவி, ஆத்துமா, சரீரம் பரிசுத்தமாக்கப்படுவது என்பதை இன்னும் சிறிது நுட்பமாக ஆராயும்போது, எண்ணங்களிலும் (ஆவியில்); நோக்கங்களிலும் (ஆத்துமாவில்); கிரியைகளிலும் (சரீரத்தில்) பரிசுத்தமாயிருக்க வேண்டுமென்பது வெளியாகிறது. சிலர் கிரியைகளில் பரிசுத்தமாயிருந்து, எண்ணங்களைக் குறித்துக் கவலையற்றிருக்கின்றனர். சிலர் கிரியைகளிலும், எண்ணங்களிலும் பரிசுத்தமாயிருக்கக் கவலைப்பட்டு, நோக்கத்தின் பரிசுத்தத்தைக் குறித்துக் கவலையற்றிருக்கின்றனர். அதாவது, ஒருவனுக்கு ஒரு நன்மை செய்ய வேண்டும் என்ற எண்ணம் ஆவியின் மூலமாக உண்டாகி, சரீரத்தின் மூலமாக அந்த நன்மையை செய்கிறான் இந்த நன்மையை ஆத்துமாவிலிருந்து உண்டாகும் இரண்டுவித நோக்கங்களுடன் செய்யலாம். மற்றவர்கள் தனனைப் புகழவேண்டும் அல்லது அறிய வேண்டும் என்னும் நோக்கத்துடன் செய்வானேயாகில் அவன் நோக்கம் சரியில்லை. அதாவது, அவன் ஆத்துமா பரிசுத்தமடையவில்லை. ஆனால் அவன் அன்பினால் நிரப்பப்பட்டு, தன் வலதுகை செய்கிறதை இடதுகை அறியாதிருக்கவேண்டும் என்னும் நோக்கத்தோடு செய்வானேயாகில், அவன் ஆத்துமா பரிசுத்தமாக்கப்பட்டிருக்கிறது நோவாவின் காலத்தில் அழிக்கப்பட்ட ஜனங்களுக்கு இவ்வித பரிசுத்தம் இருக்க

வில்லை. அவர்களுடைய, "இருதயத்து நினைவுகளின் தோற்றமெல்லாம் நித்தமும் பொல்லாததே" என்று ஆதி. 6:5-ல் வாசிப்பதால் நாம் இதை அறிந்துகொள்கிறோம். ஆகவே ஓர் எண்ணத்தின் பின்னுகத் தோற்றம் (நோக்கம்-Purpose) என்று ஒன்றிருக்கிறது. அந்த நோக்கம் அல்லது தோற்றம் பரிசுத்தமாக்கப்பட வேண்டும். இவ்விதமான பரிசுத்தம் இயேசுவுக்கு இருந்தபடியால், "மனதுருகி" (மனமாகிய ஆவியில் எண்ணி) குஷ்டரோகியை சொஸ்தமாக்கினர் (சரீரத்தில் கிரியை செய்தார்). பின்பு தான் செய்ததை மற்றவர்கள் அறியாதிருக்கக் கட்டளை கொடுத்தார். தன் நோக்கமும் (ஆத்துமா) பரிசுத்தமானது என்று நிரூபித்தார். அன்றியும் ஜெப ஆலயத் தலைவனுடைய மரித்துப்போன மகளை எழுப்பியும், தாம் செய்ததை மற்றவர்கள் அறியாதிருக்கக் கட்டளை கொடுத்தும், தன் நோக்கமும் பரிசுத்தமானது என்று நிரூபித்தார்.

இவ்விதமாக, ஆவி, ஆத்துமா, சரீரத்தில் வெண்மையாக இருக்கும் இம்மன்னு, "உங்களை அழைத்தவர் பரிசுத்தராயிருக்கிறதுபோல, நீங்களும் உங்கள் நடக்கைகளெல்லாவற்றிலேயும் பரிசுத்தராயிருங்கள். நான் பரிசுத்தர் ஆகையால் நீங்களும் பரிசுத்தராயிருங்கள்" (1பேது. 1:15,16) என்று கூறி, நம்மையும் தம்முடைய பரிசுத்தத்திற்கு அழைக்கிறது. நாம் மனுஷருக்கு முன்பாக

பரிசுத்தராகக் காணப்படுவது மாத்திரமல்ல, அவருக்கேற்ற பரிசுத்தவான்களாகவும் (லேவி. 20:26), அவருடைய பரிசுத்தத்திற்குப் பங்காளிகளாகவும் (எபி. 12:10) இருக்க வேண்டுமென்பது நித்தியதேவனின் நோக்கமாகும். சாதாரணமாக மனுஷர்கள் மற்றவர்கள் உயர்வடைந்து தங்களைப் போலாவதை விரும்பமாட்டார்கள். ஆனால் நித்திய பிதா நாம் அவரைப்போல பரிசுத்தராக இருக்கவேண்டும் என்று விரும்புவது அவருடைய அளவு கடந்த அன்பைக் காட்டுகின்றதன்றோ!

அவருக்கு மணவாட்டியாக வேண்டியவர்களாகிய நாமும்கூட, இவ்விதமாக ஆவி, ஆத்துமா, சரீரத்தில் பரிசுத்தமாக்கப்பட வேண்டும் என்று விரும்பி, பரி. பவுலின் மூலமாக, "உங்கள் ஆவி ஆத்துமா சரீரம் முழுவதும், நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து வரும்போது குற்றமற்றதாயிருக்கும்படி காக்கப்படுவதாக" (1 தெச. 5:23) என்று கூறி, அவருடைய பரிசுத்தத்தை நாடும்படியாக நம் உள்ளத்தைக் கர்த்தர் எழுப்பிவிடுகிறார். அப்படி எழுப்பிவிடுவது மாத்திரமல்ல, "நான் உங்களை பரிசுத்தமாக்குகிற கர்த்தர்" (லேவி 20.8) என்று சொன்ன அவர், நம் ஆவி, ஆத்துமா சரீரத்தைப் பரிசுத்தப்படுத்த உண்மையுள்ளவராக இருப்பதாகவும் 1தெச. 5 23,24ல் வாக்குத்தந்து பூரண பரிசுத்தத்திற்கு நேராக நாம் செல்லும்படி உற்சாகப்படுத்துகிறார். ஆனால் இக்காலத்தில் இப் பெரும் சத்தியத்தைப் பல தேவனுடைய பிள்ளை

கள் அறியாது, பூரண பரிசுத்தமடைய முடியாது என்கின்றனர். அவர்கள் அவிசுவாசத்தையும், அவபக்தியையும் நிரூபிக்க, ரோமர் 7:19-ல் பரி. பவுல், "நான் விரும்புகிற நன்மையைச் செய்யாமல், விரும்பாத தீமையையே செய்கிறேன்" என்று சொல்வதைச் சுட்டிக்காட்டுகின்றனர். ஐயோ! பரிதாபம். அதே பரி. பவுல் ரோமர் 8:2-ல், "கிறிஸ்து இயேசுவினாலே ஜீவனுடைய ஆவியின் பிரமாணம் என்னைப் பாவம் மரணம் என்பவைகளின் பிரமாணத்தினின்று விடுதலையாக்கிற்றே" என்று சொல்வதையுங்கூட கவனிப்பார்களானால், அவர்கள் அவிசுவாசமும் அவபக்தியும் நீங்கி, இப்பெரும் பாதகத்திற்குத் தப்பித்துக்கொள்வார்களே! உலக மனுஷன் தன் ஞானத்தினால் பூமியின் புவிஈர்ப்பு விசையைக் (gravitational force) கடந்து விண்வெளிக்குச் சென்று அங்கு நடக்கிறானே, பாவமனிதன் தன் அறிவினால் இவ்விதம் செய்யக்கூடுமானால், தேவ கிருபையாலும், பரிசுத்தாவியானவரின் வல்லமையாலும், தேவ மனுஷராகிய நாம் பூமியிலிருந்து உண்டாகும் கண்களின் இச்சை, மாம்சத்தின் இச்சை, ஜீவனத்தின் பெருமையுமாகிய இம் மூன்று இழுப்பு விசைகளுக்கும் மேலாகச் சென்று உன்னதத்தில் ஜீவிக்கக்கூடும் என்பது எவ்வளவு ஆணித்தரமான சத்தியம்! ஆகவே பூரண பரிசுத்தத்தைக் குறித்துள்ள ஒரு சிறு அலை போன்ற அவிசுவாசமும் உம் இருதயத்தைத் தொடாதிருப்பதாக. நீர் எவ்விதம் விசுவாசிக்கிறீரோ அவ்விதமே உமக்கு நிறைவேறும். பூரண பரிசுத்தமடைய முடியாது என்று விசுவாசித்து,

'பரிசுத்தப்படுத்தும்' என்று ஜெபித்தால், நீர் பரிசுத்தப்படுவதில்லை. பூரண பரிசுத்தத்தைப் பெற்றுக்கொள்ளக்கூடும் என்று விசவாசித்தால் அப்படியே செய்ய உண்மையுள்ளவரும், அப்படிச் செய்வதாக வாக்குப்பண்ணினவருமாகிய பரிசுத்தர் உம்மைப் பரிசுத்தப்படுத்துவார். ஏனென்றால், "உன் விசுவாசத்தின்படி உனக்கு ஆகக்கடவது" என்று சொன்ன கர்த்தர், உம் விசுவாசத்தின் அளவுக்குத் தக்கபடியே செய்வார்.

இம்மன்னு வெண்மையாக இருந்தது மாத்திரமல்ல, அதன் நிறம் முத்துப்போல் இருந்ததாகவும் எண். 11:7-ல் காண்கிறோம். இம் முத்து பிரகாசமுள்ள ஒருவித பிசினைப்போல இருந்ததாகவும் ஆராய்ச்சியாளர் கூறுகின்றனர் ஆகவே இயேசுவுடைய ஜீவியத்திலும் அவர் வெண்மையாக பரிசுத்தராயிருந்தது மாத்திரமல்ல, முத்தைப்போல் பிரகாசமுடையவராகவும் இருந்தார். இப்பிரகாசத்தை 'முகக்களை' என்று சங். 104:15-ல் வாசிக்கிறோம். இம் "முகக்களை" என்னும் வார்த்தையின் உண்மையான பொருள், பரிசுத்தத்தினுல் உண்டாகும் பிரகாசம் என்பதாகும்.

மோசே கர்த்தரோடு சம்பாஷித்து அதாவது ஜெபித்து, ஜனங்களிடத்தில் இறங்கி வந்தபோது அவர் முகம் பிரகாசித்திருந்தது அவர் ஜனங்களோடு பேசும்போதும், அப்பிரகாசத்தினிமித்தம் ஜனங்கள் பயந்தபடியால் அவர் தம் முகத்தில் முக்காடு போடவேண்டியதாக இருந்தது (யாத். 34:

29. 32, 33). இக்காலத்திலும் சில பரிசுத்தவான்கள் ஆவியில் நிறைந்து ஜெபிக்கும்போதும், தேவனிடத்திலிருந்து தூதைப் பெற்று பிரசங்கிக்கும் போதும், அவர்கள் முகத்தில் பிரகாசம் இருப்பதாக மற்றவர்கள் கண்ணுற்று சாட்சி பகருவது சர்வ சாதாரணமே.

இயேசுவுடைய ஜீவியத்திலும் அப்படியே இருந்தது. "அவர் முகம் சூரியனைப்போல் பிரகாசித்தது. அவர் வஸ்திரம் வெளிச்சத்தைப்போல வெண்மையாயிற்று" என்று மத்தேயு (17:2) எழுதி, அவர் முத்தைப்போலப் பிரகாசமுடையவராக இருந்தார் என்பதை நிரூபிக்கிறார்.

அவர் வெண்மையும் பிரகாசமுமான முத்தைப்போன்ற மன்னுவாக முதல் முறை உலகத்தில் வந்து தம் இரத்தத்தினாலும், வசனத்தினாலும், பரிசுத்தாவியினாலும் பாவ மனுஷனைப் பரிசுத்தமாக்கிக் கொண்டிருக்கிறார். அத்துடன் எபே. 5:27-ல் வாசிப்பதுபோல, பிரகாசமாகிய மகிமையுள்ள சபையாக அவர் வருகைக்காக நம்மை ஆயத்தப்படுத்திக் கொண்டிருக்கிறார். இரண்டாம் முறை இம்மன்னுவாகிய இயேசு பூமிவரை வராது தாம் வெண்மையும் பிரகாசமுமாக்கின தமக்காக ஆவலுடன் காத்திருக்கும் பரிசுத்தவான்களுக்காக மத்திய ஆகாயத்தில் வருவார். அப்போது மேற்கூறியபடி வெண் மன்னுவைப் போலப் பரிசுத்தமாக்கப்பட்டு, பரிசுத்தவான்களின் நீதியாகிய வெண்மையும் பிரகாசமுமான

வஸ்திரத்தைத் தரித்த பரிசுத்தவான்கள் அவரது வல்லமையால் உயர்த்தப்பட்டு, மத்திய ஆகாயத்தில் அவருடன் சேர்ந்துகொள்வார்கள். ஆ! அந்த வெண்மையும் பிரகாசமும், இந்த வெண்மையும் பிரகாசமும், ஒன்றாக சேரும்போது எவ்வித மாமகிமை!

அதிகாரம் - IV

மன்னா உணவாவது எப்படி?

மன்னாவைக் குறித்து, "ஜனங்கள் போய் அதைப் பொறுக்கிக் கொண்டுவந்து, எந்திரங்களில் அரைத்தாவது உரல்களில் இடித்தாவது, பானைகளில் சமைப்பார்கள்; அதை அப்பங்களுமாகச் சுடுவார்கள்" என்று எண். 11:8ல் வாசிக்கிறோம் இவ்வசனத்தில் மன்னா புசிக்கப்படுவதற்காக எந்திரத்தில் அரைத்து அல்லது உரலில் இடித்து மாவாக்கப்பட வேண்டும் என காண்கிறோம். லேவியராகமம் 2-ஆம் அதிகாரத்தில் போஜனபலியைக் குறித்துப் படிக்கும்போது, தானியம மாவாக்கப்பட வேண்டும் என்று அறிகிறோம். போஜனபலி இயேசுவையும் காட்டுகின்றது என்பதை அறிவோமே. இந்த மன்னாவும், போஜன

பலிக்காகக் கொண்டுவரப்படும் காணிக்கையும் நொறுக்கப்பட்டு மாவாகிறதை ஏசாயா கண்டு. "கர்த்தரோ அவரை நொறுக்கச் சித்தமாகி, அவரைப் பாடுகளுக்குட்படுத்தினர்" (ஏசா. 53:10) என்று எழுதினர். இயேசு தேவசித்தம் செய்யும் பொருட்டாக, தன்னுடைய சித்தம் முழுவதையும் நொறுக்கப்படும்படி ஒப்புக்கொடுத்தார். வானுதி வானங்கள் கொள்ளக்கூடாதவரும், வானமும் பூமியும் உண்டாக்கப்படுவதற்கு முன்னும் மகிமையாக இருந்தவருமாகிய அவர், நொறுக்கப்பட்டு, மாவாகிய, பாலகனுக மாட்டுத் தொழுவத்தில் காணப்படுகிறுர். வானத்திலிருந்து அக்கினியை வரவழைத்து சமாரியரை அழிக்கக்கூடிய வல்லமையுள்ளவர். தேவசித்தம் செய்யும் பொருட்டாக, நொறுக்கப்பட்டு மாவாகி, சமாரியாவை விட்டுப் புறப்படுகிறுர். காலில்படிந்த தூசியால் பட்டணத்திற்கு ஆக்கினை உண்டாக்கக் கூடிய வல்லமையுள்ளவர். தேவசித்தம் செய்யும்படி நொறுக்கப் பட்டு. மாவாகி. கதரேனே பட்டணத்தைவிட்டு வெளியேறுகிறுர். பன்னிரண்டு லேகியோனுக்கு அதிகமான தூதர்களை (ஒரு லேகியோன் என்னும் எண் 6000 to 7000) வரவழைத்து கெத்சமனேயில் தன்னைப் பிடிக்க வந்தவர்களை அழிக்கக்கூடும் என்பதைத் தன் வாயால், "நான் இப்பொழுது என் பிதாவை வேண்டிக்கொண்டால், அவர் பன்னிரண்டு லேகியோனுக்கு அதிகமான தூதரை என்னிடத்தில் அனுப்பமாட்டாரென்று நினைக்கிறுயா? அப்படிச் செய்வேனுனல், இவ்விதமாய்ச் சம்பவிக்க வேண்டும் என்கிற வேதவாக்கியங்கள்

எப்படி நிறைவேறும்'' (மத். 26:53,54) என்று கூறுகிறார். இவ்வளவு வல்லமையுள்ள மன்னாவாகிய இயேசு பிதாவின் சித்தம் செய்யும்படி நொறுக்கப்பட்டு, மாவாகி, போர்ச்சேவகரால் கைகள் கட்டப்பட்டவராய் ஒன்றும் செய்யக் கூடாதவராக பிலாத்துவின் முன் நிற்கிறார்.

மன்னாவை மாவாக்கினபின் பானையில் வைத்து சமைப்பார்கள் என்று எழுதியிருப்பதாலும், அதன் ருசி தேனிட்ட பணியாரம் போல இருக்கும் என்று எழுதியிருப்பதாலும், பானையில் வேக வைத்து நாம் உண்டுபண்ணும் பணியாரம் போல செய்திருப்பார்கள் என்று எண்ண இடமுண்டு அத்துடன் ''அப்பங்களுமாகச் சுடுவார்கள்'' என்றும் வாசிக்கிறோம். இயேசு, ''ஜீவ அப்பம் நானே'' (யோவா. 6:48) என்று கூறி, இதைத் தெளிவாக்குகிறார். அன்றியும் அவர் தம்முடைய சரீரத்தை அப்பத்துக்கு ஒப்புமையாகப் பேசி, அப்பத்தை எடுத்துப் பிட்டு சீஷர்களிடத்தில் கொடுத்தார். இதிலிருந்து, இயேசு மன்னாவாக மாத்திரமல்ல, மன்னாவினாலுண்டாக்கப்பட்ட அப்பமாகவும் சுடப்பட்டார் என்பது விளங்குகிறது.

பானையில் வேகவைக்கப்படும் இம்மாவும், அப்பமாக சுடப்படும் மாவும் தீயின் மூலமாகத்தான் புசிப்பதற்கு தகுதியாகிறது. நம் மீட்பர் பேர்சுறிப்படி மாவாக்கப்பட்டது மாத்திரமல்ல, கல்வாரியில் சுடும் அக்கினி ஜுவாலையைக் கடந்த பின்பு மாத்திரமே நாம் புசிப்பதற்குத்

தகுதியானுர். மனுஷரால் கைவிடப்பட்டார். சூரியன் தன் அனுதாபத்தைக் காட்ட இருண்டது. பூமி தன் அனுதாபத்தைக் காட்ட அதிர்ந்தது. ஆனுல் பாவமின்றி தொங்கும் அவருக்கு அவ்விருளும். பூமியதிர்ச்சியும் தன் அக்கினியைப் பன்மடங்காக்குவதாகத் தோன்றியிராதோ! பிதாவும் இவரைக் கைவிட்டார். இவ்விதமாக உபத்திரமாகிய (எபி. 2:10) அக்கினியில் பிரவேசித்தார். இவ்வக்கினியின் சொலலோண்ணு (1பேது 4:12) உக்கிரத்திலிருந்து, ஜீவனை பிதாவிடத்தில் ஒப்படைக்கவே. தேவாலயத்தின் திரைச்சீலை மேல் தொடங்கி கீழ்வரைக்கும் இரண்டாகக் கிழிந்தது. இதற்குப் பின்பே பாவிகளாகிய நாம் மகா பரிசுத்த ஸ்தலத்திற்குள் பிரவேசிக்கும் சிலாக்கியத்தைப் பெற்ருேம். இவ்விதமாக மன்னுவாகிய இயேசு அககினிக்குள் கடந்து சென்றபடியால், ருசிகரமான ஆகாரமாகி, அவரை நாம் புசித்துப் பெலனடைந்து நித்திய ஜீவனை அடைவோம் என்கிற நம்பிக்கையில் வாழ உதவி செய்திருக்கிருர். மன்னு மாவைப் புசித்து இஸ்ரவேலர் தேவனேடு வாழ்ந்தது போல. மாவாககப்பட்ட இந்த இயேசுவைப் புசிப்பதினுல் நமக்கு நித்திய ஜீவன் உண்டென்று ஆணித்தரமாகக் கூறினுர். ஆம்! அப்படியே நாம் ஜீவனைப் பெற்று ஜீவிக்கிருேமே! ஆ! இப்மனுவிற்கும், இப்மன்னு மாவாகி நமக்கு ஆகாரமானதற்கும் ஈடாக நாம் என்ன பதில் செய்யக்கூடும்! வாழ்நாளெல்லாம் நன்றியோடு துதிப்போமாக.

இவ்விதமாகவே, நாமும் மற்றவர்களுக்கு ஆகாரமாக வேண்டுமென்று கர்த்தர் விரும்புகிறார். அப்படியாக வேண்டுமானால், தானியமாயிருந்த மன்னு நொறுக்கப்பட்டு, மாவாகி உபத்திரவமாகிய அக்கினியின் வழியாகக் கடந்தபின்பு மாத்திரமே ஆகாரமானது போலவும், இயேசுவும் நொறுக்கப்பட அக்கினி வழியாகக் கடந்தபின்பு மாத்திரமே நம்முடைய இரட்சிப்பைப் பூரணப்படுத்தக் கூடியவரானதுபோலவும், நாமும் உபத்திரவங்களின் வழியாக கடந்து சென்று நொறுக்கப்பட வேண்டும்.

பழைய ஏற்பாட்டிலும் மற்றவர்களுக்கு ஆகாரமாகத் திகழ்ந்த பல பரிசுத்தவான்கள் நொறுக்கப்பட்டதை அறிவோமே (உ-ம் யோசேப்பு, தாவீது). யோபின் ஜீவியத்திலுண்டான பாடுகளைத் தங்கள் ஆகாரமாகக்கொண்டு, தங்களைப் பெலப்படுத்தி தேவனுக்குள் நிலைநின்று தங்கள் ஜீவனைக் காத்துக்கொள்ளும் பல்லாயிரக் கணக்கானவர்கள் உலகில் உண்டு. இதற்குக் காரணம் அவர் நொறுக்கப்பட்டு, உபத்திரவப்பட்டதே ஆகும். அந்நொறுக்குதலைக் குறித்து, "நான் சுகமாய் வாழ்ந்திருந்தேன்; அவர் என்னை நருக்கி, என் பிடரியைப் பிடித்து, என்னை நொறுக்கி, என்னைத் தமக்கு இலக்காக நிறுத்தினார். .... நொறுக்குதலின்மேல் நொறுக்குதலை என்மேல் வரப்பண்ணினார்" (யோபு 16:12, 14) என்று கூறுகிறார்.

புதிய ஏற்பாட்டின் காலத்தில் நொறுக்கப்பட்டு, உபத்திரவமடைந்த பரி. பவுல் சபையாருக்கு ஆகாரமானூர். அவர் ஆகாரமாகி, மற்றவர்களுக்கு ஜீவனைகொடுத்த விதத்தை, "தேவன் அப்போஸ்தலர்களாகிய எங்களை மரணத்துக்குக் குறிக்கப்பட்டவர்கள் போலக் கடைசியானவர்களாய்க் காணப்படப்பண்ணினூர்; ....நாங்கள் கிறிஸ்துவினிமித்தம் பைத்தியக்காரர், ...இந்நேரம் வரைக்கும் பசியுள்ளவர்களும், தாகமுள்ளவர்களும், நிர்வாணிகளும், குட்டுண்டவர்களும், தங்க இடமில்லாதவர்களுமாயிருக்கிறோம்" (I கொரி. 4:9-11) என்று விளக்குகிறூர். அத்துடன் நிறுத்திவிடாது, தன்னுடைய உபத்திரவங்களின் மூலம் மற்றவர்களுக்கு ஆறுதல் உண்டாகும் என்று II கொரி. 1:4, 5 வசனங்களில் கூறி, 6-ஆம் வசனத்தில், "நாங்கள் உபத்திரவப்பட்டாலும் அது உங்கள் ஆறுதலுக்கும் இரட்சிப்புக்கும் ஏதுவாகும்" என்று கூறுகிறூர். மேலும், "மரணமானது எங்களிடத்திலும், ஜீவனுனது உங்களிடத்திலும் பெலன் செய்கிறது" (II கொரி. 4:12) என்று கூறுகிறூர். பரிசுத்த பவுலும், மன்னுவைப் போலவும், இயேசுவைப் போலவும் நொறுக்கப்பட்டு, அக்கினிக்குள் கடந்து அப்பமாகி மற்றவர்களுக்கு ஜீவனைக் கொடுத்ததை அறிவது நமக்கு வியப்பையும், ஆர்வத்தையும் கூட்டுகின்றதன்றோ! ஆகவே மற்றவர்களுக்கு ஆகாரமாகும்படியாக மனப்பூர்வமாக நொறுக்குதலுக்கும், உபத்திரவத்திற்கும் நம்மை நாமே கர்த்தரிடத்தில் ஒப்புக்கொடுப்போமாக.

தேவன் இஸ்ரவேலருக்கென்று நியமித்திருந்த பாலும் தேனும் ஓடுகிற கானானாகிய "குடியிருப்பு" தேசத்திற்குள் பிரவேசிக்கும் வரைக்கும், அவர்கள் மன்னாவைப் புசித்தார்கள் என்பதைப் பின்வரும் வாக்கியத்திலிருந்து அறிகிறோம். "இஸ்ரவேல் புத்திரர் குடியிருப்பான தேசத்துக்கு வருமட்டும் நாற்பது வருஷமளவும் மன்னாவைப் புசித்தார்கள்; அவர்கள் கானான் தேசத்தின் எல்லையில் சேரும் வரைக்கும் மன்னாவைப் புசித்தார்கள்". (யாத். 16:35)

ஆவிக்குரிய இஸ்ரவேலராகிய நம்முடைய குடியிருப்பும் பரலோகத்திலிருக்கிறது, என்பதை, "நம்முடைய குடியிருப்போ பரலோகத்திலிருக்கிறது" (பிலி. 3:20) என்று பரி. பவுல் எழுதுவதிலிருந்து அறிகிறோம். ஆகையால் நாமும் நம்முடைய குடியிருப்பாகிய பரம கானானாகிய பரலோக ராஜ்யத்தில் போய்ச் சேருமட்டும், நாள்தோறும் மன்னாவைச் சேர்க்க வேண்டியது அவசியமாகும்.

ஒரு சிலர் இம்மன்னாவைத் தங்கள் ஜீவியத்தின் ஆரம்ப காலத்தில் மட்டும் அதிகாலையில் தேடிக் கண்டடைந்து, புசித்து, ஆவிக்குரிய சுக பெலனுடன் ஜீவித்தனர். ஆனால் அநேக வருஷங்கள் கர்த்தரைப் பின்பற்றி, கானானைச் சமீபிக்கும் போது, தங்கள் பழைய அனுபவங்களை எண்ணி, திருப்தியடைந்து, தாங்கள் அதிகாலையில் கர்த்தரைத் தேடுவதில் கொஞ்சம் கொஞ்சமாகக் குறைவுபட்டுத் தங்கள் உள்ளான மனுஷனில் பெலவீனப்படுகின்றனர். தாங்கள் ஆதி அன்பில் இருந்த காலங்களில் வந்த சோதனைகளை ஜெயித்த பலர்,

பிற்காலத்தில் அச்சோதனைகளை ஜெயிக்க பெலன் அற்றவர்களாகத் தோல்வியடைந்திருக்கின்றனர். இவர்கள் அதிகாலையில் எழும்பிக் கர்த்தரைத் தேடாதிருந்ததே இதற்குக் காரணமாகும். இவ் விதமாகவே இக்காலத்தில் பல வருஷங்கள் கர்த்தரைப் பின்பற்றின சிலர் வெளியரங்கமான பின் மாற்றக்காரராகவும், சிலர் உள்ளான பின்மாற்றக் காரராகவும் காணப்படுகின்றனர். ஆனால் இஸ்ரவேலரைப் போல பரம கானானுக்குள் பிரவேசிக்கும் வரைக்கும் மன்னாவைப் புசிக்கவேண்டும் என்ற அறிவோடு மற்றும் சிலர் இப்பொழுதும் அதிகாலையில் இதைப் பொறுக்கிப் புசித்து தங்கள் ஆதி அன்பில் நிலைத்திருந்து, ஒவ்வொரு நாளிலும் பெலனடைந்து, சோதனைகளை ஜெயித்து பரம கானானுக்குள் எப்போது பிரவேசிக்கலாம் என்ற வாஞ்சையுடன் காத்திருக்கின்றனர்.

இஸ்ரவேலர் வனாந்தரத்தில் மன்னாவைப் புசித்து சுகம், பெலன், ஜீவன் அடைந்து பாலும், தேனும் ஓடும் குடியிருப்பு தேசமாகிய கானானுக்குள் பிரவேசித்தனர். அப்படியே நாமும் அவர் வருகையில் மறுரூபமாக்கப்படும் வரை அல்லது நம் ஓட்டத்தின் முடிவு மட்டும் நாள்தோறும் அதிகாலையில் இம்மன்னாவைப் பொறுக்கிப் புசிப்போமாயின் மாத்திரமே, இவ்வுலகில் சுகம், பெலன், ஜீவன் பெற்று, தேவ பிரசன்னமும், மகிமையுமுடைய குடியிருப்பு தேசமான பரம கானானாகிய பரலோக ராஜ்யத்தில் போய்ச் சேருவோம். ஆகவே நாள்தோறும் அதிகாலையில் இம்மன்னாவைப் பொறுக்கிப் புசிக்க ஜாக்கிரதையாயிருப்போமாக.

(பக். 99 + 32 = 131)

இதர வெளியீடுகள்

1.	சமாதானம்	— 0·50
2.	சோதனே	— 1·20
3.	ஜெபம்	— 1,00
4.	தேவசித்தம்	— 1.00
5.	15 முத்துக்கள்	— 1·50
6.	இயேசுவின் மேனி	— 1·00
7.	இரண்டாம் வருகை	— 1·00

பிரதிகள் கிடைக்குமிடம் :-

இலங்கை பெந்தெகொஸ்தே மிஷன்,

மஹபூபாளையம்,
மதுரை-625010.
போன் : 24892

அடையார்
சென்னை-600020.
போன் : 413641·

G.B. Sathyanesan, B.A.

1980

ஐந்தாவது வெளியீடு

விலை ரூ. 1—25

அச்சகம் :

சுவிசேஷகன் பிரஸ்,

20. வடுககாவல்கூட தெரு.

மதுரை—625001.